# தொடுவானம்

மாத இதழ் ● இதழ் 2 ● தனிச் சுற்றுக்கு மட்டும் தன்னார்வலர்களின் மேம்பாட்டுக்கான வழிகாட்டி




**எலான் மஸ்க்**
மாற்றத்துக்கான அறைகூவல்

**ஆண்ட்ரியா ஜபிரகோ:**
தொடர்ந்து கற்கும் ஆசிரியர்

## ஆசிரியர் என்பது வெறும் பணி கிடையாது...

# அது ஒரு வாழ்வியல்!

எஸ்.எஸ்.இராஜகோபாலன் பேட்டி

# நமக்கு மட்டுமான பத்திரிகையா!






## அரசுப் பள்ளிகளில்

**3-5 வகுப்புகளுக்கு ‘ஊஞ்சல்’**

**உயர் வகுப்புகளுக்கு ‘தேன் சிட்டு’**

**ஆசிரியர்களுக்கு ‘கனவு ஆசிரியர்’**

# தொடுவானம்

மாநிலத் திட்ட இயக்குநர்
**இரா.சுதன், இ.ஆ.ப.**
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

ஆசிரியர்
**க.இளம்பகவத், இ.ஆ.ப.**
சிறப்புப் பணி அலுவலர்

பொறுப்பாசிரியர்
**கே.கணேசன்**

வடிவமைப்பாளர்
**பி.ராஜன்**

இதழ் ஒருங்கிணைப்புக் குழு
**இரா.சொ.பாலமுருகன்**
**ஜரின் தங்கராஜ்**
**திவ்யா ஜெயராமன்**
**தி.கவியரசன்**

ஆலோசனைக் குழு
**ந.மாதவன்**
**ஆ.அந்தோணி சாமி**
**ரெ.சிவா**
**விழியன்**
**த.ரத்தின விஜயன்**
**மு.தாமோதரன்**
**கா.கணேசன்**

இதழ் அலுவலக முகவரி:
**இல்லம் தேடிக் கல்வித் திட்டம்**
மாநிலத் திட்ட இயக்ககம்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
டிபிஐ வளாகம்
சென்னை - 600 006

இதழாக்கம்:
**அருஞ்சொல் எடிட்**
சென்னை

அச்சாக்கம்:
**ரமணி பிரிண்ட் சொல்யூஷன்**
சென்னை

இதழ் சம்பந்தமான கருத்துகளையும், படைப்புகளையும் பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்: thoduvaanamitk@gmail.com



**06** ஆண்ட்ரியா ஜபிரகோ: தொடர்ந்து கற்கும் ஆசிரியர் - வசீகர ஆசிரியர்

**10** மொழி அறிவோம் - தமிழ் அழகு

**14** ஒரு சமூகத்தை மாற்றுவது எப்படி? ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

**18** ஏன், எப்படி, எவ்வாறு? பதில்கள் சி.ஜி.சீதா

**22** மாற்றத்துக்கான அறைகூவல் - எலான் மஸ்க்

**34** களத்திலிருந்து கேள்விகள்... ஆசிரியரிடமிருந்து பதில்கள்

**38** குரல்கள்... - களத்திலிருந்து

**44** ஜனநாயகமும் விடுதலையும் - ராமச்சந்திர குஹா

**48** அறிவொளி கருவூலம் - படக்கதை


அட்டை புகைப்படம் : **தேஜஸ்ரீ**

ஆசிரியர்

# புதிய பாதை... புதிய வெளிச்சம்!

தமிழ்நாட்டின் ஒவ்வோர் ஊரின் ஒவ்வொரு இல்லம் தேடிக் கல்வி மையத்திலும் கடந்த ஐந்து மாதங்களாக மாலைதோறும் ஒன்றரை மணி நேரம் குழந்தைகள் கல்வி கற்றுள்ளனர். இது இதற்கு முன்னர் நடந்திராதது. பாட்டு, விளையாட்டு, செயல்வழிக்கற்றல் எனப் பல்வேறு கற்பித்தல் வழிமுறைகள் மூலம் இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்கள் குழந்தைகளுக்குக் கல்வி மீது ஆர்வமூட்டி உள்ளனர். இல்லம் தேடிக் கல்வி இயக்கம் வரும் கல்வியாண்டிலும் தொடர்கிறது. புதிய கல்வியாண்டில் இல்லம் தேடிக் கல்வி இயக்கமானது, மேலும் பல புதிய இலக்குகளை வகுத்துக்கொண்டு புதிய பாதையில் பயணிக்க இருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு வகுப்பிலும் கற்றுக்கொள்ள வேண்டிய திறன்களை முழுமையாகக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவேளை ஒரு குழந்தை குறிப்பிட்ட திறனை அந்த வகுப்பில் அடையவில்லை என்றால், அடுத்த வகுப்பில் புதிய திறன்களோடு விடுபட்ட திறனும் கற்பிக்கப்பட வேண்டும்.

இப்படிக் குழந்தைகள் அடைய வேண்டிய கற்றல் திறன்களில் மிக முக்கியமான திறன்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை அனைத்துக் குழந்தைகளும் முழுமையாகக் கற்றுக்கொள்ளும் பல புதிய வழிமுறைகளை வரும் கல்வியாண்டில் பின்பற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு மாதத்தில் கணிதத்தில் கழித்தல் கணக்குகளை முழுமையாக அனைத்துக் குழந்தைகளும் கற்றுக்கொள்ளும் வண்ணம் கற்பிக்கப்போகிறோம். அதாவது ‘கழித்தல் மாதம்’ என்று அதற்குப் பெயரிட்டு, தொட்டு உணர்ந்து கழித்தல், படத்தைப் பார்த்து கழித்தல், எண்களைக் கழித்தல், ஓர் இலக்கக் கழித்தல், ஈரிலக்கக் கழித்தல், கடன் வாங்கி கழித்தல் என ஒவ்வொரு வாரத்தையும் ஒரு குறிப்பிட்ட கருத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள வைக்கும் வகையில் பல்வேறு விளையாட்டுகள், செயல்பாடுகள் மற்றும் வகுப்புகள் நடைபெறும். இதுபோன்று தமிழ், ஆங்கிலம், அறிவியல், சூழ்நிலையியல் போன்ற பாடங்களிலும் முக்கிய கற்றல் விளைவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாடத்திட்டங்கள் வகுக்கப்பட உள்ளன.

பள்ளிக்கூடத்தில் கற்பிக்கும் பாடங்களுக்கு ஏற்ற வகையில் இந்தச் செயல்பாடுகள் கற்றல் திறன்களை மேம்படுத்தும். இதன் தொடக்கமாக வாசித்தல் திறனை வளர்க்கும் விதமாக நாம் திட்டமிட்ட ‘ரீடிங் மாரத்தான்’ பெரிய வெற்றியையும், நல்ல பல புரிதல்களையும் நமக்குக் கொடுத்திருக்கிறது. இதன் வழி ‘இல்லம் தேடிக் கல்வி இயக்க’த்தில் பயிலும் 33 லட்சம் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் கதைகளைப் படிக்கிறார்கள். 33 லட்சம் குழந்தைகள் தினமும் ஒரு மணி நேரம் படித்தால் எத்தனை கோடி வார்த்தைகளைப் படிப்பார்கள்! இதைக் கணினியின் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மூலம் நாம் கணக்கிடுகிறோம். இதற்கெனத் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை கூகுள் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இதன்படி ‘கூகுள் ரீட் அலாங்’ (Google read along) செயலி வழியாக இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்கள் உதவியுடன் குழந்தைகள் பல கதைகளை வாசிக்கிறார்கள். கதைகள் குழந்தைகளின் கற்பனை உலகை விரிவுபடுத்தும். இது போன்ற ஒரு பெரும் முயற்சியை இதுவரை எந்த நாட்டிலும் செய்யவில்லை என்று கேள்விப்படுகிறோம். இன்னும் நிறைய இதன் மூலம் திட்டமிடுகிறோம். இல்லம் தேடிக் கல்வி இயக்கம் எல்லாவற்றிலும் ஒரு சாதனை படைக்கும்!


1098



சைபர்சிம்மன்

ஆண்ட்ரியா ஜபிரகோ (Andria Zafirakou). இந்தப் பெயர் பிரிட்டனைத் தாண்டியும் இன்று வெகு பிரபலம். ஏன் என்று கேட்டால், 'ஏ, யப்பா... அவருக்கு 35 மொழிகளில் பேசத் தெரியுமே!' என்று சொல்வார்கள். உடனே ஆண்ட்ரியா ஒரு பன்மொழி வித்தகராக இருக்க வேண்டும் என்ற எண்ணம் வேண்டாம். அதைவிட முக்கியமாக இத்தனை மொழிகள் தெரிந்திருப்பதை அவர் பெரும் திறனாக அல்லது பெருமிதமாகக் கருதுகிறார் என்றும்கூட நீங்கள் நினைத்துவிட வேண்டாம். லண்டன் பள்ளி ஒன்றின் ஆசிரியர் ஆண்ட்ரியா. மொழி அவருக்கு ஒரு கருவி. அவ்வளவுதான். அப்படியென்றால், ஆண்ட்ரியாவின் உண்மையான சிறப்புதான் என்ன?

உலகின் பழமையான நகரங்களில் ஒன்றான லண்டன் உலகின் அதிநவீனமான நகரங்களில் ஒன்றும்கூட. பல்வேறு நாட்டினரும், சமூகத்தினரும் வாழும் லண்டன் அதற்கேற்ப எல்லாக் காலங்களிலும் தன்னைத் தகவமைத்துவந்திருக்கிறது.

லண்டனில் சுமார் 250 மொழிகள் பேசப்படுகின்றன. லண்டனில் வசிக்கும் 98% பேர் ஆங்கிலம் நன்கு அறிந்தவர்கள் என்றாலும், பிரிட்டன் அரசு அங்கு கணிசமாக வாழும் வெவ்வேறு மொழியின ருக்கும் தம் சமூகத்தில் பிரதிநிதித்துவம் கொடுப்பதை முக்கியமாகக் கருதுகிறது. உதாரணமாக, லண்டன் மெட்ரோ ரயிலில் பயணிப்பதற்கான அட்டையைப் பெற நாம் முற்பட்டால், அங்குள்ள தொடுதிரையில் தமிழும் இடம்பெற்றிருப்பதை நாம் பார்க்கலாம்.

பிரிட்டன் ஆசிரியர்கள் தொடர்ந்து புதிது புதிதாகக் கற்றுக்கொள்வதிலும், மாணவர்களுக்கு எளிதாகக் கற்பிக்க உத்திகளைக் கண்டறிவதிலும் ஆர்வம் மிக்கவர்கள். தத்தமது ஆர்வத்துக்கும், அவர்கள் கற்பிக்கும் குழந்தைகளின் தேவைக்கும் ஏற்ப அவர்கள் கற்றுக்கொள்ளும் விஷயங்கள் அமையும். அப்படித்தான் ஆண்ட்ரியா தன்னுடைய பன்மொழித் திறனை வளர்த்துக்கொண்டிருக்கிறார்.

### குழந்தைகளே ஆசிரியர்கள்

இந்த இடத்திலேனும் ஆண்ட்ரியாவைப் பற்றி முழு அறிமுகம் கொடுத்துவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். அது அவருடைய உலகத்தை மேலும் புரிந்துகொள்ள நமக்கு உதவியாக இருக்கும்.

ஆண்ட்ரியாவும் உலகின் சிறந்த ஆசிரியர் விருதைப் பெற்றவர்தான். ஆண்ட்ரியாவைப் பொருத்த அளவில் அவருக்குக் குழந்தைகளே ஆசிரியர்கள். "ஆம், குழந்தைகள் எப்போதும் நமக்குக் கற்றுக்கொடுப்பவர்கள்; அது மட்டும் அல்லாது அவர்கள் கற்றுக்கொடுக்கும் பாடங்கள் என்றென்றைக்குமாக நம்முடன் நிலைத்திருக்கும்" என்கிறார். குழந்தைகளுடன் தன்னை நெருக்கமாக்கிக்கொள்வதற்காக ஆண்ட்ரியா அவர்களுக்கு சமைத்துத் தரவும், அழுக்காக்கிக்கொண்ட மாணவர்களின் துணிகளைத் துவைத்துத் தந்து அனுப்பவும்கூட தயங்குவது இல்லை.

மாணவர்களைத் தேடிச்செல்லும் ஆசிரியர் என்று ஆண்ட்ரியாவைக் குறிப்பிடலாம். இதுவே அவரது அணுகுமுறையாக

# ஆண்ட்ரியா ஜபிரகோ:
# தொடர்ந்து கற்கும் ஆசிரியர்



மட்டும் அல்ல; கற்பித்தல் கொள்கையாகவும் இருக்கிறது. அதாவது மாணவர்களிடம் சென்று, அவர்கள் உலகிற்குள் நுழைந்து, அதன் பின் அவர்களுக்குத் தேவையானதைத் கற்றுத்தருவது என்பதாகும்.

ஓர் ஆசிரியராக ஆண்ட்ரியா காட்டிவரும் ஈடுபாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும் எனில், பெரும்பாலான பள்ளிகளில் வழக்கமாகப் பார்க்கக்கூடிய காட்சியை நாம் கொஞ்சம் தலைகீழாகச் சிந்திக்க வேண்டியிருக்கும். பொதுவாக, பள்ளி முடிந்தால் என்ன நடக்கும்? பள்ளியைவிட்டு பிள்ளைகள் வெளியே வருவார்கள். அவர்களைப் பத்திரமாக அழைத்துச் செல்ல பெற்றோர் காத்திருப்பார்கள். ஆண்ட்ரியாவின் பள்ளியில் காட்சி மாறியிருக்கும். பள்ளி முடிந்ததும் மாணவர்களோடு வெளியே வந்து பேருந்தில் மாணவர்களை ஆண்ட்ரியா பாதுகாப்பாக ஏற்றிவிடுவார். பின்னரே அவர் தன் வீட்டுக்குச் செல்வார்.

### மொழி எனும் உறவுக் கருவி

சரி, ஆண்ட்ரியாவின் ஆர்வம் ஏன் பன்மொழிகளை அறிந்துகொள்வது நோக்கிச் சென்றது? இதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், லண்டனின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள பிரெண்ட் பகுதியை அறிந்துகொள்ள வேண்டும். இங்குள்ள ஆல்பர்டன் சமுதாய உயர்நிலைப் பள்ளியில்தான் ஆண்ட்ரியா ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

பிரிட்டன் தலைநகரான லண்டன் ஏற்கெனவே குறிப்பிட்டபடி இன்று பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும், சமூகங்களைச் சேர்ந்தவர்களும் வாழும் நகரம். உயர்கல்வி பயில்வதற்காக மாணவர்களாக வந்தவர்கள் முதல், உள்நாட்டுக் கலவரத்தால் அடைக்கலம் தேடி அகதிகளாக வந்தவர்கள் வரை பல்வேறு தரப்பினரும் லண்டனில் குடியேறி இருக்கிறார்கள். இவர்கள் பல மொழிகளைப் பேசுபவர்கள்.

லண்டனின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள பிரெண்ட் பகுதியானது, இப்படியான குடியேறிகள் அதிகம் நிறைந்த பகுதி. முப்பதுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசுபவர்கள் இந்தப் பகுதியில் நிறைந்திருக்கிறார்கள். எனவே, ஆண்ட்ரியா பணியாற்றும் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் பல்வேறு மொழிகளையும் பேசுபவர்களாக இருக்கின்றனர்.

அடிப்படையில் ஆண்ட்ரியா ஒரு கலை ஆசிரியர்; ஏனைய பாடங்களைப் போல கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை என்ற வருத்தம் அவருக்கு உண்டு. "உலகிலேயே சிறந்த ஃபேஷன் டிசைனர்களைத் தந்தது லண்டன். நாம் கலையைக் கற்பிக்கவில்லை என்றால், நாளை எப்படி அத்தகையவர்களை உருவாக்கிட முடியும்? கல்வி என்பது பள்ளிக்கூடங்கள் தங்கள் இலக்குகளை அடைவதற்கானது இல்லை; அடிப்படையில் கல்வி இரண்டு விஷயங்கள் தொடர்பானது: ஒன்று குழந்தைகள்; மற்றொன்று ஆசிரியர்கள்" என்று பேசுபவர் அவர்.

ஆக, மாணவர்களிடம் சென்றடைய ஓர் ஆசிரியராக ஆண்ட்ரியா கண்டடைந்த மிகச் சிறந்த வழி அவர்களுடைய தாய்மொழியில் அவர்களோடு உரையாடுவது ஆகும். "என்னதான் ஆங்கிலம் அவர்களுக்கு அத்துபடி என்றாலும், அது இங்கு வரும் பெரும்பான்மைக் குழந்தைகளுக்கு இரண்டாவது மொழிதான். அவர்களுடைய வீட்டில் பெற்றோரால் பேசப்படும் மொழியில்




நான் பேசுகையில் குழந்தைகள் என்னை அவர்கள் குடும்பத்தில் ஒருவராக உணருகிறார்கள். அவர்களுடைய உலகத்தில் என்னை அனுமதிக்கிறார்கள்" என்கிறார். இதற்காகவே 35 மொழிகளை அவர் பேசக் கற்றுக்கொண்டார். இதற்கு மேலும் கற்றுக்கொள்வதில் ஆர்வத்தோடு இருக்கிறார்.

### உறவுப் பாலம்

வகுப்பிற்கு வரும் மாணவர்களை வரவேற்க வணக்கம் சொல்லவும், 'சாப்பிட்டாயா?' போன்ற நல விசாரிப்புக்கும் அவர்களுடைய தாய்மொழியைப் பயன்படுத்துகிறார். இது மாணவர்களுடன் உறவை ஏற்படுத்திக்கொள்வது என்கிறார். ''முதலில் குழந்தைகளுடன் அவர்கள் அடையாளத்துடன், அவர்கள் சொந்த கலாசாரத்துடன், சொந்த வரலாற்றுடன் தொடர்புகொள்ள வேண்டும். பிறகு பாடம் நடத்தலாம்" என்கிறார்.

''பாடத்திட்டத்தைச் செயல்படுத்துவது, வகுப்பறையைக் கண்டிப்பாகப் பராமரிப்பது பற்றி எல்லாம் கவலைப்படுவதைவிட, முதலில் மாணவர்களுடன் உறவை ஏற்படுத்திக்கொள்வதே முதன்மையானது. குழந்தைகளை நெருக்கமாக உணர வைத்து, அவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களுக்கு எதில் ஆர்வம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். இந்த நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டால் மற்ற எல்லாம் தானாக நடக்கும்" என்கிறார்.

தன் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசுபவர்கள் மட்டும் அல்ல, பல்வேறு தரப்பட்ட பின்னணிகளிலிருந்தும் வந்தவர்கள் என்கிறார். "இந்த மாணவர்களில் பெரும்பாலானோர் ஏழ்மை நிலையில் வசிப்பவர்கள். அவர்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் போதாமைகளை நம்மால் கற்பனைசெய்துகூடப் பார்க்க முடியாது!" என்கிறார்.

வெவ்வேறு அறைகளில் பல்வேறு குடும்பங்கள் ஒன்றாக வசிக்கும் இட நெருக்கடி கொண்ட வீடுகளிலிருந்து வருபவர்களும், ஒரே குளியலறையையும் சமையலறையையும் பொதுவாகப் பயன்படுத்தும் நிர்பந்தத்தில் இருப்பவர்களும்கூட இருக்கிறார்கள். இந்தச் சூழலிலிருந்தெல்லாம் அவர்கள் எதிர்காலத்தில் விடுபட கல்வியே அவர்களுக்கான ஊன்றுகோல். அதை எவ்வளவு படைப்பூக்கத்துடன் கற்பிக்க வேண்டுமோ அவ்வளவு இலகுவாகவும் செய்திட வேண்டும் என்கிறார்.

குழந்தைகளின் பின்னணி அறிந்து செயல்பட வேண்டும் என்பதை அவர் ஆழமாக உணர்ந்ததாகச் சொல்லும் ஓர்












அனுபவம் நம்முருடன் மிக நெருக்கமாகப் பொருந்துவது ஆகும். ஒரு முறை, தன் வகுப்பில் நடுவே காணாமல்போய் திரும்பி வந்த ஒரு மாணவியிடம் அதற்கான காரணத்தைக் கேட்டபோது, வீட்டில் சமைக்க வேண்டும் என்றும் சுழற்சி முறையில் தங்கள் குடும்பத்திற்கான சமையல் நேரத்தில் சமைப்பதற்காகச் செல்வதற்காகவும் பதில் அளித்திருக்கிறார் மாணவி. ஆண்ட்ரியாவை இது உலுக்கியிருக்கிறது.

ஒவ்வொரு மாணவருக்கும் இப்படி ஒரு பின்னணி இருக்கலாம் என்பதாலேயே முதலில் அவர்களைப் பற்றி அறிந்துகொண்டு, அதன் பிறகே அவர்கள் சூழலுக்கேற்ப பாடங்களைச் சொல்லிக்கொடுக்கிறார் ஆண்ட்ரியா.

பிரிட்டனில் குழந்தைகள் வெகுசீக்கிரம் பெற்றோர்களின் அரவணைப்பிலிருந்து விடுபட்டுவிடுவார்கள். குழந்தைகளுக்கு அங்கு சுதந்திரம் அதிகம் என்பதுபோலவே இதனால் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அதிகம். அதில் முக்கியமானது போதைப் பழக்கம். தன்னுடைய மாணவர்கள் இத்தகைய வலைக்குள் சிக்கிவிடக் கூடாது என்பதில் அதிகமான கவனம் எடுத்துக்கொள்கிறார் ஆண்ட்ரியா. மாலையில் பள்ளி முடிந்ததும் மாணவர்கள் சரியாக வீடு நோக்கிப் புறப்படுகிறார்களா என்பதை உறுதிசெய்துகொள்ளவே வாகன நிறுத்தம் வரை வந்து நின்று அவர்களை அனுப்பிவிட்டு அவர் வீட்டுக்குப் புறப்படுகிறார்.

மாணவர்களின் கவனத்தை நல்ல திசையில் செலுத்த பல்வேறு குழுக்களையும் பள்ளியில் நடத்திவருகிறார். தேவை ஏற்படும் நேரங்களில் மாணவர்களின் இருப்பிடத்துக்கே சென்று பேசுகிறார்; பாடம் நடத்துகிறார்.

பல்வேறு கலாசாரப் பின்னணியைக் கொண்ட சூழல் சவாலானதாகப் பார்க்கப்படும் காலகட்டத்தில், ஆண்ட்ரியா இத்தகைய ஒரு பன்மைத்துவச் சூழலை வளர்த்தெடுக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதையும் கணக்கில் கொண்டுதான் அவருக்கு 'சிறந்த ஆசிரியர் விருது' வழங்கப்பட்டது. போர் அபாயச் சூழலில் சைப்ரஸிலிருந்து வெளியேறிய கிரேக்கப் பெற்றோருக்குப் பிறந்த அவர் வேறு எவரையும்விட இந்த உலகின் மகத்தான விஷயம் மானுடத்தின் அன்பு என்பதைத் துல்லியமாகவே உணர்த்துகிறார். வேற்றுமையைப் பேசுவர்கள் எவராயினும் அவருக்கு ஆண்ட்ரியா கொடுக்கும் பதில் அவர்களை நிலைகுலைந்திட வைக்கும்.

### என் மாணவர் என் பொறுப்பு

ஒரு பள்ளியில்தான் பணியாற்றுகிறார்; அரசுதான் கல்வியை வடிவமைப்பதில் பெரும் பங்காற்றுகிறது என்றாலும், அடிப்படையில் தன்னுடைய மாணவர்களுக்கு ஆசிரியரே முதன்மைப் பொறுப்பு என்று கருதுகிறார் ஆண்ட்ரியா. இப்படிச் சொல்வதோடு அவர் நிறுத்திக்கொள்ளவில்லை. தன் வழக்கமான சம்பளத்தில் குழந்தைகளுக்கு ஒரு பகுதியைச் செலவிடுவதோடு, சிறந்த ஆசிரியர் விருதோடு வந்த பரிசுத் தொகையையும் கல்விப் பணிகளுக்கே செலவிட ஒதுக்கிவிட்டார். 10 மில்லியன் டாலர் பரிசு தொகை அது. இந்திய மதிப்பில் சுமார் ஏழு கோடி ரூபாய். ஓர் ஆசிரியருக்கு அது பெரும் தொகைதான். ஆனால், ஆண்ட்ரியா அப்படிக் கருதவில்லை. "நான் இந்தப் பள்ளியால் உருவாகியிருக்கிறேன். குழந்தைகளால் உருவாகியிருக்கிறேன். கல்விதான் என் அடையாளம், கனவு எல்லாமே. இந்தப் பரிசு அந்தக் கனவுக்கும் அடையாளத்துக்குமானது!"

ஆண்ட்ரியா, தனது கற்றல் அனுபவம் மற்றும் கோட்பாட்டை விளக்கும் வகையில், ஒரு நல்ல நூலையும் எழுதியிருக்கிறார். அவரது வாழ்வை நமக்குச் சொல்வதுபோல இருக்கிறது அந்நூலின் தலைப்பு: 'இயன்றவர்கள் கற்பியுங்கள்' (Those Who Can, Teach). ■

# ஒருமை, பன்மை: குழப்பம் தேவையில்லை

டி.ஐ.அரவிந்தன்

ஒருமை, பன்மை தொடர்பாகச் சென்ற இதழில் சில கூறுகளைப் பார்த்தோம். ஒரு தொடரில் எழுவாய் (வினையைச் செய்பவர் அல்லது செய்வது) பன்மையில் இருந்தால், அதற்கான வினைச்சொல்லும் பன்மையில் இருக்க வேண்டும் என்பதைப் பார்த்தோம். **/விமலா புத்தகத்தை எடுத்தாள்./**

இங்கே புத்தகத்தை எடுப்பது விமலா என்னும் ஒரு நபர். ஒரு நபர் என்பது ஒருமை. எனவே எடுத்தாள் என்று வினைச்சொல்லும் ஒருமையில் வருகிறது.

**/விஜயாவும் பார்வதியும் கூடைப்பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்./**

விளையாடுதல் என்னும் வினையைச் செய்வது இருவர். எனவே, வினைச்சொல்லில் பன்மை வந்திருக்கிறது.

## திணை வேறுபாடு

அடுத்தபடியாக, ஒருமை பன்மையில் திணை வேறுபாட்டையும் கவனிக்க வேண்டும்.

அது என்ன திணை?

உயர்திணை, அஃறிணை எனத் திணை இரு வகைப்படும். மனிதர்கள், தெய்வங்கள் ஆகியோர் உயர்திணை. பிற உயிரினங்களும் உயிரற்றவையும் அஃறிணை.

**/முத்து நடந்து சென்றான்./**

**/வேணி பாட்டுப் பாடுகிறாள்./**

**/ஆசிரியை பாடம் நடத்துகிறார்./**

**/மாணவர்கள் அரட்டை அடித்துக்கொண்டிருக்கிறார்கள்./**

இந்த எடுத்துக்காட்டுகளில் முத்து, வேணி, ஆசிரியர், மாணவர்கள் ஆகிய சொற்கள் உயர்திணையைச் சேர்ந்தவை. எனவே அவன், அவள், அவர், அவர்கள் என்பதற்கு ஏற்ப, சென்றான், பாடுகிறாள், நடத்துகிறார், அடித்துக்கொண்டிருக் கிறார்கள் என 'ன்', 'ள்', 'ர்', 'கள்' என்று வினைச்சொற்கள் முடிகின்றன.

**/ஆடு நடந்து செல்கிறது./**

**/யானைகள் குளித்துக்கொண்டிருக்கின்றன./**

**/அலைகள் கரையில் வந்து மோதுகின்றன./**

ஆடு, யானைகள், அலைகள் ஆகிய சொற்கள் அஃறிணைச் சொற்கள். எனவே செல்கிறது, குளித்துக்கொண்டிருக்கின்றன, மோதுகின்றன என்று வினைச்சொற்கள் அமைகின்றன.

## பால் வேற்றுமை

அடுத்தபடியாக, ஒருமை பன்மையில் பால் வேற்றுமையையும் கவனிக்க வேண்டும்.

உயர்திணையில் ஆண் பால், பெண் பால், பலர் பால் என மூன்று வகைகள் உள்ளன.

ஆண், பெண் வேற்றுமையைக் குறிப்பவை ஆண் பால், பெண் பால் என்பது உங்களுக்குத் தெரியும். ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் என்றால், அது பலர் பால்.

அஃறிணையில் ஒன்றன் பால், பலவின் பால் என இரண்டு வகைகள் உண்டு.

உயர்திணையில் ஆணுக்கு அவன் என்றும் பெண்ணுக்கு அவள் என்றும் குறிப்பிடுவோம். பன்மையில் அவர்கள் என்று சொல்வோம். ஒரே ஒரு ஆணையோ, பெண்ணையோ மரியாதையாகக் குறிப்பிடுவதென்றால் அவர் என்ற பொதுச் சொல்லைப் பயன்படுத்தலாம். இதில் விளையாடினான், பேசினாள் என்று 'ன்', 'ள்' ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டியதில்லை.

**/விராட் கோலி தலைமைப் பொறுப்பிலிருந்து விலகினார்./**

**/பி.வி.சிந்து பதக்கம் வென்றார்./**

இங்கே ஆண், பெண் இருவருக்கும் மரியாதையாக 'அர்' விகுதி பயன்படுவதைப் பாருங்கள்.

உயர்திணையில் பன்மையில் ஆண், பெண் வேறுபாடு இல்லை. வந்தார்கள், போனார்கள், கலந்துகொள்வார்கள் என்று 'கள்' விகுதியைப் பயன்படுத்த வேண்டும்.

விகுதி என்றால் கடைசியில் வருவது என்பதை இந்நேரம் நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

அஃறிணையைப் பொறுத்தவரை வினைச்சொல்லில் ஆண், பெண் வேறுபாடு இல்லை.

ஆடு மேய்ந்தது, யானை குளிக்கிறது, மழை வரும் என்று சொன்னால் போதும்.

விலங்குகளிலும் பால் வேற்றுமை உண்டு என்றாலும், அவற்றுக்கான வினைச்சொற்களில் அது வெளிப்படாது.

**/ஆண் சிங்கம் தூங்குகிறது./**

**/பெண் புலி இரையைத் தேடுகிறது./**

**/கோழி சாப்பிடுகிறது./**

**/சேவல் கூவியது/**

- இப்படி எழுதலாம். அவன், அவள் என்னும் சொற்கள்




அஃறிணைக்குப் பொருந்தாது. செல்லப் பிராணிகளை மனிதர்களாகவே கருதி அவன், அவள் என்று சொல்வது விதிவிலக்கு.

உயர்திணையில் பன்மை வரும்போது வருகிறார்கள், பேசினார்கள் என்று எழுதுவோம். அஃறிணையில் பன்மை வரும்போது வருகின்றன, கத்தின, மேய்ந்துகொண்டிருந்தன என்று எழுத வேண்டும்.

உயர்திணையும் அஃறிணையும் சேர்ந்து வரும்போது எப்படி எழுதுவது?

**/மாணவர்களும் ஆடுகளும் மழையில் நனைகிறார்கள்./**

- இப்படி எழுத வேண்டும். அதாவது, உயர்திணையும் அஃறிணையும் சேர்ந்து வரும்போது வினைச்சொல்லில் உயர்திணைக்கான விதியையே பயன்படுத்தலாம்.

## செய்வினை செயப்பாட்டு வினை

இதுவரை ஒருமை, பன்மை தொடர்பாகப் பார்த்தவை எல்லாமே ஓரளவுக்கு உங்களுக்குத் தெரிந்திருக்கும். இவற்றில் சிறிது கவனமாக இருந்தால் குழப்பம் வராது; தவறும் வராது. ஆனால், செயப்பாட்டு வினையில் ஒருமை, பன்மை பயன்படும் விதத்தில் குழப்பத்துக்கான வாய்ப்புகள் அதிகம்.

ரமணி புத்தகத்தை வாங்கினான் - இது செய்வினை. ஆங்கிலத்தில் ‘ஆக்டிவ் வாய்ஸ்’ (Active voice).

புத்தகம் ரமணியால் வாங்கப்பட்டது - இது செயப்பாட்டு வினை. ஆங்கிலத்தில் ‘பாஸிவ் வாய்ஸ்’ (Passive voice).

இன்னும் எடுத்துக்காட்டுகளைப் பாருங்கள்:

**/தொழிலாளர்கள் மரங்களை வெட்டுகிறார்கள்./**

**/மரங்கள் தொழிலாளர்களால் வெட்டப்படுகின்றன./**

முதல் எடுத்துக்காட்டில் ரமணி, புத்தகம் இரண்டும் ஒருமை. இரண்டாவது எடுத்துக்காட்டில் மரங்கள், தொழிலாளர்கள் இரண்டும் பன்மை. எழுவாய், செயப்படுபொருள் ஆகிய இரண்டுமே ஒருமையாக இருந்துவிட்டால் செய்வினையிலிருந்து செயப்பாட்டு வினைக்கு மாறும்போது வினைச்சொல்லிலும் ஒருமையைப் பயன்படுத்திவிடலாம்.

எழுவாய், செயப்படுபொருள் ஆகிய இரண்டுமே பன்மையாக இருந்துவிட்டால் செய்வினையிலிருந்து செயப்பாட்டு வினைக்கு மாறும்போது வினைச்சொல்லிலும் பன்மையைப் பயன்படுத்திவிடலாம்.

எழுவாய், செயப்படுபொருள் ஆகிய இரண்டில் ஒன்று ஒருமையாகவும் இன்னொன்று பன்மையாகவும் இருக்கும்போது குழப்பம் வரும். இந்த எடுத்துக்காட்டைப் பாருங்கள்:

**/கலைக் குழுவினர் பாடலைப் பாடினார்கள்./**

இந்தத் தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது பாடல் என்பது எழுவாயாக மாறிவிடும். பாடல் என்பது ஒருமை. எனவே, வினைச்சொல்லில் ஒருமை வர வேண்டும்.

**/பாடல் கலைக் குழுவினரால் பாடப்பட்டது./**

இன்னொரு எடுத்துக்காட்டைப் பாருங்கள்:

**/கதீஜா பழங்களை வாங்கினாள்./**

இந்தத் தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது பழங்கள் என்பது எழுவாயாக மாறிவிடும். பழங்கள் என்பது பன்மை. எனவே, வினைச்சொல்லில் பன்மை வர வேண்டும்.

**/பழங்கள் கதீஜாவால் வாங்கப்பட்டன./**

இதில் பால் வேற்றுமையையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த எடுத்துக்காட்டைப் பாருங்கள்:

**/மீனா ஜான்சனை ஓட்டப் பந்தயத்தில் தோற்கடித்தாள்./**

இதைச் செயப்பாடு வினையாக மாற்றும்போது ஜான்சன் என்னும் சொல் எழுவாயாக மாறும். ஜான்சன் என்பது ஆண் பால். எனவே, வினைச்சொல்லிலும் ஆண் பால் விகுதியைப் பயன்படுத்த வேண்டும்.

**/ஜான்சன் மீனாவால் ஓட்டப் பந்தயத்தில் தோற்கடிக்கப்பட்டான்./**

இன்னொரு எடுத்துக்காட்டைப் பாருங்கள்:

**/முத்துலட்சுமி நண்பர்களை விழாவிற்கு அழைத்தாள்./**

இது செயப்பாட்டு வினையாக மாறும்போது நண்பர்கள் என்னும் சொல் எழுவாயாக மாறும். எனவே, வினைச்சொல் அதற்கேற்ப இருக்க வேண்டும்.

**/நண்பர்கள் முத்துலட்சுமியால் விழாவிற்கு அழைக்கப்பட்டார்கள்./**

**(குறிப்பு: செயப்பாட்டு வினை என்பது தமிழுக்கு இயல்பானதல்ல. எனவே, கூடியவரை அதைத் தவிர்ப்பது நல்லது.)**

## நினைவில் கொள்ள வேண்டியது

எழுவாய் (வினையைப் புரிபவர் அல்லது புரிவது) ஒருமையா, பன்மையா, ஆண் பாலா, பெண் பாலா, உயர்திணையா அஃறிணையா என்பதைப் பொறுத்து வினைச்சொல்லில் ஒருமை, பன்மை, ஆண் பால், பெண் பால் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.




# ஆங்கில வார்த்தைகளைத் தெளிவுபடுத்திக்கொள்வது எப்படி?

“எனது ஆங்கில மொழி குறித்த சந்தேகம் மிகவும் அற்பமானதாக இருக்க வாய்ப்பு உண்டு. இதற்கெல்லாம் யாரிடமாவது விளக்கம் கேட்டால் என்னை பற்றி அவர் கேவலமாக நினைத்துவிடக் கூடும் என்பது போன்ற எண்ணத்தையே நீக்கிவிடுங்கள்.”

ஜி.எஸ்.எஸ்.

சந்தேகம் எழும் ஆங்கில வார்த்தைகளை எப்படி தெளிவுபடுத்திக்கொள்வது? அகராதிகள் இதற்குக் கை கொடுக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட அகராதிகள் தேவைப்படும். இது செலவு அல்ல. ஆங்கிலத்தில் வளம் பெறுவதற்கான முதலீடு.

முதலில் ஆங்கில வார்த்தைகளுக்கான தமிழ் அர்த்தங்களைக் கூறும் அகராதி. இதில் இரண்டு வகையான அகராதிகளை வாங்குவது மேலும் நல்லது. ஒன்று எளிய வார்த்தைகளுக்கு மட்டுமே பொருளைக் கூறும் சிறிய அகராதி. ஆரம்ப கட்டத்துக்கு இது போதுமானது என்பதோடு, தேவைப்படும் ஆங்கில வார்த்தைக்கான பொருளை இதன் மூலம் எளிதில் கண்டுபிடித்துவிடலாம். மற்றொன்று பல பல பக்கங்களைக் கொண்ட, ஆங்கில வார்த்தைகளுக்கான தமிழ் அர்த்தங்களை கூறும் அகராதி. இதில் பல சொற்களுக்கான பொருட்களைத் தெரிந்துகொள்ளலாம் என்பதோடு ஒவ்வொரு வார்த்தையையும் பயன்படுத்தி எழுதப்பட்ட வாக்கியங்கள், அந்த வார்த்தையின் இலக்கணப் பின்னணி போன்றவையும் குறிக்கப்பட்டிருக்கும்.

சந்தையில் கிடைக்கும் பெரும்பாலான (ஆங்கிலம், தமிழ் மொழி தொடர்பான) அகராதிகள் மேலே உள்ளவைதாம். ஆனால், நமக்கு தெரிந்த தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கில வார்த்தைகள் எவை என்பதற்கான அகராதியும் அவசியம் வேண்டியிருக்கும்.

தமிழ்-ஆங்கிலம் அகராதிகள் குறைவாக உள்ளன. இந்த விதத்தில், ‘க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி’ பரிந்துரைக்கத் தக்கது.

அகராதிகளில் ‘A’ என்ற எழுத்தில் தொடங்கும் வார்த்தைகளிலிருந்து ‘Z’ என்ற கடைசி எழுத்தில் தொடங்கும் வார்த்தைகள் வரை வரிசையாகத் தொகுக்கப்பட்டிருக்கும். ஆனால், ‘A’ என்ற எழுத்திலேயே ஆயிரக்கணக்கான வார்த்தைகள் இருக்குமே! அப்போது அந்த வார்த்தையின் அடுத்த எழுத்து என்ன என்பது முக்கியம் பெறும். Add, Ace, Act ஆகிய மூன்று வார்த்தைகளை எடுத்துக்காட்டாக வைத்துக்கொண்டால் அவை Ace, Act, Add என்ற வரிசையில்தான் அகராதியில் இடம்பெறும்.

அகராதியை எளிதில் பயன்படுத்த வேண்டும் என்றால் 26 ஆங்கில எழுத்துகளையும் வரிசைக்கிரமமாக மனத்தில் கொண்டுவரும் திறன் வேண்டும். இதற்கு ஒரு விளையாட்டு போன்ற பயிற்சி உதவும்.

உங்களுக்குத் தெரிந்த ஒருவரிடம் இந்த 26 எழுத்துகளும் அடங்கிய பட்டியலைக் கொடுங்கள். இப்போது அவர் ஏதாவது ஓர் எழுத்தைக் கூறினால் அதற்கு முந்தைய இரண்டு எழுத்துகளையும் அதற்கு அடுத்த இரண்டு எழுத்துகளையும் நீங்கள் சேர்த்துக் கூற வேண்டும்.

எடுத்துக்காட்டாக ‘M’ என்று அவர் கூறினால் நீங்கள் ‘K, L, M, N, O’ என்று ஐந்து எழுத்துகளைக் கூற வேண்டும். ‘S’ என்று அவர் கூறினால் நீங்கள் ‘Q, R, S, T, U’ என்ற ஐந்து எழுத்துகளைக் கூற வேண்டும்.

பொதுவாக எந்த ஆங்கில எழுத்தைக் கூறினாலும் அதற்கு அடுத்து இடம்பெறும் எழுத்துகளை நாம் கூறிவிடுவோம். ‘M’ என்றால் ‘M, N, O, P, Q’ என்று கடகடவெனக் கூறிவிடுவோம். ஆனால், அதற்கு முந்தைய எழுத்துகள் அவ்வளவு சட்டென நினைவுக்கு வராது. அவற்றையும் நினைவில் கொண்டால் அகராதியைப் பயன்படுத்துவது எளிது.

நீங்கள் அகராதியைத் திறந்து பார்க்கும்போது அந்தப் பக்கத்தின் மேற்புறத்தில் ‘Talk’ என்ற வார்த்தை காணப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். உங்களுக்கு ‘Stop’ என்ற வார்த்தைக்கான பொருள் தேவைப்படுகிறது என்றால், அகராதியில் அதற்கு முன்புறமுள்ள பக்கங்களைத் திருப்ப வேண்டுமா, பின்புறம் உள்ள பக்கங்களைத் திருப்ப வேண்டுமா என்பது உங்களுக்குத் தெரிய வேண்டும், இல்லையா? அதற்குதான் மேற்படி பயிற்சி!

இந்தப் பயிற்சியை மேற்கொண்டால் சில நாட்களிலேயே எந்தெந்த ஆங்கில எழுத்துகள் ஓர் எழுத்துக்குப் பின்னாலும் முன்னாலும் இடம்பெறுகின்றன என்பது உங்களுக்குத் தெளிவாகத் தெரிந்துவிடும். உங்களிடம் கணினி இருந்தால் உரிய வலைத்தளங்களில் காணப்படும் அகராதிகளை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

ஆங்கிலத்திலிருந்து தமிழ், தமிழில் இருந்து ஆங்கிலம் ஆகிய இரண்டு விதங்களிலுமே சொற்களின் பொருட்களை இவற்றின் மூலம் அறிந்துகொள்ள முடியும். முன்பு நாம் குறிப்பிட்ட ஒவ்வோர் ஆங்கில எழுத்தின் முன்பின் எழுத்துகள் எவை என்பதைக்கூட, வலைத்தளங்களைப் பயன்படுத்தும்போது, நாம் நினைவில் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

உங்களுக்கு அருகிலேயே ஒரு நடமாடும் அகராதி இருந்தால் மேலும் நல்லது. அதாவது நன்கு ஆங்கிலம் தெரிந்த ஓர் உறவினரோ, நண்பரோ உங்களுக்கு இருந்தால் அவர்களிடம் உங்களது சில சந்தேகங்களைக் கேட்டு, தெளிவு பெறலாம். அந்த வார்த்தை தொடர்பான அதிகப்படி விவரங்களைக்கூட அவர் உங்களுக்கு அளிக்க வாய்ப்பு உண்டு.

முக்கியமாக, உங்கள் தாழ்வு மனப்பான்மையை விட்டொழிக்க வேண்டும். 'எனது ஆங்கில மொழி குறித்த சந்தேகம் மிகவும் அற்பமானதாக இருக்க வாய்ப்பு உண்டு. இதற்கெல்லாம் யாரிடமாவது விளக்கம் கேட்டால் என்னை பற்றி அவர் கேவலமாக நினைத்துவிடக் கூடும்' என்பது போன்ற எண்ணத்தையே நீக்கிவிடுங்கள். ஒரு விஷயத்தைக் குறித்து அறிந்துகொள்ள முற்படுவதில் (அதுவும் அது வேற்றுமொழி தொடர்பானதாக இருந்தால்) அவமானம் எதுவும் இல்லை. மாறாக, நமக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளாமல் அறியாமையிலேயே மூழ்கி இருப்பதுதான் நாம் மாற்றியமைத்துக்கொள்ள வேண்டிய விஷயம்.

## ● உள்ளே... வெளியே...

இப்போது ஆங்கிலத்தைக் கைவசப்படுத்துவதற்கான மற்றொரு வழிமுறையைப் பார்ப்போம். சென்ற இதழில் வீட்டுக்குள் கண்ணில்பட்ட பொருட்களின் பெயர்களையெல்லாம் ஆங்கிலத்தில் கூறிப் பார்க்க சொல்லி இருந்தேன்.

அடுத்ததாக வெளியில் செல்லும்போது கண்களில் தென்படும் பொருட்கள் மற்றும் அறிவிப்புகளை ஆங்கிலத்தில் கூறிப் பார்த்துக்கொள்ளுங்கள். சந்தேகம் இருந்தால் சரி பார்த்துக்கொள்ளத்தான் அச்சிடப்பட்ட அகராதி, வலைத்தளம் அகராதி, ஆங்கிலம் அறிந்த நண்பர் என்று பல வழிகள் உண்டே!

போக்குவரத்து சிக்னல்களை கவனிக்கிறீர்கள். உங்கள் எண்ண ஓட்டம் இப்படி இருக்கலாம். 'சிகப்பு - நில்!' என்பதற்கு ஆங்கிலத்தில் என்ன வார்த்தை? உட்கார் என்றால், 'sit' என்றும், நில் என்றால், 'stand' என்றும் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறீர்கள். எனவே, சிகப்பு சிக்னல் உணர்த்துவதை 'stand' என்று கூறலாமா? ஆனால், அர்த்தம் இடிக்கிறதே!

அடுத்து உள்ள ஆரஞ்சு நிற சிக்னல் எதைக் குறிக்கிறது என்பது கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது. 'தயார் நிலையில் இரு!' என்று கொள்ளலாமா அல்லது மெதுவாக நகரலாம் என்று பொருளா? அப்படியானால், 'Go Slow' என்று அதைக் குறிப்பிடலாமா?



- சாலையில் காணப்படும் போக்குவரத்து சிக்னல்களுக்கான ஆங்கில வார்த்தைகள் STOP, LISTEN, PROCEED.
- இங்கே துப்பாதீர்கள் என்பதன் ஆங்கில வாக்கியம் PLEASE DO NOT SPIT HERE.
- கரம் என்பது hand. ஐயம் எழ வாய்ப்புள்ள கை தொடர்பான வேறு சில உடல் பகுதிகள் குறித்தும் தெரிந்துகொள்வோமே! உள்ளங்கை என்றால் palm (பனை மரத்தையும் palm tree என்பதுண்டு). உள்ளங்கைக்குப் பின்புறம் உள்ள பகுதியை dorsal area என்பார்கள். சுண்டு விரல் என்றால் little finger. மோதிர விரல் என்றால் ring finger. நடுவிரலை middle finger என்பார்கள். ஆள்காட்டி விரலைக் குறிக்க index finger என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவோம். கட்டை விரலைக் குறிக்க thumb. ஒன்றை ஏற்றுக்கொள்வதையோ திருப்தி அடைவதையோ குறிக்க கட்டை விரலை உயர்த்திக் காட்டுவார்கள். இதை thumbs up என்ற குறிப்பிடுவார்கள். சுண்டுவிரலை பேச்சு வழக்கில் pinky என்றும் குறிப்பிடுவது உண்டு. கால் விரல்களை fingers என்று கூற மாட்டார்கள். அவற்றை toes என்பார்கள்.
- சிரம் என்பது skull அல்ல. Head என்பதுதான் தலை. Skull என்றால் மண்டையோடு.
- Smoke free area என்றால் புகைபிடிக்கக் கூடாத பகுதி என்று பொருள்.

அடுத்து, பச்சை வண்ண சிக்னல் 'செல்' என்பதைக் குறிக்கிறது. ஆங்கிலத்தில் இதற்கான சொல் 'Go' என்பது தெரிந்ததுதான்.

வேறோர் இடத்தில் 'இங்கே துப்பாதீர்கள்!' என்று போட்டிருக்கிறார்கள். துப்புதல் என்பதற்குச் சமமான ஆங்கில வார்த்தை எது? சட்டென்று விளங்கவில்லையே!

பேருந்தில் ஏறுகிறீர்கள். கரம் சிரம் புறம் நீட்டாதீர்கள் என்கிறது அறிவிப்பு. ஒவ்வொரு வார்த்தைக்கும் ஆங்கிலச் சொல்லை மனத்தில் கொண்டுவருகிறீர்கள். கரம் என்பது 'hand'. சிரம் என்றால் 'skull'. புறம் என்றால் வெளியே. நீட்டாதீர்கள் என்பதை ஆங்கிலத்தில் எப்படி சொல்வது? லேசாகத் தடுமாறுகிறதே...

வேறோரிடத்தில் ஆங்கிலத்தில் ஓர் அறிவிப்பு. 'Smoke free area'. ஒவ்வொரு வார்த்தைக்குமான தமிழ்ப் பொருளைக் கொண்டால் விபரீதமான பொருள் கிடைக்கிறது. 'இந்தப் பகுதியில் இலவசமாகப் புகைக்கலாம்'. ஆனால், அது தவறு என்பதும் புரிகிறது.

திரைப்படங்களின் தொடக்கத்தில், 'Smoking is injurious to health. Smoking causes cancer' ஆகிய வாக்கியங்களைத் தொடர்ந்து, 'புகைபிடித்தல் உடல் நலத்துக்குத் தீங்கிழைக்கும்; புகைப்பழக்கம் புற்றுநோயை உண்டாக்கும்' என்று இரு மொழிகளிலுமே அறிவிப்பதால் சிக்கல் இல்லாமல் இருக்கிறது.

ஆங்கில மொழியை எளிதாக நம் வசமாக்க மேலும் பல உத்திகள் உள்ளன. அவற்றை அடுத்தடுத்து அறிவோமே! ■



# ஒரு சமூகத்தை மாற்றுவது எப்படி?

## ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

இந்திரா

வெள்ளை நல்ல நிறம். ஆனால், ஆயிரம் ஆயிரம் வண்ணக் கனவுகளோடு உலகைச் சுற்றித் திரிய வேண்டிய சிறுமிகளை வெள்ளைப் புடவைக்குள் நாம் புதைத்துவிட்டு வெள்ளையை நல்ல நிறம் என்று எப்படிச் சொல்ல முடியும்?

வேறு வழியில்லை வித்யாசாகர், நம் சாத்திரங்கள் அவ்வாறுதான் இருக்கச் சொல்கின்றன என்றார்கள் கற்றறிந்த பண்டிதர்கள். ஒரு பெண் தன் கணவனை இழக்கும்போது, அவள் எதிர்காலத்தையும் சேர்த்து இழந்துவிடுகிறாள். இது நாம் வகுத்ததல்ல; நம் சான்றோர் வகுத்த விதி. இதுதான் நம் மரபு. இதுதான் நம் தர்மம். மீறுவது பெரும் பாவம்.

அந்தப் பெரும் பாவத்தை நிகழ்த்துவதற்கும் அது பெரும் பாவமல்ல என்று நிரூபிப்பதற்கும் எனக்கு ஒரு முழு வாழ்நாள் தேவைப்பட்டது. வங்கத்திலுள்ள ஹூக்ளி மாவட்டத்தில் 1820 ஆம் ஆண்டு பிறந்தேன். அப்பா தாகூர்தாஸ் பந்தோபாத்யாய், அம்மா பகவதி தேவி - இருவரும் எனக்கு வைத்த பெயர் ஈஸ்வர சந்திர பந்தோபாத்யாய்.

கிராமத்தில் பிறந்தாலும் கிராமத்திலேயே நான் முடங்கிவிடக் கூடாது என்று கருதிய அப்பா என்னை நகரத்துக்கு அழைத்துச்சென்று சம்ஸ்கிருதக் கல்லூரியில் சேர்த்துவிட்டார். வீதி விளக்குக்கு அடியில் அமர்ந்துதான் பெரும்பாலும் படித்தேன். உதவித்தொகை கிடைத்தது. கிடைக்காதபோது பகுதிநேரம் வேலை செய்தேன். சம்ஸ்கிருதம், இலக்கணம், இலக்கியம், தர்க்கவியல் என்று தொடங்கி பரந்தும் விரிந்தும் படித்துக்கொண்டே சென்றேன். நான் கற்றுக்கொண்ட அடிப்படைப் பாடம் ஒன்றுதான். கேள்வி கேள். எனவே கேட்டேன். கண்ணுக்குத் தெரியாத விதிகளுக்குப் பயந்துகொண்டு நம் கண் முன்னே நம் குழந்தைகளை ஏன் வதைக்க வேண்டும்? இன்றைய காலத்துக்குப் பொருந்தாத பழம்விதிகளை ஏன் மாற்றியமைக்கக் கூடாது?

பண்டிதர்கள் பதிலளிக்கவில்லை. எனவே, மக்களிடம் சென்றேன். மறுமணம் செய்துகொள்ளும் உரிமை பெண்களுக்கு வேண்டும். பெண் குழந்தைகளை முதியோர்களுக்கு திருமணம் செய்து கொடுக்கக் கூடாது. ஆண்களுக்கு இருக்கும் உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கும் வேண்டும். இதற்கெல்லாம் ஆணிவேர், கல்வி. பள்ளிக்கூடம் ஆண்களுக்கானது அல்ல, அனைவருக்குமானது. கல்வி ஒரு பெண்ணை சாத்திரங்களிலிருந்தும் சம்பிரதாயங்களிலிருந்தும் விடுவிக்கும். சமூகம் மாட்டிவிடும் சங்கிலிகளை உடைத்தெறிவதற்கான வலுவையும் அளிக்கும். தனக்கேற்ற வாழ்வைத் தேர்ந்தெடுத்து அமைத்துக்கொள்ளும் ஆற்றலை ஒவ்வொரு பெண்ணுக்கும் கல்வி அளிக்கும். அதை உறுதி செய்ய வேண்டியது நம் அனைவரின் கடமை என்று வீதி வீதியாகச் சென்று முழங்கினேன்.

பாறாங்கல்போல அசையாமல் நின்றுகொண்டிருந்தது சமூகம். என் வழியை

> “பள்ளிக்கூடம் ஆண்களுக்கானது அல்ல, அனைவருக்குமானது. கல்வி ஒரு பெண்ணை சாத்திரங்களிலிருந்தும் சம்பிரதாயங்களிலிருந்தும் விடுவிக்கும். சமூகம் மாட்டிவிடும் சங்கிலிகளை உடைத்தெறிவதற்கான வலுவையும் அளிக்கும். தனக்கேற்ற வாழ்வைத் தேர்ந்தெடுத்து அமைத்துக்கொள்ளும் ஆற்றலை ஒவ்வொரு பெண்ணுக்கும் கல்வி அளிக்கும்.”



# வித்யாசாகரின் கல்விச் சிந்தனைகள்

**வெ**ள்ளையர்கள் கெட்டவர்கள், அவர்கள் வாழ்க்கை முறை மோசமானது, அவர்கள் பண்பாடு மோசமானது, அவர்களிடமிருந்து வரும் எதுவொன்றும் எதிர்க்கப்பட வேண்டியதே என்னும் கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. நம்மிடம் இல்லாத பண்பாடா, நம் முன்னோர்கள் உருவாக்காத வாழ்க்கைமுறையா, நம்மிடம் இல்லாத இசையா, இலக்கியமா என்றெல்லாம் போலிப் பெருமைகள் பேசித் திரிவதிலும் எனக்கு ஆர்வமில்லை.

என் நாட்டில் போதுமான பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவா? இல்லை. இருக்கும் கொஞ்சநஞ்ச பள்ளிகளிலும் எல்லோரும் படிக்க முடிகிறதா? இல்லை. ஆண் குழந்தைகளைப் போல் பெண் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் இங்கே அதிகம் பேர் இருக்கிறார்களா? இல்லை. உயர்கல்வி படிக்க விரும்பும் ஒரு மாணவருக்கு இங்கே போதுமான வசதி வாய்ப்புகள் இருக்கின்றனவா? இல்லை.

எனில் நான் என்ன செய்ய வேண்டும்? என் நாட்டில் இன்னின்ன துறைகளில் இன்னின்ன குறைகள் இருக்கின்றன என்பதை நேர்மையோடு ஒப்புக்கொள்ள வேண்டும். அதன் பின் அந்தக் குறைகளைக் களைவதற்கு என்னென்ன வழிகள் இருக்கின்றன என்று ஆராய வேண்டும். அதன் பின் என்னாலானதைச் செய்ய முன்வர வேண்டும்.

வித்யாசாகர், என்ன இருந்தாலும் நீ வெள்ளைக்காரர்களோடு கூட்டுச் சேர்ந்து வேலை செய்வதை எங்களால் ஏற்க முடியாது என்று கோபித்துக்கொள்கிறார்கள் சக வங்காளிகள். படித்து முடித்து வெளியில் வந்ததும் கல்கத்தாவிலுள்ள ஃபோர்ட் வில்லியம் கல்லூரியில் 1841ஆம் ஆண்டு நான் ஆசிரியர் பணியில் சேர்ந்தேன். அதன் பின் பல்வேறு பொறுப்புகள் வகித்தேன். இதையெல்லாம் அவர்களால் ஏற்கவே முடியவில்லை. நான் என்ன செய்வேன்?

கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் நான் பற்றிக்கொண்டது எனக்காகவா? என் மக்களுக்காக அல்லவா? எனது வங்காளக் குழந்தைகளுக்குத்தானே வகுப்பெடுத்தேன்? நான் போராடித் திரட்டிக்கொண்ட அறிவுச்செல்வத்தை என் குழந்தைகளோடுதானே பகிர்ந்துகொண்டேன்? மேற்கா, கிழக்கா என்பது எனக்கு முக்கியமில்லை. நல்ல பண்புகள் எங்கிருந்து வந்தாலும் அவற்றை நான் வரவேற்பேன். நல்ல கல்வியை யார் அளித்தாலும் ஏற்பேன். நல்ல கல்விக்கூடங்களை யார் கட்டித்தந்தாலும் மகிழ்வேன். இந்தியரோ ஐரோப்பியரோ யாரோடும் இணைந்து பணியாற்றுவேன்.

எனது தாய்மொழியான வங்க மொழியை நான் நேசிக்கிறேன். வங்காளத்தில் பிறக்கும் ஒரு குழந்தை வங்க மொழியில்தான் கல்வி கற்க வேண்டும். வங்க மொழியில்தான் அக்குழந்தைக்கு ஆசிரியர் கற்பிக்க வேண்டும். வங்க மொழி வழியாகத்தான் கல்கத்தாவை, இந்தியாவை, உலகை அக்குழந்தைத் தரிசிக்க முடியும்.

அதற்காக வேற்று மொழியான ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல்களை நான் புறக்கணிக்கவோ எதிர்க்கவோ மாட்டேன். இந்தியா முன்னேறுவதற்கு ஓர் அந்நிய மொழி உதவும் என்றால் அம்மொழியை நான் எனதாக்கிக்கொள்வேன். அதை நமதாக்கிக்கொள்ள வேண்டும் என்பேன். சம்ஸ்கிருதம் போதும் அறிவியல் வேண்டாம் என்று ஒருபோதும் சொல்ல மாட்டேன்; இரண்டும் நமக்கு வேண்டும்.

என் குழந்தைகள் வரலாறு பயில வேண்டும். கணிதம் கற்க வேண்டும். இயற்கைத் தத்துவத்தில் தேர்ச்சிகொள்ள வேண்டும். அறிவியலும் அறவியலும் அரசியலும் பழக வேண்டும். ஆங்கிலம் மட்டுமல்ல, ஐரோப்பிய மொழிகளெல்லாம் தெரிந்துகொள்ள

மாற்றிக்கொண்டு வேறோர் உபாயத்தைக் கடைப்பிடித்தேன். எந்த மரபை, எந்தச் சம்பிரதாயத்தை, எந்த முன்னோர் வழக்கத்தை முன்வைத்து பெண் மறுமணத்தை அவர்கள் எதிர்த்தார்களோ, அதே மரபை, அதே சம்பிரதாயத்தை, அதே முன்னோர் வழக்கத்தை ஆராய்ந்து என் வாதங்களுக்கு வலுவூட்ட ஆரம்பித்தேன்.

உங்களுக்குத் தேவையான பகுதியை மட்டும் சுட்டிக்காட்டி நீங்கள் பெண்களின் முன்னேற்றத்தைத் தடுப்பீர்கள் என்றால் எனக்கான பகுதியை அதே பிரதியில் தேர்ந்தெடுத்து அவர்களை நான் உயர்த்துவேன் என்று 'தத்துவபோதினி பத்திரிகா' இதழில் எழுதினேன்.

இந்தியாவை அப்போது ஆண்டுகொண்டிருந்தது பிரிட்டிஷ் அரசு. எனவே, அவர்களோடு பேசலானேன். கணவனை இழந்த பெண் மறுமணம் செய்துகொள்வதைச் சட்டமாக்க வேண்டும் என்று விண்ணப்பித்தேன்.

பாறாங்கல் வானத்துக்கும் பூமிக்குமாக குதிக்க ஆரம்பித்து விட்டது. "நீ எப்படி கிறிஸ்தவர்களான ஆங்கிலேயர்களோடு

**“ பழமை என்பதால் ஒன்றை எதிர்க்க மாட்டேன்; நவீனம் என்பதாலேயே ஒன்றை ஏற்றுக்கொண்டுவிடவும் மாட்டேன். என் நாடு பழமையான நாடு. பழமைவாத நாடு அல்ல. இந்தியாவை ஒரு நவீன தேசமாக மாற்ற முடியும், மாற்ற வேண்டும். அதற்கு என்னாலானதைச் செய்வேன். எனவே, நான் உண்மையான இந்தியன். ”**

வேண்டும். அறிவொளிக்கு எல்லைகள் கிடையாது. எனவே தேடலை விரிவாக்கிக்கொண்டே செல்ல வேண்டும். தேடுவதோடும் திரட்டுவதோடும் நின்றுவிடக் கூடாது. பெற்றுக்கொண்ட அனைத்தையும் வீதிகளுக்குக் கடத்திச்செல்ல வேண்டும்.

வங்க மொழியில் அறிவியல் நூல்கள் இல்லையா? கணிதம் இல்லையா? உயிரியல் விளக்கங்கள் இல்லையா? அவை எம்மொழியில் இருந்தாலும் வங்கத்துக்கு மொழிபெயர்த்துக் கொண்டுவாருங்கள் என்பேன். உலகம் முழுக்கவுள்ள வளங்களையெல்லாம் தயக்கமின்றிக் கொண்டுவாருங்கள். இவ்வாறு செய்வதன் மூலம் என் மொழி வளருமே தவிர, செழுமை கொள்ளுமே தவிர, தேயாது. இந்த நம்பிக்கையில்தான் எழுதுவதோடும் பேசுவதோடும் நிறுத்திக்கொள்ளாமல் மொழிபெயர்ப்பிலும் ஆர்வத்தோடு ஈடுபடத் தொடங்கினேன்.

நான் பார்க்கும் இடங்களிலெல்லாம் குழந்தைகள் புத்தகங்களைத் தூக்கி வைத்துக்கொண்டு, வரி வரியாக, சொல் சொல்லாக மனப்பாடம் செய்துகொண்டிருக்கிறார்கள். நான் வகுப்பெடுக்கத் தொடங்கியபோது முதல் மாற்றத்தை இங்கிருந்துதான் தொடங்கினேன். என் மாணவர்கள் இனி பாடங்களைப் படிக்க வேண்டுமே தவிர மனனம் செய்யக் கூடாது. கொத்துக் கொத்தாகச் சொற்கள் அல்ல, அவற்றின் பொருளையே அவர்கள் உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

மாணவர்களை மட்டும் சொல்லிக் குற்றமில்லை. பாடங்கள் சுவையாக இருந்திருந்தால் நிச்சயம் அவர்கள் ஊன்றி வாசித்திருப்பார்கள். அறிவை வளர்க்கும் புத்தகங்களை மகிழ்ச்சியூட்டும் நடையில் எழுதக்கூடாது என்று ஏதேனும் விதிமுறை இருக்கிறதா என்ன? வறட்டுத்தனமாக மட்டுமே ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று சட்டமா என்ன? விலங்குகளை, தாவரங்களை, உயிர்களை, சமூக அமைப்புகளை, எண்களை, கவிதைகளை, கோட்பாடுகளைச் சுவையாகவும் விவாதப்பூர்வமாகவும் கற்றுக்கொடுக்க முடியும் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

ஒரு சமூகம் வெறும் அறிவாளிகளை உருவாக்க வேண்டுமா அல்லது அறிவுள்ள மனிதர்களையா என்றால் இரண்டாவதைத் தேர்ந்தெடுப்பேன். ஈசாப்பின் கதைகளை ஆங்கிலத்திலிருந்து வங்க மொழிக்கு நான் கொண்டுசென்றதன் காரணம் அக்கதைகளில் நிறைந்திருக்கும் அறம் சார்ந்த கருத்துகள். எந்த அளவுக்கு வாசித்து மகிழ முடியுமோ அதே அளவுக்கு இந்தக் கதைகளிலிருந்து வாழ்க்கைக்கான விழுமியங்களை ஒருவர் கற்றுக்கொள்ளவும் முடியும். பாடப்புத்தகங்கள் இப்படியல்லவா இருக்க வேண்டும்?

ஒரு ஆசியரின் பணி வகுப்பறையில் தொடங்குகிறது என்றாலும் அது அங்கேயே முடிந்துவிடுவதில்லை. மாணவர்களின் மனமாற்றம் அல்ல, சமூக மனமாற்றமே அவருடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். மாணவர் நலனை மட்டுமல்ல, சமூக நலனையும் சேர்த்தே அவர் நாட வேண்டும்.

தன் வகுப்புக்கு வரும் மாணவர்களின் எதிர்காலத்தை மட்டுமல்ல, பள்ளிகள் இல்லாத இடங்களிலுள்ள குழந்தைகளின் எதிர்காலம் குறித்தும் அவர் சிந்திக்க வேண்டும். அவர்களுக்கும் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திக்கொள்ள முடியுமா? அதற்கு என்னால் ஏதேனும் செய்ய முடியுமா? பெண் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப ஏன் பெற்றோர்கள் தயங்குகிறார்கள்? அவர்களை எப்படி மாற்றுவது? பழமை தட்டிப்போன நம் பாடப்புத்தகங்களை எப்படிப் புதுமைப்படுத்துவது? கடினமான கோட்பாடுகளை எப்படி எளிமையாகக் கொண்டுசென்று சேர்ப்பது? ஓயாமல் இப்படிக் கேள்விகளை எழுப்பிக்கொண்டே இருக்க வேண்டும். இப்படியெல்லாம் யோசிப்பதற்கான பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு நாம் வழங்க வேண்டும். ஆம், கற்க வேண்டியவர்கள் மாணவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களும்தான்.

கூட்டுச் சேர்ந்து நம்மையே எதிர்க்கலாம்? நீ உண்மையான இந்துதானா? நீ உண்மையான வங்காளிதானா? உண்மையான இந்தியன்தானா? நீயெல்லாம் ஒரு மனிதனா?”

புன்னகைத்தேன். என் மதத்தில் கசடுகள் இருக்குமானால் அதை நான் சுட்டிக்காட்டுவேன். எனவே, நான் உண்மையான இந்து. என் மக்கள் தவறிழைத்தால் திருத்துவேன். எனவே, நான் உண்மையான வங்காளி.

பழமை என்பதால் ஒன்றை எதிர்க்க மாட்டேன்; நவீனம் என்பதாலேயே ஒன்றை ஏற்றுக்கொண்டுவிடவும் மாட்டேன். என் நாடு பழமையான நாடு. பழமைவாத நாடு அல்ல. இந்தியாவை ஒரு நவீன தேசமாக மாற்ற முடியும், மாற்ற வேண்டும். அதற்கு என்னாலானதைச் செய்வேன். எனவே, நான் உண்மையான இந்தியன்.

சமூகத்தின் மையம் பெண். அவருக்கு இழைக்கப்படும் அநீதி சமூக அநீதியாகும். பெண்களை விலக்கி வைக்கும் கல்வி, கல்வியல்ல. பெண்களை விலக்கி வைக்கும் சீர்திருத்தம், சீர்திருத்தமல்ல. பெண்கள் சங்கிலிகளில் இருக்கும்வரை நம்மில் ஒருவருக்கும் விடுதலை இல்லை. இதை நாம் மனப்பூர்வமாக நம்புவதால் நானொரு மனிதன்.

ஜூலை 1856 இல் என் மனு சட்டமாக மாறியது. வங்காளம் கொந்தளிக்க ஆரம்பித்தது. எனக்கு எதிராக 30,000 பேர் திரண்டு கையெழுத்திட்டு அரசுக்கு எதிர் மனு அனுப்பி வைத்தனர். செல்லும் இடமெல்லாம் என்னை எதிர்த்தார்கள். காணும்போதெல்லாம் கண்டித்தார்கள்.

செயலாக மாறும்போது மட்டுமே ஒரு சொல் உயிர்பெற்று எழுகிறது. என்னுடைய ஒரே மகனை யாருக்குத் திருமணம் செய்து முடிக்க வேண்டும் என்னும் கேள்வியே எழவில்லை. கணவனை இழந்த பதின் வயது பெண்ணொருவரை மணமேடையில் ஏற்றி, அமர்த்தினேன். நான் விரிந்தால் என் சமூகம் விரியும். நான் கற்றால் என் சமூகம் ஒளி பெறும். என் சமூகம் ஒரு பெரும் பாய்ச்சலை நிகழ்த்தவேண்டுமானால் நான் ஓரடி முன்னால் எடுத்து வைத்தால் போதும்!

■



கே.கணேசன்

பதில்கள்
**சி.ஜி.சீதா**
குழந்தைகள் மனநல நிபுணர்

# வாங்க பழகலாம்!

**எஸ்.சிவகாமி,** சென்னை

**சில பிள்ளைகள், 'எனக்கு கணக்கு வராது, அறிவியல் வரவே வராது' என்று திட்டவட்டமாகச் சொல்கிறார்கள். இந்த விஷயத்தை எப்படிப் புரிந்துகொள்வது என்று பெற்றோர் கேட்கிறார்கள். இந்தப் பிரச்சினையை எப்படி எதிர்கொள்வது?**

எனக்குக் கணக்கு வரவே வராது, அறிவியல் தெரியவே தெரியாது... இதெல்லாம் பிடிக்கல! இப்படிச் சொல்லும் குழந்தைகளிடம் பிரச்சினை எங்கே தொடங்குகிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். ரொம்ப சின்ன வயதிலிருந்தே கணக்கில் சிக்கல் இருக்கிறதா; இல்லை வளர்ந்து வரும்போது சிக்கல் உருவானதா என்று பார்க்க வேண்டும். அதாவது, அவர்களுடைய திறன் அளவைக் கவனிக்க வேண்டும். சில குழந்தைகள் வாய்ப்பாடெல்லாம் சீக்கிரம் படித்துவிடுவார்கள். ஒருசில குழந்தைகளுக்கு எண்கள் மனதில் பதியவே பதியாது. உடனே திறனற்றவர்கள் என்று அர்த்தம் இல்லை. அப்படி ஏதாவது தடுமாற்றம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

சில குழந்தைகளுக்கு சில ஆசிரியர்கள் ஆகாது. இதில் இரண்டு பேரையுமே குறை சொல்ல முடியாது. அந்த டீச்சர் ஏன் கத்திக்கொண்டே இருக்கிறார்? குழந்தை அவர்களுடைய வகுப்பில் மட்டும் ஏன் சரியாக இல்லை? இப்படி என்ன பிரச்சினை என்று கண்டுபிடிக்க வேண்டும். 'பள்ளிக்கூடத்துல உனக்கு எல்லாம் சரியா இருக்கா?' என்று குழந்தைகளிடம் கேட்க வேண்டும். அதற்காக 'டீச்சரைப் பிடிக்கலை இல்லையா!' என்று கேட்கக் கூடாது. 'உனக்குப் பள்ளிக்கூடத்துல என்ன கஷ்டம்?' - இந்தக் கேள்வியைக் கேட்கும்போது, அடுத்த விஷயத்துக்கு இது பெரிய லீட் கொடுக்கும். மெல்ல மெல்லப் பேசி குழந்தையுடைய பிரச்சினையை அறிந்து ஆசிரியருக்குப் புரியவைக்க வேண்டும். குழந்தை சரிசெய்துகொள்ள வேண்டியதையும் அதற்கு எடுத்துச் சொல்ல வேண்டும். தன் உணர்வுகளை என்ன என்று அடையாளப்படுத்துவதற்குக் குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

அறிவியலும் கணிதமும் கொஞ்சம் கஷ்டமான, கவனத்தோடு படிக்க வேண்டிய பாடங்கள்தானே? பொதுவாகவே அதில் மனது அவ்வளவு ஈடுபடாது. அதைப் பிடிக்க வைப்பது மாதிரி விஷயங்களை நாம்தான் உருவாக்க வேண்டும். அந்தக் குழந்தைக்கு மன அழுத்தம் மாதிரி வேற ஏதாவது பிரச்சினை இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும்.

பிரியம் இல்லாத ஒரு பாடத்தை எடுக்கும்போது, சின்னச் சின்ன

போர்ஷனாகக் கொடுத்து, அதை அந்தக் குழந்தையைப் படிக்க வைத்து, இப்படியே மேலும் மேலும் ஊக்கப்படுத்தலாம். அறிவியலை பல விதங்களில் கற்றுக்கொடுக்கலாம். யூடியூப் வீடியோஸ் ஓர் உதாரணம். உதாரணமாக, 'தண்ணீரை எப்படி வேகமாகக் கொதிக்க வைப்பது; அதன் மூலம் காஸை எப்படி சேமிப்பது?' இப்படி சின்னச் சின்ன வாழ்வியல் விஷயங்கள் மூலமாகக் குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுக்கலாம்.

ஒரு செடிக்கு அருகில் நின்றபடி, 'செடி ஏன் பச்சையா இருக்கு... அது எப்படி பச்சையாகுது? மரம் செடிகளால நமக்கு என்னென்ன பயன்கள்?' என்று கேட்டு சுற்றுச்சூழல் தொடர்பான பாடங்களைச் சொல்லிக் கொடுக்கலாம். அதாவது பயிற்சி முறைகளில் வித்தியாசம் காட்ட வேண்டும். கற்பனையை வளர்க்க வேண்டும். இப்படி முயற்சித்தால் குழந்தைகளுக்கு அறிவியலும் இஷ்டப்பட வாய்ப்பிருக்கிறது. கணக்கும் இதே மாதிரிதான்.

**சுஜிதா,** செங்கல்பட்டு.

**மேல் வகுப்புக்கு (+1, +2) போகும்போது எந்த பாட வகுப்பில் சேர்வது, அதற்கு மேலே என்ன படிக்கலாம் என்றெல்லாம் கேட்கும் மாணவர்களுக்கு எப்படி முறையான பதில் சொல்லலாம்?**

அடுத்து என்ன படிக்கலாம்? இது கொஞ்சம் கஷ்டமான கேள்வி. இதை ஒவ்வொரு குழந்தையும் அவர்கள் ஆசிரியர்கள்கூட உட்கார்ந்து 9ஆம் வகுப்பிலிருந்தே திட்டமிட வேண்டும். 'நீ டாக்டருக்குப் படி, இன்ஜினீயருக்குப் படி' என்று அப்பாவும் அம்மாவும் தங்களுடைய கனவைக் குழந்தைகள் மீது திணிக்காமல் குழந்தைகளுக்குக் கொஞ்சம் சுதந்திரம் கொடுக்க வேண்டும். 'ப்ளஸ் ஒன், ப்ளஸ் டூவுக்கு அப்புறம் நீ இன்ஜினீயரிங் எடுக்கறியோ, டாக்டராக ஆகறயோ அது இருக்கட்டும். இப்ப அறிவியல், கணக்குல எல்லாம் நீ ஆர்வமா இருந்தா, அதுல கவனம் செலுத்தி ப்ளஸ் டூவை நல்லபடியா முடி. அப்புறம் நல்ல கோர்ஸ்ல சேர்ந்துக்கலாம்!' என்று சொல்லலாம். சில குழந்தைகள் ரொம்பத் துல்லியமாக 'காமர்ஸ்தான் வேணும்' என்று சொல்வார்கள். அந்த மாதிரி குழந்தைகளை அவர்கள் கேட்கும் படிப்பில் சேர்த்துவிடலாம்.

**கிரேசி,** மயிலாடுதுறை.

**சக மாணவர்களுடன் பழகும் முறைகளைப் பற்றி எப்படி சொல்லிக் கொடுப்பது? பள்ளிக்கூடத்திலேயே முரட்டுத்தனமாக நடந்துகொள்ளும் மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களை எப்படி அணுகுவது என்ற கேள்விக்கு வழிகாட்டுங்களேன்!**

வலிமை உள்ளவன் எளிமையானவனை மிரட்டுவதைத்தானே 'முரட்டுத்தனம்' என்கிறீர்கள்! சரி, அதுபோன்ற குழந்தைகளை எப்படி எதிர்கொள்வது? அவர்களிடம் அடி, உதை வாங்கிக்கொண்டு வர வேண்டாம்; அவர்களை அடிக்கவும் வேண்டாம்; ஆனால், 'என்னைப் பார்த்து இப்படிச் சொல்லாத' என்று உறுதியாகச் சொல்ல கற்றுக்கொடுக்க முடியும். 'எனக்கு இது பிடிக்கும், பிடிக்காது' என்று குழந்தைகள் மென்மையாகவும் அதேசமயம் உறுதியாகவும் சொல்லக் கற்றுக்கொடுக்கலாம்.

குழந்தைகள் அவர்களுடைய உணர்வுகளை அடையாளப்படுத்துவது ரொம்பவும் அவசியம். அது நிறையப் பெற்றோர்களுக்கே தெரியாது என்பது நம்முடைய சமூகச் சூழலின் துர்பாக்கியம். எனக்கு எப்போது கோபம் வருகிறது, எனக்கு எது சந்தோஷம் தருகிறது, எனக்கு எப்போது துக்கம் இருக்கிறது, இப்போது நான் என்ன உணர்றேன்... இதையெல்லாம் அவரவர் கண்டுபிடிக்க வேண்டும். கோபம் வருகிறது என்றால், உடனே போய் அடிக்கக் கூடாது; கோபம் இருக்கிறது... அவ்வளவுதான். அதை வேண்டுமானால், பேப்பரில் எழுதி, கிழித்துப் போட கற்றுக்கொடுக்கலாம். அதைப் பற்றி யாரிடமாவது பேசித் தணித்துக்கொள்ளலாம். ஆனால், அதை அடக்கக் கூடாது. எதிர்மறை எண்ணங்களை நாம் அடக்க அடக்க உடலும் பாதிக்கப்படும். அவை வேறு விதமாக வெளிப்படும்.

இந்தக் கேள்வியில் நான் மிக முக்கியமாக இன்னொரு விஷயத்தையும் சொல்ல ஆசைப்படுகிறேன். எல்லோரிடமும் அன்பு காட்ட பழக வேண்டும். அது அவ்வளவு எளிதானது அல்ல. ஆனால், குறைந்தபட்சம் யாரையும் வெறுக்காமலும் தாக்காமலும் இருக்க நாமும் பழக வேண்டும்; குழந்தைகளுக்கும் பழக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது சில நேரம் நம் அன்பையோ, நாம் எதிர்ப்பு காட்டாமல் இருப்பதையோ பலகீனம் என்று எண்ணி சில பேர் தாக்க வருவார்கள் என்பதும் உண்மை. சரி, அத்தகைய சூழல் எழுந்தால் என்ன செய்வது? புத்தர் ஒரு பாம்புக்குச் சொல்வாரே... 'நீ யாருக்கும் தீங்கு செய்யாதே!' என்று; அந்தக் கதையை நினைவுகூருங்கள். கொஞ்ச நாள் கழித்து அந்தப் பாம்பு வந்து, 'என்னைக் கல்லெடுத்து அடிக்கிறாங்களே!' என்று புத்தரிடம் சொல்லும். அப்போது அவர் சொல்வார்... 'நான் உன்ன தீங்கு செய்ய வேண்டாம்னுதான் சொன்னேன். உன்னைப் பாதுகாத்துக்க வேண்டாம்னு சொல்லலையே... புஸ் புஸ்னு சத்தம் வருதில்லே... அதைப் பயன்படுத்து!' அதுபோல எதிர்கொள்ள நம் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். 'நம்முடைய பர்சனல் ஸ்பேஸ்னு ஒண்ணு இருக்கு. அதுல நமக்குன்னு சில எல்லைகளும் வகுத்துக்கணும்!' என்று சொல்ல வேண்டும்.

பெரியவர்களுக்கே இது ஒரு பிரச்சினைதான். 'உன் சம்பளம் எவ்வளவு' என்று ஒருவர் கேட்டால், விருப்பமில்லை என்றால் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. 'சாரிங்க, உங்களுக்கு அது அவசியம் இல்லை' என்று தைரியமாகச் சொல்ல வேண்டும். பொதுவாக நம் ஊரில் தயங்காமல் கேட்கப்படும் 'என்ன ஆளுங்க நீங்க?' என்ற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லத் தேவையில்லைதானே? அதையும் ரொம்ப பொலைட்டாக நோகடிக்காமல் சொல்லலாம். 'இது எனக்கான ஒரு ஸ்பேஸ். இங்கே வர்றதுக்கு உங்களுக்கு உரிமை இல்லை. தயவுசெய்து என்னைக் காயப்படுத்தாதீங்க!' இப்படி தைரியமாகச் சொல்லலாம்!


இந்த விஷயத்தைக் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும். 'உன்னை யாராவது பள்ளிக்கூடத்துல காயப்படுத்துற மாதிரி பேசினா, 'இங்க பாரு... நீ பேசுறது பிடிக்கல. இப்படியே நீ பேசினா வீட்ல சொல்ல வேண்டி வரும். தயவுசெய்து இப்படி பேசாதே என்று சொல்!' என்று சொல்லிக்கொடுக்க வேண்டும். 'கொஞ்சம் தூரத்துல நின்னு, ரொம்ப மென்மையா சொல்லிட்டு வா' என்று சொல்லிக்கொடுக்க வேண்டும். அதாவது, பிஸிக்கல் ஸ்பேஸ் பராமரிக்கச் சொல்லிக் கற்றுக்கொடுக்க வேண்டும். இதையெல்லாம் ஒரு மாதிரி வகுப்பு மூலமாகவே குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கலாம்! ■

**இந்தப் பகுதியில் கூறப்படும் ஆலோசனைகள் பொதுவான கருத்துகளே. தனிப்பட்ட முறையில் அவரவருக்கு இருக்கும் பிரச்சினைகளைப் பொருத்து அதற்கான தீர்வுகள் மாறுபடலாம்.**

# ஆடு புலியாட்டம்



3 புலிகள்



**அ.கா.பெருமாள்**

கோயில்களின் பிரகாரங்களிலும் கோயிலின் உள்பகுதி வாசல் படிகளிலும் ஆடு புலி ஆட்டத்தின் வரைபடம் கொத்தப்பட்டிருப்பதை இப்போதும் பார்க்க முடியும். கோயில் பணியாளரும் காவலரும் விளையாடுவதற்காக இது அமைக்கப்பட்டது. நண்பகல் பூசை முடிந்து கோயில் முன்கதவு மூடப்பட்ட பிறகு கோயிலின் உள்பகுதியில் காவல் இருப்பவரும் பிற பணியாளர்களும் இந்த விளையாட்டை விளையாடி காலத்தைக் கடத்தி இருக்கின்றனர். காட்டுப் பகுதிகளில் நிழல் உள்ள மரங்களின் கீழ் பாறைகளிலும் மண்டபங்களிலும் இந்த வரைபடம் வரையப்பட்டிருப்பதைப் பார்க்க முடியும்.

ஆடு புலி ஆட்டம் என்ற இந்த விளையாட்டை 'நாயும் புலியும்', 'புலிக் கட்டம்' என்றும் சொல்கிறார்கள். இதற்கு 'பதினைந்தாம் புலி' என்ற பெயரும் உண்டு. இந்த விளையாட்டைக் கர்நாடகத்தில் 'சிங்கமும் ஆடும்' என்று சொல்லுவார்கள். சங்க காலத்தில் 'வங்க வரிப்பாறை சிறுபாடு' என்று கூறுவது இந்த விளையாட்டைத்தான் எனச் செங்கைப் பொதுவன் குறிப்பிடுகிறார்.


மூன்று கட்டங்களை உடைய நீண்ட கூம்பு வடிவம்.. அதன் குறுக்கே இரண்டு கட்டங்களை உடைய செவ்வக வடிவம்.. இதுவே ஆடுபுலி ஆட்டம் விளையாடுவதற்குரிய வரைபடம். இந்த விளையாட்டில் இரண்டு பேர் பங்கு கொள்வார்கள். ஒருவர் ஆடு; இன்னொருவர் புலி. ஆட்டின் கையில் 15 காய்கள் இருக்க வேண்டும். புலியின் கையில் மூன்று காய்கள்.


ஆட்டின் காய்களுக்குப் புளியன்கொட்டை, மஞ்சாடி குன்றிமுத்து, சிறிய கடல் சிப்பி போன்றவற்றைப் பயன்படுத்துகிறார்கள். புலியின் காய்கள் ஆட்டின் காய்களைவிட சற்றுப் பெரிதாக இருக்க வேண்டும். பெரும்பாலும் இதற்கு நல்ல வடிவம் உள்ள சிறிய கற்களைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த வரைபடத்தில் இருபத்தி மூன்று புள்ளிகள் இருக்கும். ஆடு ஒரு காயை நகர்த்திய பின்னர் புலி காயை நகர்த்தலாம். ஆட்டுக்கு 15 காய்கள் இருப்பதால் பிரச்சினை இல்லை. புலி மூன்று காய்களை நகர்த்தி முடிந்ததும் வரைபடத்தில்



15 ஆடுகள்






“

**நுட்பம், பொறுமை, கூர்மை – இவை மூன்றும் இருந்தால் மட்டுமே இந்த விளையாட்டை விளையாட முடியும். அதேபோல, இந்த விளையாட்டை விளையாடினாலே இந்த மூன்றையும் கற்றுக்கொள்ள முடியும்.**

”



வைக்கப்பட்டிருக்கும் மற்ற காய்களை நகர்த்தலாம். ஒரு புள்ளியிலிருந்து இன்னொரு புள்ளிக்கு சாமர்த்தியமாக காய்களை நகர்த்துவது இந்த விளையாட்டின் சாராம்சம். இரண்டு புள்ளிகள் தாண்டி காய் நகர்த்துவதை ‘வெட்டுவது’ என்ற சொல்லால் குறிக்கின்றனர். 23 புள்ளிகளில் 18 புள்ளி காய்களை நகர்த்தி வெட்டுவது இந்த விளையாட்டின் நுட்பம்.

ஆடுகள் புலியைச் சுற்றி வளைக்கலாம். அப்படியானால் ஆடுகளுக்கு வெற்றி. சாமர்த்தியமாக வேறு புள்ளிகளுக்கும் செல்லலாம். விளையாடுபவரின் கூர்மையும் முக்கியம். புலி முக்கோண உச்சிக்கு செல்வதையே நோக்கமாகக் கொண்டு நகரும்.

ஆடு புலி ஆட்டம் விளையாடும்போது நேரம் போவதே தெரியாது. அறிவார்ந்தவர்களும் கூர்மையான நுட்பம் உடையவர்களும் விளையாடும் சதுரங்க விளையாட்டுக்கு (செஸ்) ஆடு புலி ஆட்டம் எந்த வகையிலும் குறைந்தது இல்லை. ஒரு வகையில் இரண்டும் ஒரே போக்கில் அமைந்தவை. இந்த விளையாட்டை ஆடு மாடு மேய்ப்பர்கள் விரும்பி விளையாடுகிறார்கள். அவர்களிடமும் மிகுந்த கூர்மையும் நுட்பமும் உண்டு என்பதை அவர்கள் விளையாடும்போது பக்கத்திலிருந்து பார்த்தால் தெரியும்.

இந்த விளையாட்டுக்கு மூலதனம் வேண்டாம். தரையில் கோடு வரைந்தால் போதும்... சில வீடுகளில் மரப்பலகையில் இந்த விளையாட்டின் வரைபடத்தை வரைந்து வைத்திருக்கிறார்கள்.

ஒரு பள்ளிக்கூடத்தில் மரப்பலகையில் வரையப்பட்ட 20 வரைபடங்கள் இருந்தால் போதும். 40 மாணவிகளுக்கு பொழுது நன்றாகப் போகும். நுட்பம், பொறுமை, கூர்மை – இவை மூன்றும் இருந்தால் மட்டுமே இந்த விளையாட்டை விளையாட முடியும். அதேபோல இந்த விளையாட்டை விளையாடினாலே இந்த மூன்றையும் கற்றுக்கொள்ள முடியும். ஆசிரியர்களும் இதைக் கற்பிப்பதற்கு எளிது. மூளைக்கு நல்ல வேலை உள்ள விளையாட்டை ஆடுவோமா!

■

# எலான் மஸ்க்
# மாற்றத்துக்கான அறைகூவல்

அப்துல் மஜீத்

சென்ற மாதம் உலகம் முழுக்க உள்ள ஊடகங்கள் எலான் மஸ்க் தொடர்பில் பேசிக்கொண்டிருந்தன. ஏன்? சமூகவலைதள நிறுவனங்களில் ஒன்றான ட்விட்டரை ரூ.3.30 லட்சம் கோடிக்கு வாங்க அவர் விருப்பம் தெரிவித்தார். ட்விட்டரும் அதற்கு சம்மதம் தெரிவித்தது. இன்னும் அந்த விற்பனை முடியவில்லை என்றாலும், நாம் ஒரு கேள்வியைக் கேட்டுக்கொள்ளலாம்: ஒருவரிடம் பணம் இருக்கிறது. வாங்குகிறார். இதில் ஆச்சரியப்படுவதற்கும், விவாதிப்பதற்கும் என்ன இருக்குகிறது? இப்படித்தானே இந்தச் செய்தியை எல்லோரும் கடக்க வேண்டும்? ஏன் அப்படிக் கடக்காமல் எல்லோரும் எலான் தொடர்பில் பேசிக்கொண்டிருந்தனர்?

## ➔ தனித்துவ தொழில்முனைவோர்

இன்று உலக பில்லியனர்கள் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவர் எலான். அவரது சொத்து மதிப்பு 25,000 கோடி டாலர். அதாவது, நியூசிலாந்து, போர்ச்சுக்கல், கொலம்பியா, பெரு, சிலே உள்ளிட்ட பல நாடுகளின் ஜிடிபியைவிடவும் அதிகம். உலக நாடுகளின் பட்டியலில் கீழ்நிலையில் இருக்கும் 100 நாடுகளின் ஜிடிபி எலான் சொத்து மதிப்பைவிடவும் பல மடங்குகள் குறைவு. விஷயம் இதுவல்ல. இந்த இடத்தை நோக்கி எலான் பயணப்பட்டுவந்த பாதையும், அவருடைய கனவும்தான் நாம் அவரைப் பற்றித் தெரிந்துகொள்ள அவசியம் ஆகிறது.

எலான் அவருடைய ‘டெஸ்லா’ மற்றும் ‘ஸ்பேஸ் எக்ஸ்’ என்ற இரு நிறுவனங்களின் வழியேதான் பரவலாக அறியப்படுகிறார். டெஸ்லா நிறுவனம் எலக்ட்ரிக் கார் தயாரிப்பில் ஈடுபடுகிறது. ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமானது, விண்வெளி ஆராய்ச்சி, ராக்கெட் தயாரிப்பு உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுகிறது. இந்த இடத்தில் நாம் ஒன்றை யோசித்துப் பார்ப்போம்.

இன்று மக்களால் வியக்கப்படும் தொழில்முனைவோர்கள் பட்டியல் ஒன்றைப் போட்டால் இவர்கள் பெயரெல்லாம் நிச்சயம் இடம்பெறும்: ஸ்டீவ் ஜாப்ஸ் (ஆப்பிள்), ஜாக் மா (அலிபாபா), ஜெஃப் பிசோஸ் (அமேசான்), மார்க் ஸுகர்பெர்க் (பேஸ்புக்). இவர்கள் அனைவருக்கும் இடையே பல ஒற்றுமைகள் உண்டு. பல இளைஞர்களுக்கு இவர்கள் இன்று ஆதர்சமாகத் திகழ்வதும் அவற்றில் ஒன்று. வெறுமனே வியாபாரம் செய்து பணம் சம்பாதித்தவர்கள் என்று இவர்கள் எவரையும் கூறிவிட முடியாது. அவர்கள் சம்பந்தப்பட்ட துறைகள் வழியே உலகின் போக்கில் மாற்றங்களை உண்டாக்கியவர்களும்கூட. அதேபோல, இவர்கள் செயல்பட்ட துறைகளுக்கும் மக்களுக்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது. அதனால், இவர்கள் பொதுச் சமூகத்தில்



> **ச**மூக மேம்பாடு என்று சொல்லிவிட முடியாது. மாறாக, எலான் வியாபாரத்தை நோக்கமாகக் கொள்ளவில்லை; உலகை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார். வியாபாரமே அல்ல, மாற்றமே இலக்கு.

TESLA

கொண்டாடப்படுவதைப் புரிந்துகொள்ளவும் முடிகிறது.

எலான் இவர்களிடமிருந்தும் மாறுபட்டவர். சாதாரண மக்களின் கைகளுக்கோ, கற்பனைக்கோ எட்டாத எலக்ட்ரிக் கார் தயாரிப்பு, ராக்கெட் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பவர். அப்படியிருக்க மேற்கண்டவர்கள் எல்லோரையும் காட்டிலும் எலானை ஏன் உலகம் கொண்டாடவும் வியக்கவும் செய்கிறது? எனில், எலான் எங்கு மற்ற தொழில் முனைவோர்களிடமிருந்து தனித்துவப்படுகிறார்? எங்கு அவர் முன்னுதாரணம் ஆகிறார்?

### ➔ வியாபாரம் மட்டும் அல்ல, மாற்றமும் இலக்கு!

ஸ்டீவ் ஜாப்ஸ், ஜாக் மா, ஜெஃப் பிசோஸ், மார்க் ஸுகர்பெர்க் ஆகியோர் சாதாராணமாக நிறுவனத்தைத் தொடங்கி தங்கள் முயற்சியின் வழியே அதை உலகின் முன்னணி நிறுவனமாக மாற்றியவர்கள். தத்தமது துறைகளில் அவர்கள் புதிய சாத்தியங்களை உருவாக்கி இருக்கலாம். ஆனால், அவையெல்லாம் தனிமனித வளர்ச்சிதான். சமூக மேம்பாடு என்று சொல்லிவிட




முடியாது. மாறாக, எலான் வியாபாரத்தை நோக்கமாகக் கொள்ளவில்லை; உலகை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார்.

### ➔ அப்படி என்ன செய்தார் எலான்?

எலானுக்குச் சொந்தமான நிறுவனங்களைப் பார்த்தால் அவர் என்ன செய்திருக்கிறார் என்பது புலப்படும். டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ், சோலார் சிட்டி, நியூரோலிங், தி போரிங் கம்பெனி இவையெல்லாம் எலானுக்குச் சொந்தமான நிறுவனங்கள்.

தற்போது உலகம் எதிர்கொண்டிருக்கும் மிகப் பெரிய சவால்களில் ஒன்று காலநிலை மாற்றம். தொழிற்சாலைகள், வாகனங்கள், கட்டிடங்களிலிருந்து அன்றாடம் உமிழப்படும்

> **“கல்வியில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது; கல்வி என்பது மக்களின் அடிப்படை உரிமை; அனைத்து மக்களுக்கும் அது வழங்கப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர் எலான். அதனால்தான், கல்விப் பணிகளுக்கு அவர் பெரும் நிதியுதவி வழங்கிவருகிறார்.”**

கரியமில வாயு உலகின் சுற்றுச்சூழலை வெகுவாகப் பாதித்துள்ளது. கரியமில வாயு உமிழ்வைக் குறைக்காவிட்டால், உலகம் விரைவிலேயே மிக மோசமான அழிவுகளை எதிர்கொள்ளும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். இதனால், உலக நாடுகள் கரியமில வாயு உமிழ்வைக் குறைக்கும் வழிமுறைகளைத் தீவிரமாகச் சிந்தித்துவருகின்றன. பெட்ரோல், டீசல், நிலக்கரி போன்ற புதைபடிவ எரிபொருள்கள்தான் கரியமில வாயு வெளியேற்றத்துக்கு முக்கியக் காரணங்களாக உள்ளன. ஆக, இத்தகைய புதைபடிவ எரிபொருள்களுக்கு மாற்றான வழிகளைக் கண்டடைய வேண்டிய நிர்ப்பந்தத்தில் உலகம் உள்ளது. அதன் பகுதியாகவே உலகம் பசுமை வாகனங்களை நோக்கி நகர்ந்துவருகிறது.

காலநிலை மாற்றம் தொடர்பில் பொதுவெளியில் கடந்த சில ஆண்டுகளாகத்தான் தீவிரமாக விவாதிக்கப்படுகிறது. ஆனால், இன்றிலிருந்து 17 ஆண்டுகளுக்கு முன்பே மாற்று எரிசக்தியின் அவசியம் குறித்து சிந்தித்து, மின்சாரத்தில் இயங்கும் கார்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தலானார் எலான். இன்று உலகின் எலக்ட்ரிக் கார் சந்தையில் மூன்றில் ஒரு பங்கு எலானுடைய டெஸ்லா வசம் உள்ளதற்கு முக்கியமான காரணம் இதுகுறித்த சிந்தனையில் அவர் முன்னோடியாக இருந்தார் என்பதே ஆகும்.

விண்வெளி ஆராய்ச்சி என்பது பெரும்பாலும் அரசு அமைப்புகள் செய்யக் கூடியவை. அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் நாசா, ரஷ்யாவை எடுத்துக்கொண்டால் ரோஸ்காஸ்மோஸ், இந்தியாவை எடுத்துக்கொண்டால் இஸ்ரோ. இந்தத் துறையில் தனியார் நிறுவனங்கள் பெரிய அளவில் வருவதில்லை. ஏனென்றால், இது ஆராய்ச்சி துறை. வணிகத் துறை அல்ல. அதிலும் பெரும் பொருட்செலவைக் கோரக் கூடியது. ஆனால், எலான் இத்துறையில் கால் வைத்தார். அதுவும் என்ன இலக்கோடு தெரியுமா? செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்ப வேண்டும் என்பதுதான் அவரது இலக்கு. அப்படியாக அவர் தொடங்கியதுதான் ‘ஸ்பேஸ் எக்ஸ்’.

எலான் உலகின் போக்குவரத்துக் கட்டமைப்பில் மாற்றங்கள் தேவை என்று தொடர்ந்து சொல்லிவருபவர். அதற்காக அவர் ஒரு கனவுத் திட்டத்தை முன்னெடுத்தார். அதன் பெயர் ‘ஹைப்பர் லூப்’. ஹைப்பர் லூப்பில் ஒரு மணி நேரத்தில் 1220 கிமீ தூரத்தைக் கடந்துவிட முடியும். அதாவது, ஹைப்பர் லூப் மூலம் சென்னையிலிருந்து திருநெல்வேலிக்கு 40 நிமிடங்களில் சென்றுவிட முடியும்.

இப்படியாக எலான் கை வைத்திருக்கும் ஒவ்வொரு திட்டமும்,




உலகின் போக்கையே பாய்ச்சலுக்கு உருமாற்றுவதைக் கனவாகக் கொண்டவை. கனவு காண்பதும், இலக்கைக் கொண்டிருப்பதும் எளிதான ஒன்று. ஆனால், அதை எப்படி சாத்தியப்படுத்தப்போகிறோம் என்பதுதான் முக்கியம். இல்லையா? எலான் எப்படி தன் இலக்கை சாத்தியப்படுத்துகிறார்?

### ➔ எலானின் பயணம்

எலானின் குழந்தைப் பருவத்திலிருந்து அவரது பயணத்தை நாம் பார்ப்போம். எலான் 1971இல் தென் ஆப்பிரிக்காவின் தலைநகரங்களில் ஒன்றான பிரிட்டோரியாவில் பிறந்தார். அவருடைய தந்தை ஒரு பொறியாளர்; தாய் கனடா நாட்டைச் சேர்ந்த மாடல். எலான்தான் மூத்த குழந்தை. அவருக்கு ஒரு தங்கையும் தம்பியும் உண்டு.

எலான் தந்தைக்கும் தாய்க்கும் இடையே அடிக்கடி சண்டை வரும். இனியும் சேர்ந்து வாழ முடியாது என்ற நிலையில் விவாகரத்துக்கு முடிவெடுக்கின்றனர். அவர்கள் இருவரும் விவாகரத்து பெறும்போது எலானுக்கு வயது 10. எலானும் அவரது தம்பியும் அவருடைய தந்தையுடன் வாழச் செல்கின்றனர். அங்கே அவர்கள் இருவரின் பால்யமும் மிகவும் சித்திரவதை மிகுந்ததாக அமைந்திருக்கிறது. எலான் தந்தை ஒரு கொடுமைக்காரர். தன் தந்தையைப் பற்றி எலான் நினைவுகூரும்போது இப்படிக் கூறுகிறார்: “அவர் மிகக் கொடூரமான மனிதர். நீங்கள் நினைக்கும் ஒவ்வொரு தீய காரியத்தையும் அவர் செய்திருக்கிறார்!”

வீட்டில்தான் பிரச்சினை என்றால், வெளியிலும் எலானுக்குப் பிரச்சினை இருந்தது. பள்ளியில் சக மாணவர்கள் எலானைக் கேலி செய்தனர். இதனால், பள்ளிக் காலகட்டத்தில் தனித்து ஒடுங்கியே எலான் இருந்தார். அவருக்கு ஒரே துணை புத்தகங்களும் கணினியும். அவை வெளி உலகின் துயரத்திலிருந்து தப்பிக்கும் வழியாக எலானுக்கு இருந்தன.

எலானுக்கு சிறு வயது முதலே கணினித் தொழில்நுட்பங்கள் மீது மிகுந்த ஆர்வம் இருந்தது. அப்படியாக எலான் சிறுவயதிலேயே நிரல் எழுதக் கற்றுக்கொள்கிறார். அவர் தன்னுடைய 12 வயதில் ஒரு வீடியோ கேமுக்கான நிரல் எழுதி அதை ஒரு பத்திரிக்கைக்கு 500 டாலருக்கு விற்றார். தங்கள் பள்ளிக்கு அருகே வீடியோ கேம் சென்டர் அமைக்க திட்டமிடும் அளவுக்கு அந்தச் சகோதரர்கள் இருவரும் தீவிரமாக இருந்தனர்.

பள்ளிப் படிப்பு முடிகிறது. அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டும் என்பதே அவருக்கு இலக்காக இருந்தது. அந்த சமயத்தில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்கு விசா கிடைப்பது அவ்வளவு எளிதானதாக இல்லை. ஆனால், தாய் வசிக்கும் கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு எளிதில் விசா பெற்றுவிடலாம். எலான் பயணமானர். அங்குள்ள குயின்ஸ் பல்கலைக்கழத்தில் சேர்ந்தார். அங்கு அவர் சந்தித்த வளர்ந்துவரும் பெண் எழுத்தாளரைத்தான் எலான் பின்னாளில் திருமணம் செய்துகொண்டார்.

எலான் குயின்ஸ் பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் படித்தார். அதன் பிறகு பென்சில்வேனியா பல்கலைக்கழகத்துக்கு மாறினார். இயற்பியல், பொருளாதாரம் இரு துறைகளையும் படித்தார்.

எலானுக்கு இயற்பியல் மீது பெரும் காதல் இருந்தது. அதனால், இயற்பியலில் முனைவர் பட்டம் பெறலாம் என்று அவர் எண்ணினார், அமெரிக்காவில் உள்ள ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்தார். அவர் முனைவர் படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எலான் ஒரு துடிப்பான நபர். அவருக்குக் கல்லூரிப் படிப்பின்




மீது ஆர்வம் இருந்தாலும், சுயமாக புதிய விஷயங்களை பரீட்சித்துப் பார்ப்பதில் உள்ளார்ந்த ஆர்வம் எப்போதுமே இருந்துவந்தது. அவர் கல்லூரிப் படிப்பு முடித்து ஸ்டான்ஃபோர்டில் சேர்ந்த காலகட்டத்தில்தான், உலகில் இணையத்தின் வருகை நிகழ்ந்திருந்தது. இணைத்தின் சாத்தியம் அவரைப் பெரும் கனவுக்குத் தள்ளியது. சுயமாக செயல்படலாம் என்று முடிவெடுக்கிறார். ஸ்டான்ஃபோர்டில் சேர்ந்த இரண்டாவது தினத்திலேயே அதிலிருந்து விலகுகிறார். அப்போது அவருக்கு வயது 24.

1995இல் தன் இளைய சகோதரனுடன் சேர்ந்து 28,000 டாலர் முதலீட்டில் ஓர் இணைய மென்பொருள் நிறுவனத்தைத் தொடங்குகிறார். அதன் பெயர் ‘ஸிப்2’. பத்திரிகை நிறுவனங்களுக்குத் தேவையான சேவைகளை அந்நிறுவனம் செய்து கொடுக்கும். எலான் அவரது சகோதரருடன் சேர்ந்து ஆரம்பித்த நிறுவனம் கவனம் ஈர்க்கலானது. 1999இல் ‘காம்பேக் கம்ப்யூட்டர்’ நிறுவனம் எலானின் ‘ஸிப்2’ நிறுவனத்தை விலைக்குக் கேட்டது. விலை 34 கோடி டாலர்.

இந்தப் பணத்தைக் கொண்டு எலான் ‘எக்ஸ்.காம்’ நிறுவனத்தை ஆரம்பித்தார். இது பணப் பரிவர்த்தனை தொடர்பான நிறுவனம். இதுதான் பிற்பாடு ‘பே பால்’ நிறுவனமாக மாறியது. இப்போதுதான் நாம் ‘கூகுள் பே’, ‘போன் பே’ பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால், எலான் 20 ஆண்டுகளுக்கு முன்பே பணப் பரிவர்த்தனை மென்பொருள் சாத்தியம் குறித்து சிந்தித்து அதில் நிறுவனமும் தொடங்கி இருக்கிறார். ‘பே பால்’ நிறுவனத்தை ‘இபே’ நிறுவனம் 2002இல் வாங்கியது; விலை 1.5 பில்லியன் டாலர்!

## ➔ கனவும் செயலும்

அடுத்தடுத்து எலான் மேற்கொண்ட முயற்சிகள்தான் அவரை இன்று உலகின் முக்கிய ஆளுமையாக மாற்றி இருக்கிறது. 2000 தொடக்கத்தில் விண்வெளி ஆராய்ச்சிக் குழுக்களுடன் எலானுக்குத் தொடர்பு ஏற்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக விண்வெளி ஆராய்ச்சி சார்ந்து நிறுவனம் தொடங்கலாம் என்ற முடிவுக்கு வருகிறார். இப்படியாகத்தான் ‘ஸ்பேஸ் எக்ஸ்’ நிறுவனத்தை 2002இல் அவர் தொடங்குகிறார். ‘பே பால்’ விற்பனை மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டுதான் ‘ஸ்பேஸ் எக்ஸ்’ நிறுவனத்தை அவர் தொடங்கினார். அப்போது எலானுக்கு வயது 31. செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்புவது அவரது இலக்காக இருந்தாலும் ‘ஸ்பேஸ் எக்ஸ்’ தொடங்கப்பட்டபோது, குறைந்த விலையில் மறுபயன்பாட்டுக்கான ராக்கெட்டைத் தயாரிப்பதுதான் அந்நிறுவனத்தின் செயல்திட்டமாக இருந்தது. அப்போது அத்துறை சார்ந்தவர்கள் எலானைக் கேலிக்குரியவராகவும் ஆர்வக்கோளாறாகவும் பார்த்தனர்.

புதிய நிறுவனத்தில் அவரது திட்டங்கள் முதல் ஐந்து ஆண்டுகள் பெரும் தோல்வியைச் சந்தித்தன. பெரும் நிதி நெருக்கடிக்கு எலான் உள்ளானார். ஆனால், அவருக்குத் தோல்வி என்பது பொருட்டே இல்லை. தன் இலக்கை எட்டுவது மட்டும்தான் முக்கியம். 2008இல் ‘ஸ்பேஸ் எக்ஸ்’ உருவாக்கிய ராக்கெட் பரிசோதனையில் வெற்றி அடைந்தது. உலகமே ‘ஸ்பேஸ் எக்ஸ்’ நிறுவனத்தைத் திரும்பிப்பார்த்தது. குறிப்பாக நாஸா. ஏனென்றால், அரசு நிறுவனங்கள் பல்லாண்டு ஆராய்ச்சியிலும், பெரும் நிதியிலும் செய்ததை, எலான் தனி ஓர் ஆளாகச் செய்திருந்தார்.

விளைவாக ‘ஸ்பேஸ் எக்ஸ்’ நிறுவனத்தின் அடுத்தடுத்தத் திட்டங்களுக்கு நாஸா நிதி உதவி வழங்கலானது.

2003இல் மார்டின் எபர்ஹார்ட் மற்றும் மார்க் டார்பெனிங் ஆகிய இருவர் மின்சார வாகனத் தயாரிப்பு சார்ந்து ‘டெஸ்லா மோட்டார்’ நிறுவனத்தை ஆரம்பித்து நடத்திவந்தனர். எதிர்கால உலகை வடிவமைப்பதில் தீரா ஆர்வம் கொண்டிருந்த எலான், 2004இல் டெஸ்லா நிறுவனத்தில் பெரும் முதலீடு செய்தார். அடுத்த ஓரிரு ஆண்டுகளிலே டெஸ்லா நிறுவனம் முழுமையாக எலான் கட்டுப்பாட்டின் கீழ் வரலானது. 2008இல் அந்நிறுவனத்தின் சிஇஓவாக எலான் பொறுப்பேற்றார். தொடக்கத்தில் டெஸ்லா நிறுவனம் பெரும் நிதி நெருக்கடியில் சென்றுகொண்டிருந்தது. ஏனென்றால், எலக்ட்ரிக் காருக்கான சந்தை அப்போது உருவாகி இருக்கவில்லை. ஆனால், எலான் பெருங்கனவுடன் அந்நிறுவனத்தை நடத்திவந்தார்.

டெஸ்லா நிறுவனத்தின் முதல் ஸ்போர்ட்ஸ் எலக்ட்ரிக் கார் 2008இல் சந்தைக்கு வந்தது. அப்போது 2500 கார்கள் விற்றன. அதன் பிறகு பொதுப் பயன்பாட்டுக்கான கார் தயாரிப்பில் டெஸ்லா கவனம் செலுத்தலானது. 2017இல் வெளியான ‘மாடல் 3’ பரவலான கவனத்தைப் பெற்றது. 2021 ஜூன் நிலவரப்படி அந்த மாடலில் 10 லட்சம் கார்கள் விற்பனையாகியுள்ளன. எலக்ட்ரிக் கார் 10 லட்சம் அளவில் விற்பனை என்பது பெரும் சாதனை. இன்று டெஸ்லாவின் சந்தை மதிப்பு 1 லட்சம் கோடி டாலர்.

அடுத்து, சூரிய மின் சக்தித் துறையில் கவனம் செலுத்தலானார் எலான். ‘சோலார்சிட்டி’ நிறுவனத்தை 2006இல் எலான் தொடங்கினார். மனித மூளையோடு செயற்கைத் தொழில்நுட்பத்தை இணைக்கும் நோக்கில் ‘2016 நியூரோலிங்’ நிறுவனத்தையும் தொடங்கினார். இவ்வாறாக எலான் முதலீடு செய்திருக்கும் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் உலகை அடுத்தத் தளத்துக்கு நகர்த்திச் செல்லும் சாத்தியத்தைக் கொண்டவை.

## ➔ எலானும் கல்வியும்

கல்வித் துறை மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர் எலான். அதேசமயம், ஒட்டுமொத்த கல்வி அமைப்புகள் மீதும் அவருக்கு விமர்சனங்கள் உண்டு. குழந்தைகளின் கற்பனைத் திறனை பள்ளிகள் முடக்குகின்றன என்பது எலானுடைய முக்கியமான விமர்சனம் ஆகும்.

எலானுக்கு அவருடைய பள்ளி வாழ்க்கை பிடித்தமானதாக இருக்கவில்லை. ஒருபக்கம் சக மாணவர்களால் கேலிக்குரியவராக அவர் பார்க்கப்பட்டார்; மறுபுறம் அவரது தேடுதலுக்குத் தீனி போடுவதாகப் பள்ளிப் பாடத்திட்டம் இல்லை. எலான் தனக்குத் தேவையானதைத் தானே தேடிக் கற்றுக்கொண்டார். அதனால்தான் அவர் தன்னுடைய நிறுவனங்களில் வேலைக்குச் சேர்பவர்கள் ‘கல்லூரி முடித்திருக்க வேண்டும், கல்விச் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்’ என்று அவர் எதிர்பார்ப்பதில்லை.

பள்ளி என்பது எப்படி இருக்க வேண்டும் என்று எலான் சில பார்வைகளை முன்வைக்கிறார்: “கல்வி என்பது கொண்டாட்ட மானதாகவும் எல்லைகள் அற்றதாகவும் சுதந்திரமானதாகவும் இருக்க வேண்டும்; கல்வி என்பது உலகின் பிரச்சினைகளுக்கு சேர்ந்து தீர்வு காண்பதாக இருக்க வேண்டும்; நாம் எதைச் சிந்திக்க வேண்டும் என்று ஒரு பள்ளி சொல்லித் தரக் கூடாது. மாறாக, ஒரு விஷயத்தை நாம் எப்படிச் சிந்திக்க வேண்டும், ஒரு பிரச்சினையை எப்படி அணுக வேண்டும் என்று சொல்லித் தர வேண்டும்!”

இப்படிப் பேசியதோடு நிற்கவில்லை; இந்தப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு ‘அட் அஸ்ட்ரா’ (Ad Astra) என்றொரு பள்ளியைத் தொடங்கினார். முதலில் இப்பள்ளி ‘ஸ்பேஸ் எக்ஸ்’ ஊழியர்களின் குழந்தைகள் மட்டும் பயில்வதற்கான இடமாக இருந்தது. அதன் பிறகு ‘சிந்தஸிஸ்’ (Synthesis) உருவாக்கப்பட்டது. இதில் யார் வேண்டுமானாலும் சேரலாம் என்ற சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது. பல துறைகளைச் சேர்ந்தவர்கள் அந்தப் பள்ளியில் கற்பிக்க வருவார்கள். ஒரு நாள் மருத்துவர் வந்து வகுப்பெடுப்பார்; ஒரு நாள் பொறியாளர், ஒரு நாள் எழுத்தாளர்; இவ்வாறு ஆசிரியர் என்பதற்கான வரையறையும் அந்தப் பள்ளி விரிவுபடுத்துகிறது.




கல்வியில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது; கல்வி என்பது மக்களின் அடிப்படை உரிமை; அனைத்து மக்களுக்கும் அது வழங்கப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர் எலான். அதனால்தான், கல்விப் பணிகளுக்கு அவர் பெரும் நிதியுதவி வழங்கிவருகிறார். “வாசியுங்கள். அதிகமாக வாசியுங்கள். உலகில் வீடியோக்கள் நிறைந்திருக்கின்றன. வீடியோக்கள் உங்களுக்கு புதிய விஷயங்களைக் கற்றுத்தரலாம். ஆனால், வாசிப்புதான் உங்கள் சிந்தனையை விசாலமாக்கும். வெற்றி, தோல்வி முக்கியமல்ல. செயல்படுவதுதான் முக்கியம். எனவே செயல்படுங்கள்” என்று சொல்லும் எலான் கல்வி சார்ந்தும், வேலை சார்ந்தும் வெளிப்படுத்தும் பார்வையே அவர் வாழ்க்கை சார்ந்து வெளிப்படுத்தும் பார்வையும் என்றுகூட சொல்லலாம்: “உங்கள் தனிபட்ட வளர்ச்சியில் மட்டுமே கவனத்தைச் செலுத்தாமல் சக மனிதர்களுக்கும், உலகத்துக்கும் பயனுள்ள விஷயங்களைச் செய்யுங்கள். மக்களிடம் சென்று பேசுங்கள். மக்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள். உலகம்தான் வகுப்பறை. உலகம்தான் உங்களுக்கு ஆய்வகம். உலகம்தான் நீங்கள் செயல்பட வேண்டிய இடம்!”

■




# ஆயிரம் ஆயிரம் புத்தகங்கள்

வாசிப்பு இயக்கத்தை வளர்த்தெடுக்கும் விதமாக, 1000 ‘இல்லம் தேடிக் கல்வி’ இயக்க மையங்களுக்குத் தலா ரூ.1,000 மதிப்புள்ள புத்தகங்களை வழங்கும் நிகழ்ச்சி திருச்சியில் நடைபெற்றது.

உலக புத்தக நாளை முன்னிட்டு திருச்சி பள்ளிக் கல்விப் பாதுகாப்பு இயக்கம், பள்ளிக் கல்வித் துறையுடன் தமிழ்நாடு அஸ்டிரானமிக்ஸ் சயின்ஸ் சொசைட்டி-திருச்சி, யங் இந்தியன்ஸ்-திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரி-திருச்சி, எய்டு இந்தியா-சென்னை, அறிவியல் பலகை (விஞ்ஞான் பிரசார் தமிழ்ப் பிரிவு)-சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்-சென்னை, வெற்றிக்கு வழி குழுமம்-திருச்சி ஆகிய அமைப்புகள் இணைந்து இந்நிகழ்ச்சியை நடத்தின.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திருமிகு சிவராசு அவர்கள்








தலைமை வகித்தார். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் மாண்புமிகு நேரு அவர்கள், பள்ளிக்கல்வித் துறை ஆணையர் திருமிகு நந்தகுமார் அவர்கள், மாநிலத் திட்ட இயக்குநர் திருமிகு சுதன் அவர்கள், இல்லம் தேடிக் கல்வி இயக்க சிறப்பு அலுவலர் மற்றும் பொது நூலகத் துறை இயக்குநர் திருமிகு இளம்பகவத் அவர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

அமைச்சர் மாண்புமிகு மகேஷ் பொய்யாமொழி அவர்கள் பேசுகையில், ‘‘இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குக் கற்றலில் கவனம் செலுத்த ஒரு மிகப் பெரிய திட்டத்தைத் தமிழகக் கல்வித் துறை முன்னெடுத்துள்ளது. ‘இல்லம் தேடிக் கல்வி’ போன்ற ஒரு திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட அதற்குப் பக்கபலமாக இருக்கும் தன்னார்வலர்களின் பணி பாராட்டுக்குரியது” என்றார். தொடர்ந்து அமைச்சர் மாண்புமிகு நேரு அவர்கள் தன்னார்வலர்களை வாழ்த்திப் பேசினார். “பள்ளிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளைச் செய்து தருவதில் எங்கள் துறையிலான காரியங்கள் விரைவில் நடந்தேறும்” என்ற வாக்குறுதியை அவர் வழங்கினார்.

பள்ளிக் கல்வித் துறை ஆணையர் திருமிகு நந்தகுமார் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றிய தன்னார்வலர்களை வாழ்த்தினார். மாநிலத் திட்ட இயக்குநர் திருமிகு சுதன் அவர்கள் பேசுகையில், “இது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. சமூகத்துடன் பள்ளிகள் இணைவது செயல்படுவது மிகவும் அவசியம். பள்ளிக் குழந்தைகள் மட்டுமல்ல, சமூகமே வாசிக்க வேண்டும். சமூகத்தின் அத்தனை அங்கங்களும் இணைந்து செயலாற்றும்போது கிடைக்கும் பலன் அதிகம். அந்த அடிப்படையிலேயே இப்போது பள்ளிக்கல்வி மீது அக்கறை கொண்ட பள்ளிக்கல்விப் பாதுகாப்பு

## இல்லம் தேடிக் கல்வி இயக்க அரங்கு – சென்னை புத்தகக்காட்சியில்













இயக்கம் உள்ளிட்ட பல தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து கல்வித் துறை பயணிக்கிறது. புதிய பாதையில் தடம் பதிக்கும்போது பல தடங்கல்கள், சங்கடங்கள் நேர்வது சகஜம். அவற்றையெல்லாம் எதிர்கொண்டு வெல்வோம்" என்று அவர் தன்னார்வலர்களை ஊக்கப்படுத்தினார்.

'இல்லம் தேடிக் கல்வி' இயக்க சிறப்பு அலுவலர் மற்றும் பொது நூலகத் துறை இயக்குநர் திருமிகு இளம்பகவத் அவர்கள் பேசுகையில், "தன்னார்வலர்கள் பேச்சிலும் செயலிலும் தெரிவது உண்மையான ஆர்வமும் ஈடுபாடும் சமூக அக்கறையும் மட்டுமே. அவர்களை அறிவுத்தளத்தில் அடுத்த நிலைக்கு உயர்த்த பல கல்வியாளர்கள் வழிகாட்டுதலுடன் 'தொடுவானம்' மின்னிதழ் தொடங்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஆண்டுகளில் நீங்கள் சிறந்த கல்வியாளர்களாக மாற வேண்டும்" என்று வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

கல்விக் கொள்கைக் குழு உறுப்பினரும், எழுத்தாளருமான பேராசிரியர் திருமிகு ச.மாடசாமி அவர்கள் பேசுகையில், "தன்னார்வலர்களே தமிழ்நாட்டின் புதிய சக்தி. தன்னார்வலர்களிடம் ஒளிந்திருக்கும் அளப்பரிய சக்தி வெளிப்பட வேண்டும். பள்ளியும் பள்ளி நூலகமும் சமூகத்தின் சொத்து. பள்ளிகளில் பெற்றோருக்கு வழங்கப்படும் அங்கீகாரமே பள்ளி மேலாண்மைக் குழு" என்று கூறி அறிவொளி கால நினைவுகளை பகிர்ந்துகொண்டார்.

புத்தகங்களைத் தன்னார்வலர்கள் பெற்றுக்கொண்டனர். பள்ளிகல்விப் பாதுகாப்பு இயக்கத் தலைவர் திருமிகு வசந்தி தேவி அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியை இயக்கச் செயலர் திருமிகு கிருஷ்ணமூர்த்தி ஜெயராமன் அவர்கள் வாசித்தார்.

திருமிகு தலைமை ஆசிரியர்கள் பாலு, நாகை செல்வக்கண்ணன், கரூர் கருப்பையன், புதுக்கோட்டை கிருஷ்ணவேணி, சென்னை ஸ்வர்ணாபாய் ஆகியோருடன் பள்ளிக் கல்விப் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர்கள் திருமிகு தென்கனல் இசைமொழி, வீரமணி, கிருஷ்ணகிரி, கனகராஜன், சுடர் நடராஜ் ஆகியோர் இணைந்து நூறு பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் பள்ளி மேலாண்மைக் குழு சிறப்பாக நடைபெற வழிகாட்டும் பணிகளை மேற்கொண்டனர். கல்வி மேம்பாட்டுக் கூட்டமைப்பு நிர்வாகி திருமிகு மூர்த்தி, தலைமை ஆசிரியர் திருமிகு கனகராஜ் ஆகியோர் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் சிறப்புற பணியாற்ற வழிகாட்டும் பணிகளை மேற்கொண்டனர். இவர்களுடைய தொடர் பணிகளைப் பாராட்டி, நினைவுப் பரிசும் சான்றிதழும் இந்நிகழ்ச்சியில் வழங்கப்பட்டன.

ஓய்வுபெற்ற திருவாரூர் ஆசிரியர் திருமிகு முத்துராஜா அவர்களின் 'பாட்டும் பாடமும்' நூலையும் மாடசாமி வெளியிட்டார். இயக்கச் செயலர் திருமிகு ஜேகேவின் வாழ்த்துகளைத் தொடர்ந்து, திருச்சி மாவட்ட பள்ளிக்கல்விப் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமிகு மனோகரன் இந்த நிகழ்ச்சி எவ்வாறு சாத்தியமானது என்பதைப் பகிர்ந்துகொண்டார். நிகழ்ச்சியை இணைந்து நடத்திய அமைப்புகளின் பொறுப்பாளர்களும் உரையாற்றினார்கள்.

முன்னதாக, திருச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமிகு பாலமுரளி வரவேற்றார். நிறைவில், மாவட்டத் திட்ட அலுவலர் திருமிகு அன்புசேகரன் நன்றி கூறினார்.

# தொடரும் புத்தகக்காட்சி இயக்கங்கள்

பொதுமக்களிடம் 'இல்லம் தேடிக் கல்வித் திட்ட'த்தைக் கொண்டுசேர்க்கும் விதமாகப் புத்தகக்காட்சிகளில் தவறாமல் பங்கேற்பது என்று முடிவைத் தீவிரமாகச் செயல்படுத்திவருகின்றனர் நம்முடைய தன்னார்வலர்கள். முன்னதாக, சென்னை புத்தகக்காட்சியில் 'இல்லம் தேடிக் கல்வி' அரங்கு அமைக்கப்பட்டது. இந்த அரங்கில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தன்னார்வலர்கள் தங்களின் மையக் குழந்தைகளுக்கு சொல்லித் தருவதற்காக உருவாக்கிய பாட மாதிரிகளை காட்சிப்படுத்தப்பட்டன. நம்முடைய அரங்குக்கு வந்த குழந்தைகளுக்கும், தன்னார்வலர்களுக்கும் இந்தப் பாட மாதிரிகள் அறிமுகப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டன. அதேபோல, பொதுமக்கள் நம் அரங்குக்கு வந்தபோது 'இல்லம் தேடிக் கல்வித் திட்டம்' எப்படி ஓர் அறிவியக்கமாக முன்னெடுக்கப்படுகிறது; கற்றல் இடைவெளியைப் போக்க இது எவ்வாறு ஒரு தொடர் நடவடிக்கையாக முன்னெடுக்கப்படுகிறது என்று விளக்கப்பட்டது. இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. தொடர்ந்து, திருவள்ளூர் புத்தகக்காட்சி, சிவகங்கை புத்தகக்காட்சிகளிலும் அரங்குகள் அமைக்கப்பட்டன. அங்கும் கிடைத்த வரவேற்பை ஒட்டி இந்த ஆண்டு முழுவதும் எங்கெல்லாம் புத்தகக்காட்சிகள் நடைபெறவுள்ளனவோ அங்கெல்லாம் பங்கேற்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்போதே அதற்காகத் தயாராகிவருகின்றனர் அந்தந்தப் பகுதி தன்னார்வலர்கள்.



## இல்லம் தேடிக் கல்வி இயக்க அரங்கு – திருவள்ளூர் புத்தகக்காட்சியில்







## இல்லம் தேடிக் கல்வி இயக்க அரங்கு – சிவகங்கை புத்தகக்காட்சியில்














## பள்ளி மேலாண்மைக் குழுவில் நம் தன்னார்வலர்கள்

ஏப்ரல் 30 அன்று தமிழகம் முழுவதும் பள்ளி மேலாண்மைக் குழுக்களின் மறுக்கட்டமைப்புத் தேர்தல் நடைபெற்றது. இந்தக் குழுக்களிலும் இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் தேர்தலில் போட்டியிட்டும் வாக்களித்தும் உள்ளனர். இதன் மூலமாக நமது இல்லம் தேடிக் கல்வி இயக்கம் தன்னார்வலர்கள் பலர் இக்குழுக்களில் கல்வியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## நூறாவது நாள் கொண்டாட்டம்

இல்லம் தேடிக் கல்வி இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட நூறாவது நாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள தன்னார்வலர்கள் தங்கள் மையங்களிலும், அந்தந்த பகுதியிலும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.
























செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் ஒன்றியம் புறங்கால் கிராமத்தின் இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர், கிராம தலைவர், உள்ளாட்சி பிரதிநிதிகள் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் கிராம இளைஞர்கள் மற்றும் பெற்றோர்கள் ஒத்துழைப்புடன் நடத்திய எளிமையான ஆனால் வண்ணமயமான ஆண்டு விழாவில் பங்கேற்று மகிழ்ந்தோம் தன்னார்வலர் பவித்ரா மற்றும் அவரது கணவர் குமரன் இருவரது அர்ப்பணிப்பு மிகுந்த பாராட்டுக்குரியது. அச்சிறுப்பாக்கம் ஒன்றிய ஆசிரியர் ஒருங்கிணைப்பாளரும் கலந்து கொண்டு சிறப்பித்தார் இடியுடன் கூடிய மழையிலும் நிகழ்வு அருமையாக நடந்தேறியது.







# அடுத்த பயிற்சி எப்போது?



களத்தில் செயல்படும் தன்னார்வலர்களுக்கு எவ்வளவோ கேள்விகள் - சந்தேகங்கள் தங்கள் பணியின்போது ஏற்படுவது இயல்பு. அதற்கான பதிலைப் பெறும் பகுதியாகவும், இரு தரப்பு உரையாடல் பகுதியாகவும் அமைகிறது இந்தப் பகுதி. செயல்பாட்டாளர்களிடமிருந்து வரும் கேள்விகளுக்கு இதழ் ஆசிரியரும், இல்லம் தேடிக் கல்வித் திட்ட சிறப்பு அலுவலருமான திருமிகு.இளம்பகவத் அவர்கள் பதில் தருகிறார்.

**ஜி.கலையரசி,** கண்டச்சிபுரம், விழுப்புரம்.

**குறைந்தபட்சம் 20 நாட்களுக்கேனும் வருகைப்பதிவினைப் பதிவேற்றி இருந்தால்தான் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், ஏப்ரல் மாதம் இல்லம் தேடிக் கல்வி இயக்கச் செயலியில் வருகைப்பதிவைச் சரியாகப் பதிவேற்ற இயலவில்லை. இதற்கு என்ன தீர்வு?**

கவலை வேண்டாம்!

எல்லாத் தன்னார்வலர்களுமே கைபேசி செயலி மூலம் தங்கள் வருகையைப் பதிந்துவருகின்றனர். சில தன்னார்வலர்களிடம் ஸ்மார்ட் போன் இல்லை என்றாலும்கூட அவர்களும் உறவினர்களின் கைபேசியிலிருந்து வருகையைப் பதிகின்றனர். ஆனால், சில சந்தர்ப்பங்களில் சிலர் இப்படித் தங்களுடைய வருகையைப் பதிய முடியவில்லை என்றும் தெரிவிக்கின்றனர். அசாதாரணமாக இப்படி பதிய முடியாத சூழலில், வருகைப் பதிவை ஒரு நோட்டுப் புத்தகத்தில் பதிவுசெய்து வைத்துக்கொள்ளலாம். அதையும் நாம் கவனத்தில் கொள்கிறோம்.

இன்னொரு விஷயம், இல்லம் தேடிக் கல்வி இயக்கத்தில் ஒரு மாதம் என்பது குறைந்தபட்சம் 20 வேலை நாட்கள் என்று கருதப்படுகிறது. எனவே 20 நாட்கள் வருகைப் பதிவு அவசியம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், கைபேசி செயலி மூலமாக மேற்கொள்ளப்படும் வருகைப் பதிவில் ஒருவேளை 20 நாட்களுக்குக் குறைவாக பதிவு இருந்தாலும்கூட, இதுவரை யாருக்கும் ஊக்கத்தொகை நிறுத்தப்படவில்லை.





**கே.இளையராணி,** நத்தம், திண்டுக்கல்.

**இல்லம் தேடிக் கல்வி இயக்கச் செயலியை அடிப்படை ஆய்வுக்குள்ளாக்கும்போது, அப்டேட்செய்தால் அடிப்படை ஆய்வானது மீண்டும் பழைய நிலைக்கு, அதாவது சிவப்பு நிறத்துக்கு வந்துவிடுகிறது. இதற்கு என்ன தீர்வு?**

செயலியை அடிப்படை ஆய்வுக்குள்ளாக்கும்போது ஒருமுறை பச்சை நிறத்துக்கு மாறிவிட்டாலே அதன் டேட்டா சர்வருக்கு அனுப்பப்பட்டு சேமிப்பில் இருக்கிறது என்று அர்த்தம். ஆகையால் செயலி அப்டேட் ஆன பிறகு சிவப்பு நிறம் வந்தாலும் கவலைப்படத் தேவை இல்லை. இதற்காக மீண்டும் அடிப்படை ஆய்வை மேற்கொள்ள வேண்டாம். அவ்வாறு செய்தால் அது ‘டுப்ளிகேட் என்ட்ரி’ என்று வரும்.

**ஸ்ருதி பிரியதர்ஷினி**, மேலப்பங்குடி, மதுரை.

**தவிர்க்க முடியாத மற்றும் சொந்தக் காரணங்களுக்காக இல்லம் தேடிக் கல்வி இயக்கத்திலிருந்து விலக வேண்டும் என்றால், என்ன செய்ய வேண்டும்?**

தன்னார்வலர்கள் சொந்தக் காரணங்களுக்காக இல்லம் தேடிக் கல்வி இயக்கத்திலிருந்து விலக வேண்டும் என்று விரும்பினால், இணைப்புப் பள்ளியின் தலைமையாசிரியர் அல்லது வட்டார ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் அல்லது வட்டார ஆசிரியர் பயிற்றுநரிடம் தகவல் தெரிவித்துவிட்டு விலகிக்கொள்ளலாம்.

**ஆர்.ரேவதி,** வள்ளுவம்பக்கம், ராணிப்பேட்டை.

**இல்லம் தேடிக் கல்வி இயக்க மையங்களில் தொடக்கநிலைக் கல்வி மாணவர்களோடு உயர் தொடக்கநிலைக் கல்வி பயிலும் மாணவர்களையும் இணைத்து நடத்தலாமா?**

இல்லம் தேடிக் கல்வி இயக்க மையங்கள் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள தொடக்க நிலைக் குழந்தைகளுக்குத் தனியாகவும், ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள உயர் தொடக்கநிலைக் குழந்தைகளுக்குத் தனியாகவும் நடைபெறுகிறது. சில இடங்களில், சில சந்தர்ப்பங்களில் உயர் தொடக்க நிலைத் தன்னார்வலர்களோ அல்லது தொடக்கநிலைத் தன்னார்வலர்களோ இல்லை என்றால், இரண்டு விதமான குழந்தைகளும் உரிய பாடங்களைப் படிப்பதற்கு அப்படி உதவலாம்.

**என்.அபிராமி,** கும்பம்பட்டி, சேலம்.

**கருவுற்ற தன்னார்வலர்கள் மகப்பேறுக் காலம் முடித்து மீண்டும் இல்லம் தேடிக் கல்வி இயக்கத்தில் சேர முடியுமா?**

கருவுற்ற தன்னார்வலர்கள் மகப்பேறுக் காலம் முடிந்து, அவர்களது உடல்நிலையானது சீர் அடைந்ததைப் பொருத்தும், அந்தக் குடியிருப்பில் புதிய தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டிருப்பதைப் பொருத்தும், ஒவ்வொரு நிகழ்வாகப் பரிசீலிக்கப்பட்டு இது போன்ற விஷயங்களில் முடிவு எடுக்கப்படும்.



பொதுவாக இதுபோன்ற கோரிக்கைகள் 'பாலூட்டும் தாயின் உடல்நிலை, குழந்தையின் உடல்நிலை ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும்' என்கிற மருத்துவ வழிகாட்டுதல்களையும் கவனத்தில் கொண்டே பரிசீலிக்கப்படும்.

**பி.சுமதி,** காஞ்சிபுரம்.

**பள்ளி மேலாண்மைக் குழுவில் கல்வி ஆர்வலர்களாக இணைந்துள்ள இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்கள் பணி என்ன?**

நம்முடைய தன்னார்வலர்கள் ஏற்கெனவே இல்லம் தேடிக் கல்வி இயக்கத்தின் மூலம் மாணவர்களின் கற்றல் இடைவெளியைப் போக்குவதற்கு உழைத்துவருகிறார்கள். இதே போன்று பள்ளியிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளியைப் போக்குவதற்கு தொடர்ந்து தங்களது சமூகப் பங்களிப்பை அந்தந்தப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் வகைகளில் செய்வது இவர்களின் கடமையாகும். மாணவர்களின் கற்றல் நிலை குறித்து பெற்றோரிடம் கல்வி ஆர்வலர்கள் தொடர்ந்து உரையாடி அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு வீட்டில் கல்வி கற்க உகந்த சூழல்களைப் பெற்றோர் ஏற்படுத்தித் தர அறிவுறுத்த வேண்டும். அதோடு, பள்ளிக்கும் பெற்றோருக்கும் ஒரு தகவல் தொடர்புப் பாலமாகவும் இவர்கள் இருக்க வேண்டும். பெற்றோருக்குத் தெரிவிக்க வேண்டிய முக்கியமான தகவல்களை கல்வி ஆர்வலர்கள் விளக்கமாகத் தெரிவித்து, கற்றல் நிலை தொடர்பில் சரியான புரிதலைத் தோற்றுவிக்க வேண்டும். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சந்திப்பு நிகழ்வுகளில் மாணவர்களின் கல்வி முன்னேற்றம் குறித்து விளக்கம் அளிப்பதற்கு ஆசிரியர்களுக்கு கல்வி ஆர்வலர்கள் உதவ வேண்டும். மாணவர்களின் கல்வி முன்னேற்றம் குறித்து பெற்றோர் எழுப்பும் சந்தேகங்களுக்கு உரிய விளக்கம் அளித்தல், அந்தச் சந்தேகங்களை ஆசிரியர்களுக்குத் தெரியப்படுத்துதல் ஆகிய பணிகளையும் கல்வி ஆர்வலர்கள் செய்தல் வேண்டும். பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மற்றும் பள்ளிகளுக்குப் புரவலர்களிடமிருந்து நன்கொடை திரட்டுதல் போன்ற செயல்களிலும் உதவிட வேண்டும்.

**ரெய்னாட் ரூபி,** திருவெறும்பூர், திருச்சி.

**இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்களுக்கு மூன்றாம் கட்டப் பயிற்சி எப்போது நடைபெறும்? மூன்றாவது கையேடுகள் எப்போது கிடைக்கும்?**

தன்னார்வலர்களுக்கான மூன்றாவது கையேடு மற்றும் மாணவர்களுக்கான செயல்வழிக் கற்றல் சுவரொட்டிகள் அச்சடிக்கப்பட்டு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன; விரைவில் அவை தன்னார்வலர்களுக்கு வழங்கப்படும். ஜூன் 1 முதல் தன்னார்வலர்கள் மூன்றாவது கையேட்டில் உள்ள பாடங்களைக் கற்பிக்கலாம். மூன்றாவது கையேட்டைப் படித்தாலே தானாகப் புரியும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளதால், இதற்கெனத் தனியாகப் பயிற்சி நடத்தப்படாது.

# நம்ம பிள்ளைங்க சாதிக்கணும்!

**நல்லம்மாள்**

தன்னார்வலர், கல்லணை, அலங்காநல்லூர், மதுரை.



சின்ன வயசுலேர்ந்தே படிப்பு மேல எனக்குப் பெரிய ஆர்வம். எங்க அப்பா சின்னண்ணன் ஒரு கடையில உதவியாளரா இருக்காங்க; அம்மா கிரிஜா வீட்டைக் கவனிச்சுக்குறாங்க. ரெண்டு பேருமே படிப்பு முக்கியம்னு சொல்வாங்க. அதனால, எங்க அண்ணன் நல்லையன், தங்கை ஸ்வேதா, நான் மூணு பேருமே படிப்புல கவனமா இருப்போம். எனக்கு, நான் படிச்சா மட்டும் பத்தாது; எல்லாருக்கும் சொல்லிக்கொடுக்கணும்னும் நெனைப்பேன்.

இதை என்னோட சின்ன வயசுலேயே எங்க பிச்சைக்கனி டீச்சரும், ஹெச்எம் ஹேமா ஜெயசீலியும் கவனிச்சு என்னை ஊக்கப்படுத்தினாங்க. பிச்சைக்கனி டீச்சர் பொம்மலாட்டக் கதைகள் வழியா பாடம் சொல்லிக்கொடுப்பாங்க. ஹேமா ஜெயசீலி டீச்சர் கைவினை பொருட்கள் செஞ்சு அது மூலமா பாடம் நடத்துவாங்க. அப்பவே ரெண்டு பேரும் என்கிட்ட கொடுத்து மத்த பிள்ளைங்களுக்குச் செஞ்சு காட்ட சொல்வாங்க.

நான் இப்போ காலேஜ்ல படிக்கிறேன். ஆனாலும், எங்க பகுதியில இருக்குற பசங்களுக்கு என்னால முடிஞ்ச காரியமா டியூஷன் எடுத்துக்கிட்டு இருந்தேன். எல்லாருமே கஷ்டப்படுற வீட்டுப் பிள்ளைங்க. ஆனா, சமயத்துல அவங்களுமே நாலு நாள் வருவாங்க, நாலு நாள் வர மாட்டாங்க. நான் அலுக்காமப்போய் 'வாங்கப்பா!'ன்னு சொல்லிக் கூப்பிட்டு வருவேன். எனக்கு மலர்னு ஒரு அத்தை இருக்காங்க. அவங்கதான் 'இல்லம் தேடிக் கல்வி இயக்கம்' தொடர்பா சொன்னாங்க. 'உன் ஆர்வத்தை நீ அங்கே காட்டு! இன்னும் நிறையப் பிள்ளைங்களுக்கு அது உதவியா இருக்கும்!' அப்படின்னு சொன்னாங்க. கடைசி நேரத்துலதான் போய் தன்னார்வலரா பேர் பதிவுசெஞ்சுகிட்டேன்.

எங்களுக்கு அலங்காநல்லூர்ல பயிற்சி கொடுத்தாங்க. ஆரோக்கியராஜ் பிரேமானந்த் சார், ஞானசேகரன் சார், சுதாகர் சார் மூணு பேரும் கொடுத்த பயிற்சியே அவ்ளோ அழகா இருந்துச்சு. பாட்டு பாடி, நடனம் ஆடி, கதை சொல்லி எப்படியெல்லாம் சந்தோஷமாவும், எளிமையாவும் பாடம் சொல்லிக்கொடுத்தா குழந்தைங்க ரசிப்பாங்கன்னு எங்களுக்குப் புரியவெச்சாங்க. ஏற்கெனவே டியூஷன் எடுத்த அனுபவத்தை இப்போ நான் நெனைச்சுப் பார்த்தேன். 'சரிதான், நம்ம மேலேயும் கொஞ்சம் குறை இருக்கு; நாம போர் அடிக்கிற மாதிரி பாடம் நடத்திட்டோம்போல!' அப்படின்னு யோசிச்சேன். இனி எப்படிக் கத்துக்கொடுக்கணும்னும் கத்துக்கிட்டேன். அதனால, என்னோட மையத்துல முதல் நாளே பிள்ளைகளை அசரடிக்கிற மாதிரி பொம்மலாட்டம், நாடகம்னு அசத்திட்டோம். என்கிட்ட ஒரு டெடி பியர் இருக்கு. அதைக் கையில வெச்சிக்கிட்டு, நானே அது பேசுற மாதிரிப் பேசி பாடம் நடத்தினேன். பிள்ளைங்ககிட்ட பெரிய ஆரவாரம்! இப்போ எங்க மையத்து அறையையே பல வண்ணங்கள்ல 'ப்ளே ஸ்கூல்' மாதிரி ஆக்கிட்டோம்.

தினம் ஒண்ணு யோசிப்பேன். பொம்மலாட்டம் பழைய மாதிரியே இருந்தா நல்லா இருக்காதுல்ல! அதனால, அதுல டோரா புஜ்ஜியை உள்ளே கொண்டுவந்துட்டேன்.

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகளையே புதிர்கள் போட்டு விளக்குவேன். தமிழ் எடுக்கும்போது ஔவையார், திருவள்ளுவர், பாரதி வேஷத்துல பிள்ளைகளை வரவழைச்சு அவங்களோட சேர்ந்து உரையாடல் மாதிரி பாடம் நடத்துவேன். வெறுமனே பள்ளிக்கூடப் பாடங்கள் மட்டும் இல்லை; சாலையில் எப்படிப் போறது, ஒவ்வொரு நிற வண்ண விளக்குக்கும், குறியீட்டுக்கும் என்ன அர்த்தம் இப்படியெல்லாம் வாழ்க்கைக் கல்வியும் சொல்லிக்கொடுப்பேன். இதையெல்லாம் செய்முறையா சொல்லிக்கொடுக்க நானே உபகரணங்களை உருவாக்கி வெச்சிருக்கேன்.

பொதுவா, கிராமங்கள்ல ஊர் - காலனி வித்தியாசம் இருக்கும்ல! இப்போ, 'இல்லம் தேடிக் கல்வி இயக்கம்' வந்த பிறகு அதுவே உடையுது. எல்லார் வீட்டுக் குழந்தைகளும் இங்கே ஒண்ணா வந்து போறாங்க. எல்லாப் பிள்ளைங்களும் நாளைக்கு நல்லாப் படிச்சு சாதிக்கணும்! சந்தோஷத்துலேயே பெரிய சந்தோஷம் எல்லாரும் சந்தோஷமா இருக்குற சூழல்தானே!

# ஞாயிறும் படிக்க கூப்பிடுறாங்க!




## பானுமதி

**தன்னார்வலர், களுத்தரிக்காப்பட்டி, கரூர்.**


எளிமையான குடும்பம் எங்களோடது. அம்மா பேரு தங்கம்மாள், கூலி வேலைக்குப் போறாங்க. அப்பா பேரு மருதமுத்து. ஐந்து வருஷம் முன்னாடி வரைக்கும் கூலி வேலைக்குப் போய்க்கிட்டிருந்தாங்க. இப்போ உடல்நிலை சரியில்லாம வீட்டுலேயே இருக்காங்க. சின்ன வயசில இளம்பிள்ளைவாதத்தால் நான் பாதிக்கப்பட்டேன். இரண்டு கால்களும் அதனால சூம்பிடுச்சு. மற்ற பிள்ளைங்களை மாதிரி ஓடி ஆட முடியாது. எங்கு போகணும்னாலும் அம்மாதான் இடுப்புல சுமந்துகிட்டு போகணும். அம்மாவுக்குத்தான் ரொம்ப கஷ்டம்.

எங்க சொந்த ஊர் கரூர்னாலும் படிப்பு, வேலைன்னு வாய்ப்பு தேடி தஞ்சாவூர், மாயவரம்னு வெவ்வேறு ஊர்கள்ல இருந்திருக்கோம். மாயவரத்துல ஒரு ஆதரவற்றோர் இல்லத்தில வேலை பண்ணினேன். என்னால் முடிஞ்ச வேலைகளை அங்கே செஞ்சுகிட்டே அண்ணாமலை பல்கலைக்கழகத்துல அஞ்சல்வழிக் கல்வி வழியா எம்.பி.ஏ. பட்டம் முடிச்சேன்.

கொரோனா காலத்தில் மாயவரத்துல சமாளிக்க முடியாம சொந்த ஊரான கரூருக்கே குடும்பத்தோடு திரும்ப வந்துட்டோம். எங்க இருக்கும்போதும் சமூகத்துக்கு எதாவது செய்யணும்னு இருக்கும். அப்படித்தான் இங்கேயுள்ள பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் உதவியோடு வீட்டிலேயே மாலை நேர வகுப்புகள் எடுத்துக்கிட்டிருந்தேன். அப்போதான் ‘இல்லம் தேடிக் கல்வி இயக்கம்’ தெரியவந்துச்சு. தேர்வுல கலந்துகிட்டு தேர்வானேன்.

தொடக்கத்துல மாணவர்கள் இல்லம் தேடிக் கல்வி மையத்துக்கு வர்றதுக்கு அவ்வளவு ஆர்வம் காட்டலை. நாங்களாத்தான் கூப்பிட்டோம். ஆனா, தொடர்ந்து முயற்சி செஞ்சு அவங்க இங்கே வந்த உடனே இங்கே பாடங்களைச் சொல்லிக்கொடுக்கிற முறைகளைப் பார்த்து, ஆசையோட வர ஆரம்பிச்சாங்க. இப்போ 22 மாணவர்கள் எங்க மையத்துக்கு வர்றாங்க. “அக்கா, ஞாயிற்றுக்கிழமையும்கூட க்ளாஸ் எடுங்கக்கா!”ன்னு கேட்குறாங்க. தினம் ஒரு கதை, ஒரு விளையாட்டுன்னு யோசிச்சுக்கிட்டு வந்து பாடம் நடத்தினா அவங்களோட உலகத்துக்குள்ள நம்மளால நெருக்கமா போக முடியுது. எனக்கு இன்னும் நிறைய செய்யணும்னு இருக்கு. இப்போ சக்கர நாற்காலியிலதான் வந்து போய்க்கிட்டிருக்கேன். மோட்டர் வாகனத்துக்கு அரசுகிட்ட விண்ணப்பிச்சிருக்கேன். அது கிடைச்சிடுச்சுன்னா இன்னும் விரிவா என் பணிகளைச் செய்வேன்!

# தொலைத்த படிப்பு மீண்டும் கிடைத்தது!





**முனீஸ்வரி**
பெற்றோர்
**கணக்கங்குடி, சிவகங்கை.**

எங்களுக்கு சொந்த ஊர் சிவகங்கைத்தான்னாலும், சென்னையில இருந்தோம். எங்க வீட்டுக்காரர் ரமேஷ், பைப் கம்பனி வேலையில இருந்தார். அவருக்குக் கேட்புத் திறன் குறைவு; பேச்சுத்திறன் கிடையாது. ஆனா, நல்ல மனுஷன். எங்களுக்கு ரெண்டு குழந்தைகள். மூத்த பிள்ளை ஸ்வேதா கனி, இப்போ பத்தாவது படிக்கிறாள். சின்ன பிள்ளை யுவராஜ். புத்திசாலித்தனமான பிள்ளை. வாழ்க்கை சந்தோஷமா போய்க்கிட்டிருந்துச்சு.

திடீர்னு தம்பிக்கு ஆறு வயசு இருக்கும்போது அவன் கால்ல பிரச்சினை உண்டானுச்சு. படிப்படியா கால் நடக்க முடியாமப்போயிடுச்சு. எங்கெங்கேயோ போனோம், எவ்வளவோ செலவழிச்சோம். என்னமோ நரம்புப் பிரச்சினைன்னு சொல்லிட்டாங்க. அப்போதான் பள்ளிக்கூடம் ஆர்வமா போக ஆரம்பிச்சுருந்தவன் உடம்பு முடியாம முடங்கிட்டான். இந்தப் பிரச்சினை எங்க வீட்டையே முடக்கிடுச்சு. எங்க போனாலும், அவனைத் தூக்கிக்கிட்டு போகணும். அவனைக் கவனிக்கவே ஒரு ஆள் வேணும். ஒத்தாசை உதவிக்கு ஆள் இல்லை. சொந்த ஊருக்கே நாம திரும்பிடலாம்னு முடிவெடுத்து சிவகங்கை வந்துட்டோம். கையோட கரோனா வந்துடுச்சு.

கொள்ளைநோய் ஊரை முடக்கும்போது நான் எங்கே என் பிள்ளையைப் படிக்க அனுப்புறது? வீட்டோட முடங்கிட்டான் என் பிள்ளை. பள்ளிக்கூடம் போற பிள்ளைங்களை ஏக்கமாப் பார்ப்பான். நான் பயந்துக்கிட்டு அனுப்பலை. பள்ளிக்கூடத்துல சேர்க்கலாம்னு போனப்போ இவனைச் சேர்த்துக்க யாரும் தயாரா இல்லை. அப்போதான் எங்க பக்கத்துலேயே இருக்குற புவனேஸ்வரி சாமி மாதிரி எங்களுக்கு உதவ வந்துச்சு. இந்த 'இல்லம் தேடிக் கல்வி இயக்கம்' சம்பந்தமா எல்லா விவரங்களையும் சொன்னுச்சு. பிள்ளை அதோட படிக்கப் போனான். ஆர்வமா பாடம் படிக்க ஆரம்பிச்சுட்டான். 'நம்ம தம்பி என்னமா வரையறான் தெரியுமா?; நம்ம தம்பி என்ன வேகமா ஒப்பிக்கிறான் தெரியுமா? படிப்புக்காக அவன் ஏங்கியிருக்கான்; எது சொல்லிக்கொடுத்தாலும் வேகமா படிச்சுக்குறான்'னு அது ஒவ்வொரு நாளும் சொல்லும்போது மனசுக்கு அவ்வளவு ஆறுதலா இருக்கும். கிட்டத்தட்ட 20 பிள்ளைங்களுக்கு புவனேஸ்வரி பாடம் எடுக்குது. விளையாட்டு சொல்லிக் கொடுக்கும், கதை சொல்லிக் கொடுக்கும். அடுத்து, இவனைப் பள்ளிக்கூடத்துல கொண்டுபோய் சேர்க்கவும் அதுவே ஏற்பாடு பண்ணுச்சு.

இப்படித்தான் மடப்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில தம்பியைச் சேர்த்தோம். இப்போ ஆறாம் வகுப்பு அவன் படிக்கிறான். அங்கே ஒரு நல்ல மனுஷன். பாபு சார். தம்பி மேல அக்கறையோட பாடம் சொல்லிக்கொடுக்கறதோட தம்பிக்கு உதவித்தொகை கிடைக்கவும் அவரே ஏற்பாடு பண்ணினார். சும்மா இல்லை, விஏஓ, ஆர்ஐ, தாசில்தார்னு ஒவ்வொருதருக்கிட்டேயும் தம்பியைத் தூக்கிட்டுப்போ அலைஞ்சு திரிஞ்சு வாங்கிக் கொடுத்தார். இப்போ அவனுக்கு ரெண்டு பேர் பக்க பலமா இருந்து பாடம் சொல்லிக்கொடுக்கிறாங்க. எங்கே படிப்பு அப்படியே போய்டுமோன்னு பயந்தேன். என் பிள்ளைக்குத் தொலைஞ்ச படிப்பு மீண்டு வந்துருச்சு!

# படிச்சுப் பெரியா ஆளா வருவேன்!



**மி.ஜெனித் குமார்**

ஏழாம் வகுப்பு மாணவர்
மணல் மாதா மேல்நிலைப் பள்ளி
சொக்கன்குடியிருப்பு, தூத்துக்குடி மாவட்டம்.

எங்க அப்பா ஒரு கொத்தனார். எல்லாருக்கும் வீடு கட்டிக் கொடுப்பாங்க. ஆனா, கூலி வேலைதான். காலையில ஒன்பது மணிக்கு வேலையை ஆரம்பிக்கணும். அதுக்கு முன்னாடியே வீட்டுலேர்ந்து கிளம்பணும். சமயத்துல ஆறு மணிக்கே கிளம்பிடுவாங்க. ராத்திரி வீட்டுக்கு வரவும் எட்டு மணி ஆகிரும். வீட்டுல நான், எங்க அக்கா ஜெனிஃபர், அண்ணன் நிஷாந்த், தம்பி அந்தோனி ராபின்னு நாலு பேர். அம்மா வீட்டுல சமையல்லாம் முடிச்சுட்டு, தட்டி முடையறது, புளி குத்துறது இப்படியான வேலைகளுக்குப் போவாங்க. சொல்லிக்கொடுக்க வசதி இல்லை. கஷ்டப்பட்டு படிச்சேன். ஆனாலும், மண்டையில எதுவும் நிக்காதது மாதிரியே இருக்கும். அதுவும் இந்தக் கணக்குப் பாடம் வந்து தொலையாது.

கரோனாவுக்கு அப்புறம் பள்ளிக்கூடம் நடக்கவே இல்லையா, எல்லாம் மறந்துபோச்சு. அப்போதான் அஞ்சாவது வகுப்புக்கு நான் போகணும். ஒரு வருஷம் முழுக்க படிப்பு நடக்கலை. அப்படியே ஆறாவது போய்ட்டேன். புத்தகங்கள் முன்னைவிட இப்பம் நிறைய ஆயிடுச்சு. பள்ளிக்கூடம் நடக்காம எப்படிப் படிக்கிறது? படிக்கிற ஆசையே போய்டுச்சு. அவ்ளோதான்னு நெனைச்சுக்கிட்டு இருந்தேன்.

அப்போதான் ‘இல்லம் தேடிக் கல்வித் திட்டம்’ வந்துச்சு. எங்க வீட்டுக்குப் பக்கத்துல உள்ள மையத்துக்குப் போக ஆரம்பிச்சேன். பிரதீபா அக்கா அங்கே சொல்லிக்கொடுப்பாங்க. அவங்கதான் தினம் நான் தவறாம அங்கே போகக் காரணம். விளையாட்டாவே எல்லாத்தையும் சொல்லிக்கொடுத்துடுவாங்க. ‘மூளைக்கு வேலை’ன்னு ஒரு கணக்கு. விளையாட்டு மாதிரி ஜாலியா இருக்கும். முன்னாடி கணக்குன்னா கஷ்டம். இப்போ கணக்கு எனக்கு ஈஸியா வருது. தினம் சாயுங்காலம் அஞ்சரை மணிக்கு மையத்துக்குப் போவேன்; ஏழு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துடுவேன்.

எனக்கு இப்போ படிப்பு நல்லா வருது. பள்ளிக்கூடத்துல விஜிதா டீச்சர்தான் எங்க டீச்சர். அவங்களும் என் மேல பிரியமா இருப்பாங்க. இப்போ நான் நல்லாப் படிக்கிறேன்கிறதுல அம்மா, அப்பாவுக்கும் சந்தோஷம்; விஜிதா டீச்சருக்கும் சந்தோஷம். ‘படிச்சுப் பெரிய ஆளா வரணும்’னு சொல்வாங்க; வருவேன்!

ஆயிஷா இரா.நடராசன்

# விதியை மாற்றிய வீதிப் பள்ளிகள்

உண்மையான கல்வி என்ன செய்யும்?

இந்தக் கேள்விக்கு இத்தாலிய மக்கள் கல்வியாளர் பாதிரியார் ஆண்ட்ரூ பெல் நாம் சற்றும் எதிர்பார்க்க முடியாத பதிலை தருவார். "உண்மையான கல்வி உங்களை, உங்கள் சமூகச் சூழலை எதிர்த்துக் கொதிப்படைய வைக்கும். பிறகு நீங்கள் தூங்க மாட்டீர்கள். உங்களுக்கு உணவு செல்லாது. உண்மையான கல்வி உங்களை உங்களுக்கு எதிராகவே திருப்பிவிடும்!"


ஆண்ட்ரூ பெல் இப்படிச் சொல்வதன் முழுமையான அர்த்தம், 'மாற்றத்தைப் பற்றிச் சிந்திப்பவர்கள் அந்த மாற்றத்தை உண்டாக்குவதற்கு, தானே களம் இறங்கிவிடுவார்கள்' என்பதுதான்!

ஆண்ட்ரூ பெல் 'வீதியும் பள்ளியும்' எனும் தலைப்பில் ஆற்றிய உரையில்தான் மேலே நீங்கள் வாசித்த மேற்கோள் இருக்கிறது. இந்த உரை நிகழ்த்தப்பட்ட ஆண்டு எது தெரியுமா? 1789.

சொன்னால் நம்ப மாட்டீர்கள்... நானும் முதலில் நம்பவில்லை. உலகின் முதல் வீதிப் பள்ளி நமது சென்னையில்தான் ஆரம்பித்திருக்கிறது. நம்முடைய 'இல்லம் தேடிக் கல்வி இயக்கம்'போல அன்று ஆண்ட்ரூ பெல் மலபார் அகதிகள் குழந்தைகளுக்காக 1787இல் ஆரம்பித்த ஓர் இயக்கம்தான் வீதிப் பள்ளி இயக்கம்.

அன்றைய காலகட்டத்தில் பகல் முழுவதும் சென்னையின் ஏழை எளிய குழந்தைகள் பல்வேறு வேலைகளுக்கும் அனுப்பட்ட காலம் அது. கால் வயிறு நிரப்பிட கடும் உடல் உழைப்பு. கூலியோ பெரும்பாலும் தரமற்ற உணவாகத்தான் இருக்கும். சாதி வெறியும்

**ஆண்ட்ரூ பெல்லுடைய வீதிப் பள்ளிகள் குதூகலமானவை. பாட்டு, கூத்து, கும்மி என அனைத்து வகை திறன்களுக்கும் அங்கே இடம் இருந்தது. 'நீ எதைக் கற்பித்தாய்... எதைக் கற்றுக்கொண்டாய்!' என்றுதான் கேட்பாராம் ஆண்ட்ரூ பெல்!**



தீண்டாமையும் பேயாகப் பிடித்தாட்டிய காலகட்டம் அது.

ஆண்ட்ரு பெல் அடிகளார் - பிறந்தது ஸ்காட்லாந்து. பிறந்த வருடம் 1753. அந்தக் காலத்து ஸ்காட்லாந்திலும் எல்லாரும் கல்வி கற்றுவிடும் சூழல் இல்லை. அங்கும் மேல்குடிக்கே அந்த வாய்ப்பு வாய்த்தது. கல்வி கற்றிட அன்று ஆண்ட்ரு பெல் கண்டறிந்த எளிய வழி பாதிரியார் ஆவது! ஆமாம், பாதிரியார் சேவை நோக்கிச் செல்பவர்களுக்குக் கல்வி வாய்ப்புகள் கிடைக்கும். இப்படிப் படித்துத் தேர்ந்தவர்தான் ‘கணிதமும் அறிவியலும் இரண்டு கண்கள்’ என்று பிற்காலத்தில் அறிவித்தார்.

அறிவியல் பாடமானது, ‘இயற்கைத் தத்துவ இயல்’ என்று பெயரில் அப்போது அழைக்கப்பட்டது. முதலில் அமெரிக்கக் கறுப்பினக் குழந்தைகளுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணிக்க வெர்ஜினியாவுக்குப் பயணிக்க 1774இல் கப்பல் ஏறினார். அது வழியில் கவிழ்ந்துவிட்டது. நீச்சல், பட்டினி, கடுங்குளிர் எனப் படாதபாடு பட்டு, கடலோடிகளால் மீட்கப்பட்டு, மலேஷியா வழியாக அவர் கரை சேர்ந்த இடம்தான் நமது சென்னை. இங்கு அவர் வந்தடைந்த ஆண்டு 1787.

இங்கிருந்த கிழக்கிந்திய கம்பெனி மற்றும் ஆங்கிலேய ராணுவ அதிகாரிகளிடையே ஆன்மிகச் சொற்பொழிவு ஆற்றுவதற்கு இங்கிலாந்து தேவாலயம் அவரை நியமித்தது. ஆனால், 1789ஆம் ஆண்டில் குப்பத்துக் குழந்தைகள், ஆதரவற்றோர், அகதி சிறார்கள் என வீதிகளில் வாழ்கிறவர்களுக்கு மாலை நேரக் கல்வி என்று புதிய சகாப்தம் ஒன்றை ஏற்படுத்தினார்.

ஆண்ட்ரு பெல் தன்னுடைய மாலை நேர வீதிப் பள்ளிகளை மாலை நாலரை மணிக்குத் தொடங்குவார். பள்ளி இரவு ஒன்பது பத்து மணி வரை நீடிக்கும். அவரது கல்வி போதிக்கும் முறைக்கு ‘மானிட்டர் சிஸ்டம்’ என்று கல்வியியல் துறை பெயர் சூட்டியுள்ளது. இதில் விசேஷம் என்னவென்றால், மாணவர்களே - அதாவது நன்கு படிக்கும் சிறுவர்களே - ஏனையோருக்குக் கல்வி கற்பிக்கும் தன்னார்வலர்களாகச் செயல்பட்டனர். ஆண்ட்ரு பெல் சற்றே சூட்டிகையான சிறு குழுவுக்குப் போதிப்பார். அவர்கள் தங்களுக்குத் தெரிந்தவற்றைத் தங்கள் பகுதி தோழர்களுக்குப் போதிப்பார்கள். மொத்தம் ஏழு இடங்களில் வீதிப் பள்ளி நடந்தது.



படைப்பூக்கம் மிக்க கற்பித்தல் முறை ஆண்ட்ரு பெல்லுடைய தனித்துவம் ஆகும். நீண்ட கழியைக் கொண்டு குழந்தைகளை நையப் புடைப்பதையே கற்பித்தலுக்கான சிறந்த வழிமுறையாக ஆசிரியர்கள் அன்றைக்குக் கையாண்டுவந்தனர். ஆண்ட்ரு பெல் இதைக் கடுமையாக எதிர்த்தார். அவருடைய வீதிப் பள்ளிகள் குதூகலமானவை. பாட்டு, கூத்து, கும்மி என அனைத்து வகை திறன்களுக்கும் அங்கே இடம் இருந்தது. நல்ல பாடகர் பிறருக்குப் பாடக் கற்றுத் தருவார். நல்ல மேளக்காரர் மேளம் கொட்ட கற்பித்தார். ‘நீ எதை கற்பித்தாய்... எதைக் கற்றுக்கொண்டாய்!’ என்றுதான் கேட்பாராம் ஆண்ட்ரு பெல்.

இங்கிருந்து பின்னர் ஏனைய பல இடங்களுக்கும், ‘மெட்ராஸ் மானிட்டரி சிஸ்டம்’ என்ற பெயரில் தனது வீதிப் பள்ளி முறையைக் கொண்டுசென்று விதைத்தார் ஆண்ட்ரு பெல். காலம் கடந்தும், எங்கெல்லாம் பள்ளிக்கூடங்களுக்கு வெளியே கற்பித்தல் இயக்கம் நடக்கிறதோ அங்கெல்லாம் பரவுகிறார் ஆண்ட்ரு பெல்!



மருதன்

# ஜனநாயகமும் விடுதலையும்

**ராமச்சந்திர குஹா**

உலகின் மிகப் பெரிய ஜனநாயகமாகத் திகழும் நவீன இந்தியாவின் முதன்மையான வரலாற்றாசிரியர்களுள் ஒருவர் ராமச்சந்திர குஹா. நூலாசிரியராகவும் கட்டுரையாளராகவும் பேச்சாளராகவும் பொதுமக்களுக்காக இயங்கும் ஓர் அறிவுஜீவியாகவும் கடந்த 35 ஆண்டுகளாக இடைவெளியின்றி செயல்பட்டுவருகிறார் குஹா. இப்படியெல்லாம் நான் மாறுவேன் என்று நினைத்துக்கூடப் பார்த்ததில்லை என்று இன்று புன்னகைக்கிறார்.

### ➔ எளிமையாக எழுதுவது தவறா?

உண்மையில் குஹா ஒரு வரலாற்றாசிரியர்தானா எனும் கேள்வியை இரு தரப்பினர் எழுப்பிக்கொண்டிருக்கின்றனர். முதலாவது தரப்பினரின் கவலை அவர் எழுத்து தொடர்பிலானது. எப்படி இவரால் எல்லோருக்கும் புரியும்படி எளிமையாக எழுத முடிகிறது? இரண்டாவது தரப்பினரின் கவலை அவருடைய அரசியல் தொடர்பிலானது. எப்படி இவரால் இவ்வளவு தீவிரமாக அரசியல் பேச முடிகிறது? செய்தித்தாள், பத்திரிகை, தொலைக்காட்சி என்று எல்லா இடங்களிலும் எல்லோரோடும் ஏன் இவர் வாதப் போர் புரிந்துகொண்டிருக்கிறார்?

இரு தரப்பினருக்கும் ஒரே பதிலைச் சொல்கிறார் குஹா. “அரசியலும் வரலாறும் மக்களுக்கானவை. எனவே அவர்களுக்குப் புரியும்படி எழுதுகிறேன். அவர்கள் தரப்பில் நின்று பேசுகிறேன்!”

### ➔ சமூகவியலில் இருந்து வரலாற்றுக்குள்...

நேருவின் இந்தியாவில் பிறந்து, வளர்ந்தவர் குஹா. 1958ஆம் ஆண்டு தெஹ்ராடூனில் ஒரு தமிழ்க் குடும்பத்தில் பிறந்தார். அப்பா சுப்பிரமணியன் ராமதாஸ் குஹா, வேதியியலாளர். பள்ளி ஆசிரியராக அம்மா இருந்த அதே இடத்தில் தன் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தார் குஹா. பின்னர் புகழ்பெற்ற டூன் பள்ளியில் சேர்ந்தார். எழுத்துடன் பரிச்சயம் ஏற்பட்டது இங்கேதான். அதே பள்ளியில் படித்துக்கொண்டிருந்த அமிதாவ் கோஷோடு இணைந்து பள்ளி இதழைத் தயாரிக்கும் பொறுப்பை குஹா ஏற்றுக்கொண்டார். இன்றும் இருவரையும் இணைக்கும் ஒரு புள்ளியாக வரலாறு இருக்கிறது.

குஹாவின் பட்டப்படிப்பில் வரலாறு அல்ல, பொருளாதாரமும்

> “பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டோம் என்பது உண்மைதான். ஆனால், நம் தேசத் தந்தைகள் அடைய விரும்பிய விடுதலையைத்தான் நாம் பெற்றிருக்கிறோமா?”



## நவீன இந்தியாவைத் தெரிந்துகொள்ள உதவும் 3 நூல்கள்




**நவீன இந்தியா, சுமித் சர்க்கார்**




**இந்தியா என்கிற கருத்தாக்கம்**
**சுனில் கில்நானி**




**இந்திய வரலாறு 1757-1947**
**பிளாசி முதல் பிரிவினை வரை**
**சேகர் பந்தோபாத்யாய்**

சமூகவியலும்தான் இடம்பெற்றிருந்தன. இந்தியக் குடியியல் பணிகளில் சேரும் விருப்பத்தோடு தேர்வு எழுதினார். தேர்ச்சி பெற முடியவில்லை. ஆனால், பத்திரிகை அலுவலகம் தொடங்கி பல்கலைக்கழகம் வரை பல இடங்களில் வாய்ப்புகள் வந்தன. ஏற்கவில்லை. அவராகவே சில வாய்ப்புகளை எதிர்பார்த்துக் காத்திருந்தார். கைகூடவில்லை.

இறுதியில் சமூகவியல் துறையில் இணைந்து ஆய்வுப் படிப்பைத் தொடங்கினார். இந்தியப் பழங்குடிகளின் வாழ்வை ஆராய்ந்த பிரிட்டிஷ் மானுடவியலாளர் வெரியர் எல்வினின் படைப்புலகம் அவருக்கு அறிமுகமானது அப்போதுதான்.

எல்வினின் எழுத்துகளின் மீதும் செயல்பாடுகளின் மீதும் ஏற்பட்ட ஈடுபட்டால் சமூகவியலில் இருந்து வரலாற்றின் மீது குஹாவின் ஆர்வம் விரிந்து சென்றது. வெரியர் எல்வினின் வாழ்க்கை வரலாற்றை (1999) விரிவாக எழுதி வெளியிட்டார் குஹா. எல்வினையும் இந்தியப் பழங்குடி உலகையும் புரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கான அருமையான கையேடாக இன்றும் இந்நூல் திகழ்கிறது.




ஒரு வரலாற்றாசிரியர் இலக்கியத்துக்கு நெருக்கமாகச் செல்வது வாழ்க்கை வரலாறு எழுதும்போதுதான் என்பார் குஹா. எல்வினுக்கு முன்பும் சரி, பின்னரும் சரி, இந்தியச் சூழலியல் வரலாறு குறித்து சில முக்கியமான நூல்களைத் தொடர்ச்சியாக எழுதினார் குஹா.

அடுத்து என்ன எனும் கேள்வி அதன் பின்னர் அவருக்கு எழவில்லை. ஒரு சுதந்திர வரலாற்றாசிரியராக மாறினார் குஹா. இந்தியா சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகளுக்குப் பிறகு, 2007ஆம் ஆண்டு குஹாவின் ‘இந்தியா: காந்திக்குப் பிறகு’ (India After Gandhi) வெளிவந்தது. 1947இல் தொடங்கி அன்றைய தேதி வரையிலான அரசியல் வரலாற்றைக் கோவையாகவும் விரிவாகவும் பதிவுசெய்தது இந்த பிரமாண்டமான நூல். அதன் விரிவாக்கப்பட்ட பதிப்பு 2017ஆம் ஆண்டு வரையிலான நிகழ்வுகளை உள்ளடக்கி வெளிவந்தது.

குஹா யார் என்பதை நமக்கும் உலகுக்கும் அழுத்தந்திருத்தமாக உணர்த்தும் படைப்பாக இது மாறிப்போனது. ஒரு பக்கம் விமர்சகர்களின் பாராட்டுகளைத் திரட்டிக்கொண்டதோடு விற்பனையிலும் குறிப்பிடத்தக்க சாதனையைப் புரிந்தது. நவீன இந்திய வரலாற்றைக் கற்க விரும்புவர்களுக்கான நுழைவாயிலாகப் பலரும் கருதுவது இந்நூலைத்தான். குஹாவின் அரசியல் நிலைப்பாடு என்னவென்பதை இந்நூல் தெளிவுபடுத்திவிடுகிறது.

இந்தியாவின் முதல் மேலாண்மைக் கழகம் (ஐஐஎம்) கல்கத்தாவில் நிறுவப்பட்டது. பொருளாதாரம், வணிகவியல், மனித வள மேம்பாடு, சமூகவியல் என்று தொடங்கி பல துறைகளில் இணைந்து படிக்க முடியும். குஹா தனது முனைவர் ஆய்வுப் பட்டத்தைப் பெற்றது இங்கேதான். அவருடைய ஆய்வுப் பொருள், உத்தராகண்ட்டின் சமூக வனவியல் வரலாறு தொடர்பிலானது. குறிப்பாக, சிப்கோ இயக்கம். கல்கத்தா ஐஐஎம் நிறுவனத்தில் உள்ள படிப்புகளையும், அங்குள்ள வசதிகளையும் வாசித்து அறிந்துகொள்ள அதன் தளத்திலேயே விரிவான தகவல்கள் உண்டு: https://www.iimcal.ac.in/




### ஜனநாயகம்

இந்திய ஜனநாயகத்தை எப்போது, எப்படிக் கொண்டாட வேண்டும் என்பதை மட்டுமல்ல, அதன் போதாமைகளை எப்போது, எப்படிச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதையும் நன்கறிந்தவர் குஹா.

“பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டோம் என்பது உண்மைதான். ஆனால், நம் தேசத் தந்தைகள் அடைய விரும்பிய விடுதலையைத்தான் நாம் பெற்றிருக்கிறோமா? இந்தியா உடைந்துபோய்விடவில்லை என்பது உண்மை. ஆனால், வேறுபாடுகளின்றி, பிளவுகளின்றி, சமய மோதல்களின்றி ஒரே தேசமாக நாம் திரண்டிருக்கிறோமா? நம் ஜனநாயகம் அனைவருக்குமானதாக இருக்கிறது? நாம் உருவாக்கிய சமூக அமைப்புகள் அனைவரையும் ஒன்றுபோல நடத்துகிறதா? தேர்தல் வெறும் சடங்காக மாறிவிட்டதா? வெற்றி பெற்றுவிட்டால் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு யாரும் எந்தக் கேள்வியும் கேட்க முடியாது என்பது என்ன மாதிரியான ஜனநாயகம்?”

### வழிகாட்டும் காந்தி

காந்தி நான்கு விடுதலைகளை முன்வைக்கிறார். இவற்றை இன்றும் நாம் கைகொள்ள முடியும் என்று நம்புகிறார் குஹா. வன்முறையைத் துறந்து, அகிம்சையைக் கைக்கொள்ளும் அரசியல் விடுதலை நம்முடைய முதல் தேவை. உலகில் சர்வாதிகாரம் எங்கே தலை தூக்கினாலும், அநீதியான சட்டங்களை யார் உருவாக்கினாலும் மக்கள் அகிம்சையைப் பிரயோகித்து எதிர்க்க வேண்டும். இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலான நல்லுறவின் மூலம் கிடைக்கும் பண்பாட்டு விடுதலை நம் இரண்டாவது தேவை என்றார் காந்தி. எல்லாச் சமயங்களுக்கு இடையிலும் உரையாடலும் பரிமாற்றமும் நிகழ வேண்டும். அப்போதுதான் சமூக அமைதி சாத்தியம்.

தீண்டாமை உள்ளிட்ட சாதியப் பாகுபாடுகளைக் களைவதன் மூலமே சமூக விடுதலை பெற முடியும் என்றார் காந்தி. நான்காவதாக, சுதேசி இயக்கத்தின் மூலம் கிடைக்கும் பொருளாதார விடுதலை. இயற்கையைச் சேதப்படுத்தாத, சூழலுக்கு அழிவைக் கொண்டுவராத பொருளாதாரம் என்று இன்று இதனை அர்த்தப்படுத்திக்கொள்ளலாம்.

இரண்டு பாகங்களில் 2,000 பக்கங்களுக்கு மேல் காந்தியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார் குஹா. முதல் பாகம் பிரிட்டனிலும் தென் ஆப்பிரிக்காவிலும் அவர் வாழ்ந்த காலகட்டத்தைப் பதிவுசெய்கிறது என்றால், இரண்டாவது பாகம் முதல் உலகப் போர் தொடங்கும் 1914 ஆம் ஆண்டில் தொடங்கி காந்தியின் இறுதிக்கணங்கள் வரை பதிவுசெய்கிறது.

குஹாவின் ஆய்வுலகின் மையமாக காந்தி திகழ்கிறார். இரண்டாம் உலகப் போரில் லண்டன் மீது குண்டுகள் வந்து விழுந்தபோது வாய்விட்டு அழுதவர் காந்தி. நாம் இன்னும் இந்து பாகிஸ்தானாக மாறாமல் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் அவர்தான் என்கிறார் குஹா. அவரைப் பொருத்தவரை காந்தி இந்தியாவுக்கானவர் அல்ல, உலகுக்கானவர். இதன் பொருள் காந்தி விமரிசனங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதல்ல என்கிறார் குஹா. எனக்கு காந்தி பிடிக்கும். அதற்காக அவருடைய குறைகள் மீது நான் வெள்ளை அடிப்பதில்லை என்கிறார் அவர்.

### முழுமையான ஜனநாயகமே முக்கியம்

நடப்பு அரசியலை உன்னிப்பாகக் கவனித்து குஹா எழுதும் பத்திகள் காரசாரமாக இணையத்தில் விவாதிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு புதிதாக வெளிவந்திருக்கும் குஹாவின் நூல், ‘தி ரிபல்ஸ் எகைன்ஸ்ட் ராஜ்’ (The Rebels Against Raj). காலனிய காலத்தில் இந்தியாவின் பக்கம் நின்ற ஏழு அயல்நாட்டு கலகக்காரர்களை இதில் அறிமுகப்படுத்துகிறார். அன்னி பெசண்ட், காந்தியின் வளர்ப்பு மகள் என்று அழைக்கப்படும் மீரா பென் (இயற்பெயர் மேடலின் ஸ்லேட்) உள்ளிட்டவர்கள் இதில் இடம்பெறுகிறார்கள். எல்வின்போல இவர்களும் இந்தியாவோடு கலந்துவிட்டவர்கள், இந்தியர்களாகவே மாறிவிட்டவர்கள் என்கிறார் குஹா.

இந்தியாவை ஒரு வல்லரசாகக் கற்பனை செய்பவர்களோடு இணைய மறுக்கிறார் குஹா. மெய்யான, முழுமையான ஜனநாயக நாடாக இந்தியா மலர்வதுதான் நம் அனைவருக்கும் முக்கியமானது என்கிறார் உறுதிபட. அதுதான் உண்மையான பலமும்கூட!

# மூன்று வரம்

சங்கரன் கதை நம்ப முடியாத கதை. ஆனால், நல்ல கதை. சங்கரனுக்கு அப்பா அம்மா என்று யாரும் இல்லை. அவனிடம் கொஞ்சம் சொத்து இருந்தது. இப்போது இல்லை. சங்கரன் இரக்கம் உள்ளவன்; இளகிய மனசுக்காரன். கையில் இருந்ததை எல்லாம் கஷ்டப்பட்டவர்களுக்குக் கொடுத்துவிட்டான். இப்போது அவன் கஷ்டப்படுகிறான். சாப்பாட்டுக்குக் கஷ்டம். துணிமணிகளுக்குக் கஷ்டம். ஊரில் எல்லோரும் அவனை "அசடு! அசடு" என்று கிண்டல் செய்தார்கள். அந்த ஊரில் வயதான ஒரு தாத்தா இருந்தார். அவர் மட்டும் சங்கரனைப் பார்த்து பரிதாபப்பட்டார். ஒருநாள் சங்கரனைக் கூப்பிட்டார்.




இப்படிச் சொன்னதோடு மட்டும் நிற்கவில்லை. கொஞ்சம் கட்டுச்சோறும் கட்டிக் கொடுத்தார். சங்கரன் கட்டுச்சோறு எடுத்துக்கொண்டு புறப்பட்டான். காட்டில் கொஞ்ச தூரம் போவதற்குள் கட்டுச்சோறு தீர்ந்துவிட்டது.

சங்கரன் பசியில் தள்ளாடினான். வழியில் ஒரு குடிசை இருந்தது. குடிசை வாசலில் ஒரு அம்மா இருந்தார். சங்கரனைப் பார்த்து அந்த அம்மா குடிசைக்குள் கூப்பிட்டார். சங்கரனுக்குச் சாப்பாடு போட்டார். சங்கரன் வயிறாரச் சாப்பிட்டான்.





சங்கரனுக்கு அந்த அம்மா கொஞ்சம் கட்டுச்சோறும் கட்டிக்கொடுத்துவிட்டார். அதை எடுத்துக்கொண்டு சங்கரன் பயணத்தைத் தொடர்ந்தான்.

காட்டைப் பாதி கடப்பதற்குள் அந்தக் கட்டுச்சோறும் தீர்ந்துவிட்டது. மறுபடியும் சங்கரனைப் பசி வாட்டியது. அந்த நேரம் சங்கரன் ஒரு தோட்டத்தைப் பார்த்தான். அந்தத் தோட்டத்தில் கொய்யா மரங்களும், மாமரங்களும் இருந்தன. அங்கு ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார். அந்தப் பெரியவர் சங்கரனைப் பார்த்து இரக்கப்பட்டார். கூப்பிட்டு சாப்பாடு போட்டார்.




சங்கரனுக்கு கொஞ்சம் சோறும் கட்டிக்கொடுத்தார். காட்டைக் கடந்தான். தாத்தா சொன்னது போல பெரிய ஆறு ஒன்று ஓடியது.

ஆழமான ஆறு. வெள்ளம் கரை புரண்டு ஓடியது. எப்படிக் கடப்பது என்று யோசித்தான். அப்போது முதலை ஒன்று தண்ணீருக்குள் இருந்து தலையைத் தூக்கிப் பார்த்தது. சங்கரன் முதலையைப் பார்த்தான். முதலையிடம் ஆற்றைக் கடக்க வேணும். “முனிவரைப் பார்க்க வேணும். வரம் கேட்க வேணும். முதலையே! உதவி செய்வாயா?” என்று கேட்டான். முதலை ஒப்புக் கொண்டது.

முதலையின் முதுகில் சங்கரன் ஏறிக்கொண்டான்.

முதலை நீண்ட நேரம் தண்ணீரில் நீந்திப் போனது.

கடைசியில் முனிவர் இருந்த சோலையின் கரையில் கொண்டுபோய் சங்கரனைவிட்டது.

சங்கரன் மகிழ்ச்சி அடைந்தான். முதலையின் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

சரி என்று சொல்லிவிட்டு சங்கரன் சோலைக்குள் சென்றான்.

அது சின்னஞ் சிறு சோலை. மரம் செடி கொடிகள் அடர்த்தியாக இருந்தன. சோலை குளிர்ச்சியாக இருந்தது. கொஞ்சம் இருட்டாக இருந்தது. சோலையில் எந்த அரவமும் இல்லை. குயில்கள் மட்டும் பாடிக்கொண்டு இருந்தன.

“முதலையே முனிவரிடம் உனக்காக ஏதும் கேட்க வேணுமா?” என்று கேட்டான்.

முதலை உடனே சொன்னது. “ஆமாம் மகனே! என் தொண்டையில் முள் ஒன்று சிக்கி உள்ளது. வலி தாங்க முடியவில்லை, வலி போக முனிவரிடம் ஒரு மார்க்கம் கேட்டு வா!’ என்று முதலை சொன்னது.

சங்கரன் சோலையில் முனிவரைத் தேடினான். முனிவரைக் காணவில்லை.

‘ஐயா! ஐயா!’ என்று சத்தம் போட்டு அழைத்தான். பதிலுக்கு ஒரு சத்தமும் இல்லை. சங்கரனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

ஊரில் எல்லோரும் ‘அசடு! அசடு!’ என்று கேலி பேசுவது ஞாபகத்துக்கு வந்தது.

சங்கரனுக்குக் கண்ணீர் வந்துவிட்டது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். தனக்காக இல்லாவிட்டாலும், வழியில் உதவி செய்த அம்மா,

பெரியவர், முதலை மூன்று பேருக்காக எப்படியும் முனிவரைப் பார்க்க வேண்டும் என்று மனதில் உறுதி எடுத்துக்கொண்டான்.

அந்த உறுதியோடு முனிவரைத் தேடினான். முனிவரைக் கண்டுபிடித்துவிட்டான். முனிவர் ஒரு மாமரத்தின் அடியில் உட்கார்ந்திருந்தார். சிரித்த முகத்தோடு இருந்தார்.

சங்கரன் முனிவரின் காலில் விழுந்து வணங்கினான். "மூன்று வரம் கேள்!' என்றார் முனிவர்.

முதலில் அவனுக்குக் குடிசையில் இருந்த அம்மா ஞாபகம் வந்தது.

"வாய் பேசாத பெண்ணுக்கு வழி என்ன?" என்று சங்கரன் கேட்டான்.

"அந்தப் பெண்ணுக்குப் பிடித்தமான வாலிபனைப் பார்த்ததும் அவள் பேசிவிடுவாள்" என்று முனிவர் சொன்னார்.

முதல் வரம் முடிந்துவிட்டது.

இரண்டாவது வரம் கேட்கும்போது சங்கரனுக்குப் பெரியவர் ஞாபகம் வந்தது.

"பழுக்காத மரம் பழுக்க வழி என்ன?" என்று சங்கரன் கேட்டான்.

"மரங்களுக்கு அடியில் தங்கக் காசுகள் உண்டு. தோண்டி காசுகளை எடுத்துவிட்டால் காய் பழுக்கும்" என்று முனிவர் சொன்னார்.

இரண்டாவது வரம் முடிந்துவிட்டது. மூன்றாவது வரம் கேட்கும் போது சங்கரனுக்கு முதலையின் ஞாபகம் வந்தது.

"கரை ஏத்திவிட்ட முதலைக்கு வலி தீரணும்" என்றான் சங்கரன்.

"முதலையின் தொண்டையில் மாணிக்கக் கல் சிக்கி உள்ளது. எடுத்து விட்டால் வலி தீரும்" என்றார் முனிவர்.

மூன்றாவது வரம் முடிந்துவிட்டது. இனி முனிவர் பேச மாட்டார்.

சங்கரன் முனிவரைக் கும்பிட்டு விடைபெற்றான். இவ்வளவு கஷ்டப்பட்டு வந்து அவனுக்காக முனிவரிடம்



எதுவும் கேட்கவில்லை. ஊருக்குப் போனதும், “அசடு! அசடு!” என்று எல்லாரும் அவனைக் கேலி செய்வார்கள்.

முதலை அவனுக்காகக் கரையில் காத்து இருந்தது. முதலையின் வாயைத் திறக்கச் சொன்னான். கையை உள்ளே விட்டான். தொண்டையில் சிக்கி இருந்த மாணிக்கக் கல்லை எடுத்தான். முதலையின் வலி நின்றது. முதலை மகிழ்ச்சி அடைந்தது. “மாணிக்கக் கல் எனக்கு வேண்டாம். நீயே வைத்துக் கொள்!” என்று முதலை சொல்லி விட்டது. சங்கரனுக்கு மாணிக்கக்கல் கிடைத்தது. முதலை சங்கரனைக் காட்டின் கரையில் கொண்டுபோய்விட்டது.

சங்கரன் காட்டில் பெரியவரைப் பார்த்தான். இருவரும் சேர்ந்து மரங்களுக்கு அடியில் தோண்டினார்கள். தங்கக் காசுகள் கிடைத்தன. தங்கக் காசுகளைத் தோண்டி





எடுத்ததும் மரங்கள் பழுத்தன. தோண்டி எடுத்த தங்கக் காசுகளில் பாதியைப் பெரியவர் வைத்துக்கொண்டார். பாதியைச் சங்கரனுக்குக் கொடுத்தார்.

தங்கக் காசுகளை வாங்கிக்கொண்டு சங்கரன் குடிசையில் இருந்த அம்மாவைப் பார்க்க வந்தான்.


குடிசையில் அம்மாவும் இருந்தாள். அவளுடைய வாய் பேசாத மகளும் இருந்தாள். அவள் அழகான பெண். சங்கரனைப் பார்த்ததும் அந்தப் பெண் ஆசை கொண்டாள். உடனே பேச்சு வந்தது. பேச ஆரம்பித்துவிட்டாள்.

அம்மாவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. தன் மகளைச் சங்கரனுக்கே கல்யாணம் செய்துகொடுத்தாள்.

சங்கரன் ஊர் திரும்பினான். முதலில் போய் தாத்தாவைப் பார்த்தான். நடந்ததை எல்லாம் சொன்னான். தாத்தா சங்கரனை அணைத்துக் கொண்டார்.

இதுதான் கதை. பிடித்து இருக்கிறதா? சங்கரன் நல்லது செய்தான். அவனுக்கு நல்லது கிடைத்தது. உங்கள் கருத்தை எழுதுங்கள்!

- **கதை சொன்னவர் :** ஈஸ்வரன், கற்போர், கீழஒடப்பட்டி,
- **எழுதியவர்:** வி.திருப்பதி, சாத்தூர் ஒன்றியம்.



# உரையாடல் என்ன செய்யும்?

என்.மாதவன்

அப்போது தெலங்கானாவில் நிலவுரிமைக்கான இயக்கம் சற்று வலுவாகவே நடந்துகொண்டிருந்தது. விவசாயத் தொழிலாளர்கள் பலரும், 'நம்மிடம் நிலம் இல்லையே; இருந்தால் நாமும் வளமாய் வாழலாம்; பிறருக்கும் உதவலாமே!' என்ற நோக்கத்துடன் இயங்கிக்கொண்டிருந்தனர். அறவழிப் போராட்டங்களின் மத்தியில் ஆயுதம் தாங்கிய போராட்டங்களுக்கான முனைப்புகளும் நடந்துவந்தன.


இந்த சமயத்தில்தான் தெலங்கானாவின் போச்சம்பள்ளி கிராமத்தில் ஒரு கூட்டம் நடக்கிறது. பெரியவர் ஒருவர் அந்தக் கூட்டத்தில் பேசுகிறார். அவரிடமும் தங்களுக்கு நிலம் தேவை என்ற கோரிக்கையினை விவசாயத் தொழிலாளர்கள் வைக்கின்றனர். கூட்டத்தினரைப் பார்த்த அவர், 'இவர்களுக்கு யாராவது, எப்படியாவது உதவ முடியுமா?' என்று கேட்கிறார்.

உடனே கூட்டத்திலிருந்த ஒருவர், 'என்னிடம் நூறு ஏக்கர் நிலம் உள்ளது. அதை நான் மனமுவந்து தருகிறேன். இவர்களுக்குப் பிரித்துக்கொடுங்கள்' என்கிறார். பெரியவர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திடுமாறு கோருகிறார். இப்படிப் பெற்ற நிலத்தை நிலமற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கிறார். இப்படிப் பிறந்ததுதான் பூமி தான இயக்கம். அந்தப் பெரியவர், இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தவர், ஆச்சாரிய வினோபா பாவே!

சுமார் 13 ஆண்டுகள் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை 70,000 கி.மீ. நடைப்பயணம் சென்றார் வினோபா பாவே. இந்த நீண்ட பயணத்தின் மூலம் சுமார் 42 லட்சம் ஏக்கர் நிலத்தைக் கொடையாளிகளிடமிருந்து பெற்று விவசாயிகளுக்கு விநியோகித்தார். உலகம் பிரமித்த பணிகளில் ஒன்று அது!

துறவியாகலாம் என்ற எண்ணத்துடன் காசி சென்றவர் வினோபா பாவே. அங்குள்ள இந்து பல்கலைக்கழகத்துக்கு அந்தச் சமயத்தில் காந்தி வந்திருந்தார். அவருடைய உரையைக் கேட்கச் சென்றார் வினோபா பாவே. "அச்சம்தான் உண்மையான எதிரி" என்றார் காந்தி. "ஒருவன் அச்சத்துக்கு ஆட்பட்டுக் கிடக்கும் வரை அவனால் சத்தியத்தைப் பின்பற்றி அன்பு வழியில் போக முடியாது. கோழைகள் ஒருபோதும் அறநெறியினர் ஆக முடியாது" என்ற காந்தியின் பேச்சு வினோபா பாவேவை வாரிச் சுருட்டி இழுத்துவிட்டது. தனது குருவை அடையாளம் கண்டவர், காந்திக்குச் சீடர் ஆனார். காந்தியின் அணுக்க தொண்டர் ஆனார். காந்தியின் ஆசிரமங்களில் தங்கி சேவை ஆற்றினார். காந்தியின் மறைவுக்குப் பின்னர் அவர் ஆற்றிய பெரும் பணியே பூமி தான இயக்கம்.

காந்தியிடமிருந்து கற்றுக்கொண்ட பெரிய பண்புகளில் ஒன்றாக, வினோபா பாவே குறிப்பிடுவது எல்லோருடனுமான உரையாடல். ஆத்மார்த்தமாக சக மனிதர்களுடன் உரையாடும்போது எப்பேர்ப்பட்ட விஷயமும் சாத்தியம் என்பதில் நம்பிக்கை கொண்டவர் வினோபா பாவே. ஒரு அடி நிலத்துக்காக வெட்டிக்கொண்டு சாகும் சொந்த அண்ணன் - தம்பிகள் வரலாறு எத்தனை நூறு உண்டு நம்மூரில்? இங்கேதான் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் தானமாக அளிக்கப்பட்டன என்றால், மானுடத்தின் மகத்தான தருணங்களில் ஒன்றல்லவா அது! சக மனிதர் மீதான அன்பும் நம்பிக்கையும் கூடிய உரையாடலை அன்றி வேறு எது இதைச் சாதித்திருக்க முடியும்!



ஓவியம்: ராஜே

ஆர்.வி.ரேகா

# கொண்டை கடலை சாலட் செய்வது எப்படி?



நம்முடைய மாணவர்களுடைய இன்றைய பெரும் சவால் ஒன்று, தேவையான ஊட்டச்சத்து மிக்க உணவை அவர்கள் எடுத்துக்கொள்வதில்லை அல்லது தேவையற்ற குப்பை உணவை அவர்கள் தீனி என்ற பெயரில் அளவுக்கு அதிகமாக எடுத்துக்கொள்கிறார்கள். மாற்றாக எளிமையானதும், ஊட்டச்சத்து மிக்கதுமான உணவு வகைகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றில் ஒன்று கொண்டை கடலை சாலட்.

கொண்டைக்கடலை இரண்டு கைப்பிடி; பச்சை மிளகாய் இரண்டு, பெரிய வெங்காயம் ஒன்று, கொத்தமல்லி தழை பத்து, தக்காளி ஒன்று. சுக்குத்தூள் ஒரு ஸ்பூன் அல்லது இஞ்சி ஒரு துண்டு.

கொண்டைக்கடலையை 12 மணி நேரம் அளவுக்கு ஊற வைத்துவிடுங்கள். பின்னர் தண்ணீரை வடிகட்டிவிட்டு அகலமான பாத்திரத்தில் பரப்பிக்கொள்ளுங்கள். எலுமிச்சை மற்றும் சுக்குத்தூள் நீங்கலாக ஏனையவை எல்லாவற்றையும் பொடிசாக நறுக்கிக்கொள்ளுங்கள். பின்னர் இவை எல்லாவற்றையும் கொண்டைக்கடலை மீது கொட்டுங்கள். தேவையான அளவுக்கு உப்பு சேர்த்திடுங்கள். கரண்டியால் கிளறிவிடுங்கள். கடைசியாக எலுமிச்சம் பழத்தை மேலோட்டமாகப் பிழிந்துவிடுங்கள். அதன் மேலே சுக்குத்தூள் அல்லது பொடிசாக நறுக்கப்பட்ட இஞ்சித் துண்டுகளைத் தூவிவிடுங்கள். மீண்டும் ஒரு கிளறல். அவ்வளவுதான். நான்கு பேருக்கு இதை பரிமாறலாம்.

கொண்டைக்கடலைக்குப் பதிலாக வேர்க்கடலை, காராமணி, பச்சைப்பயறு போன்றவற்றையும் இதே முறையைக் கையாண்டு செய்து பார்க்கலாம்.

கொண்டைக்கடலை நல்ல ஊட்டம் தரும் தானியம். நிலக்கடலையும், ஏனைய பயறு வகைகளும்கூட அப்படியே. இதோடு சேர்க்கும் ஏனைய பொருட்கள் நல்ல ருசி தருவதோடு, வாய்வுப் பிரச்சினையையும் தவிர்த்திடும். முன்கூட்டி திட்டமிட்டு, ஊறவைப்பதை மட்டும் செய்துவிட்டால் சில நிமிஷங்களில் எளிமையாகச் செய்திடக்கூடிய தீனி இது. நன்கு பசி தாங்கும், உடலுக்கும் ஊட்டம் தரும்!

# ஆசிரியர் என்பது வெறும் பணி கிடையாது...
# அது ஒரு வாழ்வியல்!

## எஸ்.எஸ். இராஜகோபாலன் பேட்டி

சந்தர் டி ராஜ்



சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபடி கூர்ந்த பார்வையோடு நம்மை வரவேற்கிறார் கல்வியாளர் எஸ்.எஸ்.ராஜகோபாலன். 33 ஆண்டுகள் பள்ளித் தலைமையாசிரியர் பணியை உள்ளடக்கிய 40 ஆண்டுகள் ஆசிரியப் பணி; அதனூடாகவும், அதற்குப் பிறகும் பாடத்திட்ட உருவாக்கம் தொடங்கி கல்விக் கொள்கை உருவாக்கம் வரையிலான பணிகளில் ஒரு கல்வியாளராகத் தன்னுடைய கருத்துகளைத் தொடர்ந்து முன்வைக்கும் பணி; ஆசிரியர் சங்கப் பிரதிநிதியாகத் தொடர் செயல்பாடு என்று கிட்டதட்ட முக்கால் நூற்றாண்டு கல்விப் பணிக்குச் சொந்தக்காரர். அவரைச் சுற்றிலும் கிடக்கும் தினசரிகள், இதழ்களை எண்ணினால், முப்பதைத் தாண்டுகிறது. எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால், உற்சாகமாக சிரித்தபடி சொல்கிறார், “இந்த வயதுக்கு எவ்வளவு ஆரோக்கியத்தோடு இருக்கணுமோ, அவ்வளவு ஆரோக்கியத்தோடு இருக்கு உடல்நிலை. இருபதுகள்ல உள்ள உடல் வலுவைத் தொண்ணூறுகள்ல எதிர்பார்க்கக் கூடாது இல்லையா?” அமெரிக்காவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் வரும் கல்வி தொடர்பிலான இதழ்களையும்கூட அங்கே பார்க்க முடிந்தது. “ஆசிரியர்னா, நம்மைச் சுத்தி இருக்கிற எல்லாத்தையும் தெரிஞ்சுக்கணும், இல்லையா?” என்கிறார். நாம் கையில் கொண்டுசென்ற ‘தொடுவானம்’ முதல் இதழை ஆர்வத்தோடு வாங்கிப் பார்ப்பவர் உற்சாகம் அடைகிறார். “ரொம்ப வருஷ கனவு இது. பள்ளிக்கல்வித் துறையிலேர்ந்து இதழ் கொண்டுவரணும்கிறது. மொதமொதல்ல எம்.டி.பால் இயக்குநராக இருந்தபோ ‘எஜுகேஷன்’ அப்படிங்கிற பேருல இதழ் வந்துச்சு. பின்னாடி அவர் அமெரிக்கா போன பிறகு நின்னுடுச்சு. அதுக்குப் பிறகும் சில இதழ்கள் ஆரம்பிச்சு சில காலத்துல நின்னுருச்சு. இது தொடர்ந்து வரணும்” என்பவர் ஆசிரியர் குழு விவரத்தைப் பார்க்கிறார். “பரவாயில்லையே! தொழில்முறை பத்திரிகையாளர்களோட இணைஞ்சு பண்றாங்களா, நல்ல விஷயம்! இப்படி இணைஞ்சு செய்றதுதான் நமக்கு ஒவ்வொரு துறையிலேயும் இன்னைக்குத் தேவை!” என்றபடி பேசலாகிறார்.

**உங்கள் பெயருடைய முதல் எழுத்தான சருக்கை எனும் ஊர்ப் பின்னணியிலிருந்து நாம் பேட்டியைத் தொடங்கலாமா?**

தஞ்சாவூர் மாவட்டத்துல உள்ள கிராமம் சருக்கை. எனக்குப் பூர்விகம் சருக்கையே தவிர, நான் பொறந்து வளர்ந்தது எல்லாம் கோயமுத்தூர்லதான்; பீளமேடு; அது அன்னைக்குக் கிராமம். சருக்கைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னாடி ஒருமுறை நான் போய் பார்த்துட்டு வந்தேன். ஊரே தொடைச்சுவிட்ட மாதிரி இருந்துச்சு. இந்த ஊர்ல உள்ள எல்லாரும் எங்கெங்கேயோ போய்ட்டாங்க; ஊரு வெறிச்சோடிடுச்சுன்னு சொன்னாங்க. பெரிய ஆளுமைகள் நிறையப் பேரைக் கொடுத்த ஊர் அது.

> பிரிட்டிஷார் எல்லாருக்கும் கல்வி கொடுத்தாங்கன்னாலும், பள்ளிக்கூடங்களைத் தேடி வந்தவங்களுக்குக் கொடுத்தாங்க. தேசியக் கல்வி இயக்கம்தான் வீடு போய் தேடி பிள்ளைங்களைக் கூட்டி வந்துச்சு!



**ஒரு கண்டிப்பான தலைமையாசிரியரின் மகன் நீங்கள். குழந்தைப் பருவம் எப்படி இருந்தது?**

அப்போ எல்லா அப்பாக்களும் கண்டிப்பானவங்கதான். எங்க அப்பா கண்டிப்பானவர் - கடுமையான உழைப்பாளி. சமூகத்துக்கு எதாவது செய்யணும்கிற தன்னோட கனவுக்கான வழியா அவர் பள்ளிக்கூடத்தைப் பார்த்தார் அப்படிங்கிறதனால, வீட்டுல பயத்தைக் காட்டிலும் அவர் மேல மரியாதை ஜாஸ்தியா இருக்கும். அப்போல்லாம் ஆசிரியர்களுக்கு சம்பளம் குறைவு. அப்படி வாங்கின சொற்ப சம்பளத்துலேயும் ஏழை எளிய மாணவர்களுக்கு உதவுறதுக்குன்னு ஒரு தொகையை ஒதுக்கிட்டு மீதியைத்தான் வீட்டுக்குக் கொண்டுவருவார். நல்ல வாசகர். பத்திரிகை படிச்சு முடிச்சதும் ஆசிரியருக்குக் கடிதம் எழுதிடுவார். மூவாயிரத்துக்கும் மேலான ஆசிரியர் கடிதங்கள் எழுதியிருக்கார். பல நூறு கட்டுரைகளை எழுதினார். கல்வித் துறை மேலயும் வாசிப்பு மேலயும் அப்பா வழியாத்தான் பெரிய மதிப்பு எனக்கு உருவாயிருக்கும்னு நெனைக்கிறேன். அப்பாக்கிட்ட ரொம்பப் பேச முடியாது. முன்கட்டுல அப்பா இருப்பார். பின்கட்டுல அப்படியே நேர் எதிரா அம்மா. வீட்டில் அப்பா, அம்மா, அக்கா. பத்மா, அண்ணன். கண்ணன், தம்பி.விஜயராகவன்னு மொத்தம் ஆறு பேர். அதனால குதூகலத்துக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. என்ன ஒரு விஷயத்தை இழந்தேன் அப்படின்னு யோசிச்சா, 'வாத்தியார் பிள்ளை'ன்னு சொல்லி அவ்வளவு நெருக்கமா சினேகிதர்கள் யாரும் அமைய மாட்டாங்க. ஆசிரியர்களுமே தயங்கித்தான் பழகுவாங்க. இதனாலேயே நான் ஆசிரியர்கள்கிட்ட 'உங்க பிள்ளைங்களை நீங்க வேலை பார்க்கிற பள்ளிக்கூடத்துல படிக்க வைக்காதீங்க'ன்னு சொல்வேன்.

**கல்வித் துறை மீதான ஆர்வம் எந்த வயதில் வந்தது?**

அப்பாகிட்டேருந்து ரொம்ப ஆரம்பத்துலேயே தாக்கம் ஏற்பட்டிருக்கணும்னு தோணுது. சருக்கை சீனிவாச அய்யங்கார்கிற பெயர் அன்னைக்கே ஆசிரியர்கள் மத்தியில செல்வாக்குள்ள பெயர். காந்தியர். அப்பா ரெண்டு விஷயங்கள்ல பிடிமானமா இருந்தார். ஒண்ணு, தாய்மொழி வழிக் கல்வி, ரெண்டாவது, பெண் கல்வி. சென்னை மாகாணத்துலயே மொதமொதல்ல தாய்மொழி வழிக் கல்வியைத் தன் பள்ளியில கொண்டுவந்தவர் அவர். பெண்கள் படிச்சாதான் சமூகம் மாறும்னும் நம்பினவர்.

ஆங்கிலேய அரசு அப்போ சமூகத்துல பெரிய மனுஷங்களுக்கு 'திவான்', 'ராவ்' இப்படியெல்லாம் பட்டங்கள் கொடுப்பாங்க. எங்க அப்பா தேசியர்ங்கிறதாலேயே இதையெல்லாம் மறுத்தார், எதிர்த்தார். 'அண்டர்வுட்'னு ஒரு டைப்ரைட்டர் இருக்கும். வீட்ல அதை வெச்சு கட்டுரைகளையும், பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கடிதங்களையும் அடிச்சுகிட்டே இருப்பார். அவரோட வாழ்நாள்லேயே ஏறக்குறைய 300 கட்டுரைகளும், 3000 கடிதங்களும் 'தி இந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'மெட்ராஸ் மெயில்' பத்திரிகைகள்ல வந்துருக்கு.

வெளியில மட்டும் இல்லாம வீட்டுக்குள்ளேயும் சமத்துவத்து வத்தைக் கொண்டுவந்தவர். பெண் கல்வியைப் பேசினதோடு இல்லை; கோயமுத்தூர் அரசுக் கல்லூரியில அந்தக் காலத்துல ஆண்கள் மட்டுமே படிச்சிட்டு இருந்தாங்க; அதுல முதல் மாணவியா எங்க அக்காவைக் கொண்டுபோய் சேர்த்துட்டார். இதைப் பார்த்து வியந்துபோன அந்தக் கல்லூரியோட முதல்வர் அவரோட பெண்ணை சென்னை ஸ்டெல்லா மேரீஸ்லேர்ந்து அழைச்சுக்கிட்டு வந்து அக்காவுக்குத் துணையா சேர்த்தார். நாங்கள் வீட்டுல சும்மா இருந்தாகூட 'கிராமங்களுக்குப் போங்க; படிப்பறிவு இல்லாதவங்களுக்குக் கற்பிங்க'ன்னு சொல்வார். இன்னைக்கு 'இல்லம் தேடிக் கல்வி' மாதிரி அன்னைக்கு 'இராபள்ளி இயக்கம்' இருந்துச்சு. படிக்கிற காலத்துலேயே இப்படியெல்லாம் கவனம் போக ஆரம்பிச்சுட்டதால ஆசிரியர் பணி மேல பெரிய மதிப்பு உண்டாகிடுச்சு. பி.ஏ. முதல் வகுப்புல தேர்ச்சியானேன். அப்போ எந்த உத்தியோகத்துக்கு விண்ணப்பிச்சிருந்தாலும் கிடைச்சிருக்கும். ஆனா, கல்வி கொடுக்குறது, அதிலும் காலங்காலமா கல்வி மறுக்கப்பட்டவங்களுக்குக் கல்வி கொடுக்குறதுதான் நம்ம வேலைனு மனசுக்குப் பட்டதால இதுதான் நம்ம வாழ்க்கைன்னு முடிவெடுத்துட்டேன்.

**காந்தி உங்கள் தந்தையிடம் பெரிய தாக்கத்தை உருவாக்கியிருக்கிறார் என்று அறிகிறோம். அந்த அனுபவத்தைச் சொல்லுங்கள். மேலும், இன்று ஒரு கல்வியாளராக நீங்கள் காந்தியை எப்படிப் பார்க்கிறீர்கள்?**


நாக்பூரில் 1922 காங்கிரஸ் மாநாடு நடந்தப்போ காந்தியை என் தந்தையார் சந்திக்கிறார். காந்தி கேக்குறார், 'எந்த மொழியில நீங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கறீங்க?' தந்தையார் சொல்றார், 'ஆங்கிலத்துல!' காந்தி சொல்றார், 'ஆங்கிலம் புரியாத பிள்ளைகள் எப்படிக் கத்துக்க முடியும்? பிள்ளைகளுக்கு அவங்க தாய்மொழில கத்துக்கொடுங்க!' அடுத்து, கல்கத்தா போய் சாந்தி நிகேதன்ல தாகூரைச் சந்திக்கிறார் தந்தையார். அந்தக் காலத்துல ஆண்களுக்கு மட்டும்தான் கல்விங்கிறதுதான் பெரும்பாலும் நெலைமை. அப்படியே பெண்கள் படிக்கணும்னாலும், இரு பாலருக்கும் தனித்தனிப் வகுப்பறைகள்தான். என் தந்தையார் பாபநாசத்துல அப்போ தலைமையாசிரியரா இருந்த பள்ளிக்கூடமும் விதிவிலக்கு இல்லை. தாகூர் கேக்குறார், 'உங்கள் வீட்டில் யாரெல்லாம் இருக்குறீங்க?' தந்தையார் சொல்லியிருக்கார், 'நான், என் மனைவி, மகள், மகன்கள் இருக்கோம்!' தாகூர் சொல்றார், 'அப்போ ஆண், பெண் எல்லாம் ஒண்ணா இருக்கிறதுதானே குடும்பம்? பள்ளிக்கூடம் மட்டும் தனித்தனியா இயக்கினா எப்படி? இது இயற்கைக்கு மாறானது இல்லையா?'

இது பெரிய மனத்திறப்பைத் தந்தையார்கிட்ட உருவாக்கிடுச்சு. பாபநாசம் திரும்பினதும், தாய்மொழி வழிக்கல்வியையும், இருபாலர் கல்வியையும் தன் பள்ளிக்கூடத்துல அறிமுகப்படுத்துற முயற்சியில இறங்குறார். ஆனா, அங்குள்ள பள்ளி நிர்வாகிகள் ஒப்புக்கலை. இதுக்கு அப்புறம் எதிர்காலக் கல்வி தொடர்பா ஒரு கூட்டம் நடக்குது. அதுல பேசும்போது இதை வருத்தத்தோடு பகிர்ந்திருக்கார் தந்தையார். அவரோட பேச்சை அன்னைக்கு 'தி இந்து' பத்திரிகையில் பெரிய செய்தியா முதல் பக்கத்துல போடுறாங்க; பாருங்க, நம்மூர்ல பத்திரிகைகள் அன்னைக்கு எப்படி இருந்துருக்குன்னு! இதைப் படிச்சுட்டு கோயமுத்தூர் பிஎஸ்ஜி குடும்பம் எங்க தந்தையாரை அவர் விருப்பப்படியே படிப்பு சொல்லிக்கொடுக்க தங்களோட பள்ளிக்குக் கூப்பிடுறாங்க. அப்படித்தான் அவர் கோயமுத்தூர் வர்றார். இதுக்குப் பிறகு அவர் வாழ்நாள் முழுக்க ஒரு கல்வியாளரா ஆற்றின பணி எல்லாமே காந்தியத்தின் பாதையிலதான் நடந்துச்சுன்னு சொல்லலாம். ரொம்ப சாதாரண குடும்பம் எங்களோடது. ஆனா, நேரு, தாகூர்லாம் எங்க வீட்டுக்கு வந்துருக்காங்க. பள்ளிக்கூடத்துல



R. SRINIVASA IYENGAR IN 1924

> காந்தி கேக்குறார், 'எந்த மொழியில நீங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கறீங்க?' தந்தையார் சொல்றார், 'ஆங்கிலத்துல!' காந்தி சொல்றார், 'ஆங்கிலம் புரியாத பிள்ளைகள் எப்படிக் கத்துக்க முடியும்? பிள்ளைகளுக்கு அவங்க தாய்மொழில கத்துக்கொடுங்க!'



பேச தந்தையார் அழைச்சுருக்கார். ஆசிரியர்ங்கிறது வேலை இல்லை; வாழ்க்கைன்னு தன் வாழ்க்கையால கத்துக்கொடுத்தவர் அவர்.

இன்னைக்கு காந்தியைப் பத்திப் பேசும்போது ஆச்சரியம்தான் பெருகுது. இந்தியால 'தேசியக் கல்வி இயக்க'த்தோட பெரும் சக்தியா அவர்தான் இருந்துருக்கார். எங்க அப்பா மாதிரி எவ்வளவு பேருக்குத் தார்மிக சக்தியா இருந்துருக்கார்! கல்வியைப் பத்தி காந்தி சிந்திச்சதும், பேசி – எழுதினதையும் பார்த்தாலே மலைப்பா இருக்கு! ஒவ்வொரு துறையிலேயும் அவருக்குத் தீர்க்கமான பார்வை இருந்துருக்கு!


**உங்களுடைய ஆதர்ஷ ஆசிரியர் யார்?**

மொதல்ல என்னோட தந்தையார், அடுத்து படிப்பெல்லாம் முடிச்சு நான் வெளிய வந்த பின்னாடி ஆசிரிய சங்கத்துல எனக்கு அறிமுகமான எஸ்.நடராஜன். சென்னை கெல்லட் பள்ளியில அவர் ஆசிரியரா இருந்தார். ஒரு ஆசிரியர் எப்படி லட்சிய நோக்கோடு இருக்கணும்னு அவர்கிட்டதான் நான் கத்துக்கிட்டேன். அவர் எனக்கு குரு, நான் அவருக்கு சீடன்.

**தேசியக் கல்வி இயக்கத்தின் ஒரு பகுதியாக இயங்கிய பள்ளிகளின் நடைமுறைகள் என்னவாக இருந்தன? அதன் சிறப்பம்சம் என்ன?**

பிரிட்டிஷார் எல்லாருக்கும் கல்வி கொடுத்தாங்கன்னாலும், பள்ளிக்கூடங்களைத் தேடி வந்தவங்களுக்குக் கொடுத்தாங்க. தேசியக் கல்வி இயக்கத்தின் மிக முக்கியமான அங்கமா பொதுப் பள்ளிமுறை அமைஞ்சது. காந்தி தன்னோட பேச்சுல விடுதலை அடைஞ்ச இந்தியாவோட கிராமங்கள்ல மூணு முக்கியமான விஷயங்கள் இருக்கணும்னார். ஒண்ணு, ஒரு நிர்வாக பஞ்சாயத்து, இரண்டாவது ஒரு கூட்டுறவு அமைப்பு, மூணாவது ஒரு ஆரம்பப் பள்ளி. தேசியக் கல்வி இயக்கமானது, பள்ளிக்கூடத்துக்கு வராதவங்களையும் தேடிப் போய் கல்வி கொடுத்துச்சு. மூணு விஷயங்கள் அடிப்படையா இருந்தது. 'அனைவருக்கும் கல்வி', 'தாய்மொழிக் கல்வி', 'பெண்களுக்கு கல்வியில் சம உரிமை'. இது தவிர ஒவ்வொரு குழந்தையும் கைத்தொழில் ஒண்ணு கத்துக்கணும்ன்னு அந்த இயக்கம் செயல்பட்டுது. இதேபோல, தாய்மொழிக் கல்விக்குப் பெரிய முக்கியத்துவம் கொடுத்துச்சு. கல்வின்றது தேர்வுக்காக மட்டும் பிள்ளைகளை ஆயத்தம்

**“ நான் படிக்கிற காலத்துல ஆறாவது வகுப்புலதான் ஆங்கிலத்தை அறிமுகப்படுத்தினாங்க. அடுத்த ரெண்டு வருஷத்துக்குள்ள ஆங்கிலத்துல ஒரு கவிதை, கதையைப் படிக்கிற அளவுக்குத் தேறிட்டோம். ஏன்னா தாய்மொழியில இருந்த அடித்தளம். இன்னைக்கு இங்கிலீஷ் இங்கிலீஷ்னு சொல்லி என்னத்த செஞ்சிருக்கோம்? தமிழ்லேயும் சரி, ஆங்கிலத்துலேயும் சரி, பிழையில்லாம ஒரு கடிதம் எழுதக்கூடத் திராணியில்லாத கூட்டத்தை உருவாக்கிக்கிட்டிருக்கோம். ”**



செய்றதா இருக்கக் கூடாது, அனைத்து வகை முன்னேற்றமாகவும் இருக்கணும்னு குறிக்கோள் வைச்சு உழைச்சாங்க. ஒரு குழந்தைக்கு உடலாற்றல், அறிவாற்றல், ஆன்மிக ஆற்றல் உடலாற்றல்ன்னு மூணு வகையான ஆற்றல்களையும் சொல்லிக்கொடுக்கணும்னு சொல்வார் எங்க தந்தையார். அது தேசியக் கல்வி இயக்கத்தோட நோக்கம்தான். படிப்போட மாணவர்களுக்குக் கை தொழில்களையும் பெண்களுக்குக்கூட சிலம்பாட்டம் ஆரம்பிச்சு துப்பாக்கிச் சுடுதல் வரைக்கும் சொல்லிக்கொடுத்த பள்ளிக்கூடங்கள் உண்டு. ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வும் அதோட முக்கியமான நோக்கங்கள்ல ஒண்ணு. பேடண்ட் பவுல் உருவாக்கிய ‘பாய்ஸ் ஸ்கவுட்’ அமைப்பையே ‘இந்துஸ்தான் ஸ்கவுட் அசோஸியேஷன்’ அப்படின்னு இந்தியப் பண்புக்கு ஏத்த மாதிரி மாற்றுகிற அளவுக்கு எல்லாத்திலேயும் ஒரு தனிப் பார்வை இருந்துச்சு. ஏனைய பள்ளிகள்ல ‘பிரிட்டிஷ் ராணி வாழ்க,’ன்னு பிரார்த்தனைக் கூட்டங்கள்ல பாட்டு இருந்தப்போ சுதந்திரத்திற்கு முன்னாடியே ‘ஜன கண மண’ பாடல் தேசியக் கல்வி இயக்கப் பள்ளிக்கூடங்கள்ல பாடப்பட்டுச்சு. அது ஒரு பெரும் கனவு. உள்ளூர்த்தன்மையைக் கல்விக்குக் கொடுப்பதும் அந்தக் கனவோட நிறைவேறாத ஒரு பெரும் சோகம்.

**உள்ளூர்த்தன்மை உடையதாக மாற வேண்டும் என்று நீங்கள் சொல்லும்போது, நம்முடைய ஆரம்ப காலப் பள்ளிக்கூட நிர்வாக முறைக்கு மாற வேண்டும் என்று சொல்கிறீர்கள். இல்லையா?**

ஆமாம். அந்தக் காலத்துல பள்ளிக்கூடம் எதையும் அரசாங்கம் நடத்தலை. ஆசிரியர் பயிற்சி நிறுவனத்துடன் கூடிய மாதிரிப் பள்ளிகள், அப்புறம் எழும்பூர், திருச்சி, தலைச்சேரி இந்த மூணு ஊர்கள்ல உள்ள இஸ்லாமியப் பெண்கள் பள்ளிகள் தவிர, வேறு எதையும் அரசு நேரடியாக நிர்வகிச்சது கிடையாது. எல்லாப் பள்ளிக்கூடங்களும் உள்ளாட்சி நிர்வாகத்துலதான் இருந்துச்சு. பள்ளிக்கூடத்துல ஒரு குறைனு வந்தா, மக்கள் நேரா உள்ளூர் ஊராட்சி உறுப்பினர்கிட்ட குறை சொல்ல, கேள்வி கேட்க முடிஞ்சுது. இன்னைக்கு முழுக்க அதிகாரிங்க கையில பள்ளிக்கூடங்கள் வந்துடுச்சு.

**நாம் கல்வியில் பின்தங்கியதற்கான காரணமாக எதைக் கருதுகிறீர்கள்?**

மையப்படுத்தினது ஒண்ணு. தொழில் துறைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் இங்கே கல்விக்குக்

கொடுக்கப்படலைங்கிறது ரெண்டு. இது ரெண்டும் சேர்ந்துதான் நம்மளைக் கீழ தள்ளிடுச்சு.

நாட்டோட மொத்த தேசிய உற்பத்தி மதிப்பில் 6% நிதியைக் கல்விக்கும், அதில் 3% நிதிக்குக் குறையாமல் தொடக்கக் கல்விக்கும் ஒதுக்கணும்னு பரிந்துரைச்சது கோத்தாரி குழு. ஆனா, மொத்தமாகவே 4% நிதிக்கு மேல் இதுவரைக்கும் கல்விக்கு ஒதுக்கப்பட்டதே இல்லை. கல்விக்கு ஒதுக்கப்படுற நிதியைச் செலவுனு நெனைக்கக் கூடாது; மூலதனமா கருதணும்.

**நம்முடைய கல்வித் துறையில் பெரிய மாற்றம் நிகழ வேண்டும் என்றால், நீங்கள் சொல்லக் கூடிய முக்கியமான யோசனை என்னவாக இருக்கும்?**

நம்மளோட கவனம் எல்லாத்தையும் தொடக்கக் கல்வியை நோக்கித் திருப்பணும்னு சொல்வேன். அனைவருக்கும் 12 வருஷப் பள்ளிக் கல்விங்குறது என்னோட தனிப்பட்ட விருப்பம். இன்னைய காலகட்டத்துல 8 வருஷப் படிப்பு எதுக்கும் உதவாது. அப்புறம், கல்விக் கொள்கையை மத்திய அரசு வகுக்கக் கூடாது. அந்த இடத்துல மாநில அரசாங்கங்கள் இருக்கணும். பள்ளிக்கூடங்களோட நிர்வாக அதிகாரம் உள்ளாட்சி நிர்வாகங்கள்கிட்ட இருக்கணும்.

நம்முடைய தேர்ச்சி மதிப்பெண் 35%. அதாவது, ஒரு மாணவர் 65% அறியாமையுடன் அடுத்த வகுப்புக்கு முன்னேறிப் போகலாம். இப்படி ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்தபட்சப் புரிதலுடன் தேர்வாகும் ஒரு மாணவர் மட்டும் பள்ளி இறுதி வகுப்புக்கு வரும்போது எப்படி இருப்பார்? அதனால, வகுப்பறைக் கற்பித்தலை நோக்கி முழுக் கவனத்தையும் திருப்பணும். தேர்ச்சி மதிப்பெண் 65%-80% உள்ள நாடுகள்லகூட, அதை எடுக்க முடியாத மாணவர்களை ஏற்கெனவே படிச்ச வகுப்புலயே வெச்சிடுறதில்லை. அஞ்சாம் வகுப்போட ஃபெயில்னு சொல்லி நிறுத்தினா, எத்தனை பேர் நம்மூர்ல பெண் பிள்ளைகளை மறுபடி மறுபடி பள்ளிக்கு அனுப்புவாங்க? ஆங்கிலம் தவிர பாக்கி எல்லா பாடங்களையும் நல்லா படிக்கிற ஒரு பிள்ளையை, ஆங்கிலத்துல ஃபெயில்ன்னு சொல்லி பள்ளியை விட்டே பாதியில அனுப்பிடுற அபாயம் இந்த முறையில இருக்கு. படிப்பை விடவும் விளையாட்டுல ஆர்வமா பங்கெடுக்கிற ஒரு பிள்ளையை, நீ ஃபெயில்னு சொல்லி பள்ளியை விட்டே பாதியில அனுப்பிடுற அபாயம் இந்த முறையில இருக்கு. வடிகட்டல் கூடாதென்றால் தேர்ச்சி கூடாது அப்படின்னு அர்த்தமில்லை. அனைவரையும் தேர்ச்சிக்குரியவராக ஆக்க வேண்டியது ஆசிரியரின் பணி மட்டும் இல்லை; கடமை.

அதிகாரிகளுக்கும் இதுல பொறுப்பு இருக்கு. நான் தலைமையாசிரியர் உத்யோகத்தில் சேர்ந்த காலத்தில் எச்.எஸ். எஸ்.லாரன்ஸ் என்று ஒரு அதிகாரி ஆய்வுக்காக வந்தார். ‘மொத்தம் எத்தனை பேர் படிக்கிறாங்க?’னு கேட்டார். ‘815 பேர்’னு சொன்னேன். ‘அப்படின்னா, ஒரு நாள் அலுவலகப் பணி, நாலு நாள் ஆய்வுப் பணி’ன்னு சொல்லி அஞ்சு நாட்கள் கிராமத்தில் தங்கி ஆய்வு செஞ்சார். ஒவ்வொரு ஆசிரியரும் எப்படி பாடம் நடத்துறாருங்கிறதைப் பார்க்க ஒரு முழுப் பிரிவும் வகுப்புல உட்கார்ந்து கவனிப்பார். பையன்களோட நோட்டுப் புத்தகங்களை வாங்கிட்டுப்போய், ராத்திரி முழுக்க விழிச்சுருந்து பார்த்து, ஆசிரியர்கள் செஞ்ச தவறுகளைப் பச்சை மையால் சுழிச்சு, திரும்ப அனுப்பி வைப்பார். இப்படியெல்லாம் அன்னைக்கு ஆய்வு நடக்கும். இன்னைக்கு நெலைமை என்ன?

கற்பிக்கும் முறையிலேயும், தேர்வுமுறையிலேயும் மாற்றம் கொண்டுவரணும். மாணவரது அறிவைச் சோதிக்கும் முறையில் பெருமாற்றம் வேணும். வெறும் எழுத்துத் தேர்வு மட்டுமல்ல, வாய்மொழித் தேர்வும் வேணும்.

**பாடத்திட்ட உருவாக்கத்தில் எது முக்கியமானதாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

பாடத்திட்டம்கிறது நடைமுறை அறிவோட, இது ஏன் இப்படி நடந்துச்சுன்னு தர்க்கரீதியில மாணவர்களை சிந்திக்க வைக்கிறதா இருக்கணும். ஒரு உதாரணத்தோடு சொல்லணும்னா கோவையில மேட்டுபாளையம் தொடங்கி, கோயமுத்தூர் நகரம், பொள்ளாச்சி, மடத்துகுளம், திண்டுக்கல், ஸ்ரீவில்லிபுத்தூர் வரைக்கும் தெலுங்கு பேசுற மக்கள் பரவலா இருக்காங்க. கரிசல் நெலத்துல தெலுங்கு பேசுற மக்கள் குடியேறி இருக்காங்க. இப்படி நம்மூர்ல தெலுங்கு பேசுற மக்களோட பின்னணியைக் கேட்டு விசாரிச்சா மக்கள் வந்த பாதைகள்ல வத்தாத நதிகள் இருந்தும், ஏன் வறண்ட கரிசல் நெலத்தைத் தேர்ந்தெடுத்தாங்கன்றது புரியவரும். அதுதான் வரலாறும், புவியியலும். இப்படி இணைச்சு சொல்லி கொடுக்க வேண்டிய பாடத்தைத் தனித் தனியாப் பிரிச்சு சொல்லிக் கொடுத்தா எந்த வகையில அது எடுபடும்? இந்தக் கேள்வியை அப்பவே கேட்டோம். இன்னைக்கும் அப்படி ஒவ்வொண்ணா நாம ஆராய்ச்சு பகுத்துப் பார்த்துக் கொண்டுவர வேண்டி இருக்கு.

**பள்ளிகளுக்கான மொழிக்கொள்கை எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**


நான் எந்த மொழிக்கும் விரோதி இல்லை. ஆனா, பள்ளிக்கூடம் மட்டுமே மொழிகளைச் சொல்லிக்கொடுக்குற இடம் இல்லை. இந்தி கத்துக்கணும்னா இந்தி பிரச்சார சபா இருக்குதுல்ல? அப்படியான அமைப்புகளை உண்டாக்கிட்டு போங்க. நீங்க பள்ளிக்கூடத்துலேயே எல்லாத்தையும் கொண்டுவந்து புகுத்தும்போது குழந்தைங்க மிரண்டு போகுது. நான் படிக்கிற காலத்துல ஆறாவது வகுப்புலதான் ஆங்கிலத்தை அறிமுகப்படுத்தினாங்க. அடுத்த ரெண்டு வருஷத்துக்குள்ள ஆங்கிலத்துல ஒரு கவிதை, கதையைப் படிக்கிற அளவுக்குத் தேறிட்டோம். ஏன்னா தாய்மொழியில இருந்த அடித்தளம். இன்னைக்கு இங்கிலீஷ் இங்கிலீஷ்னு சொல்லி என்னத்த செஞ்சிருக்கோம்? தமிழ்லேயும் சரி, ஆங்கிலத்துலேயும் சரி, பிழையில்லாம ஒரு கடிதம் எழுதக்கூடத் திராணியில்லாத கூட்டத்தை உருவாக்கிக்கிட்டிருக்கோம். பள்ளிக்கூட அளவுல ஒரு அளவுல ஒரு மொழியைக் கொண்டுவர்றதுங்கறதே திணிப்புதான்.

**முன்னோடியாக இன்றைக்குக் கல்வித் துறையில் உள்ள ஆசிரியர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

கற்பிக்கக் கூடிய எல்லோருக்குமே நான் சொல்லக்கூடியது மொதல்ல ஒண்ணுதான். ஆசிரியர்ங்கிறது வெறும் பணி இல்லை; அது ஒரு வாழ்வியல். அதோட அடிப்படை நம்மளை ஒரு மாணவரா கருதிக்கிறதுலதான் இருக்கு. நாம படிக்கணும், வாசிக்கணும். என்னோட மாணவர்கள் என்னோட முழுக் கடமைன்னு பொறுப்பு ஏத்துக்கணும். மாணவர்களை சுயமரியாதை மிக்கவர்களா உருவாக்குறதுதான் ஆசிரியர்களோட இலக்கு. அப்படின்னா நாம துணிச்சலா சுயமரியாதையோட நிக்கணும். அது நம்ம கடமையை உணர்ந்து, நாம சரியா செயல்படும்போதுதான் நடக்கும்! ■

மருதன்

# ஒரு நூல்







உலகின் மிகச் சிறந்த படைப்பாளிகளில் ஒருவராகக் கருதப்படும் டால்ஸ்டாய் மிகவும் சிக்கலான மனிதர். அவருடைய படைப்புகளைப் போல அவ்வளவு எளிதாக அவரை அணுகிட முடியாது. மதிப்பிடுவதும் சாத்தியம் இல்லை. ஒரு துருவத்தில் பொருத்தி அவரை வகைப்படுத்த முயலும்போதே சட்டென்று நேரெதிர் துருவத்துக்குத் தாவிச் சென்றுவிடுவார். ‘இருந்தாலும், நாங்களெல்லாம் இன்று எழுதிக்கொண்டிருக்கிறோம் என்றால், இலக்கியத்தின் மீது எங்களைப் போன்றவர்களுக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் டால்ஸ்டாய்தான்’ என்கிறார் ஆண்டன் செகாவ்.

டால்ஸ்டாயால் எப்படி ஒரே நேரத்தில் பெரும் புதிராகவும் பெரும் தீர்வாகவும் இருக்க முடிந்தது, இன்னமும் இருக்க முடிகிறது என்னும் கேள்விக்கான விடையை ரோஸமண்ட் பார்லெட் எழுதி, புதிதாக வெளிவந்திருக்கும் நூலிலிருந்து தேட ஆரம்பிக்கலாம். அவர் வாழ்விலும் படைப்புகளிலும் நிறைந்து கிடந்த ‘ரஷ்யத்தன்மை’யை இந்நூல் நெருங்கிச்சென்று ஆராய்கிறது. மதம், அரசியல், ஆன்மிகம், இலக்கியம், சமூகம், வரலாறு, தத்துவம் போன்ற துறைகளை டால்ஸ்டாய் எவ்வாறு தனித்துவத்தோடு அணுகினார் என்பதையும், இவற்றையெல்லாம் எவ்வாறு தன்னால் இயன்றவரை மாற்றியமைத்தார் என்பதையும் இந்நூல் விவாதிக்கிறது.

இந்த விவாதங்களை மனதில் திரட்டிக்கொண்டு டால்ஸ்டாயை மீண்டும் ஒரு முறை வாசித்தால் மனித வாழ்வு குறித்த நம் பார்வை மேலும் செழுமை பெறக்கூடும்.


Tolstoy: A Russian Life
Rosamund Bartlett
Profile Books






எளிமையாக இந்திய வரலாறு கற்க விரும்புபவர்களுக்கான ஒரு தளம், 'லைவ் ஹிஸ்டரி இந்தியா'. கற்காலம் தொடங்கி நவீன காலம் வரை பல தலைப்புகளில் நேர்த்தியான அறிமுகக் கட்டுரைகள் இந்தத் தளத்தில் இடம்பெற்றிருக்கின்றன.


ஒரு பக்கம், கோயில்கள், மண்டபங்கள், குகைகள், பாழடைந்த கோட்டைகள், கோபுரங்கள், தொல்லியல் தடங்கள் என்று இடங்களின் கதைகள் இடம்பெற்றிருக்கின்றன. இன்னொரு பக்கம், ராகுல் சாங்கிருத்யாயனின் பயணங்கள், ரவி வர்மாவின் ஓவியங்கள், குரு தத்தின் திரைப்படங்கள், நஸ்ருல் இஸ்லாமின் கவிதைகள் என்று பண்பாட்டு ஆளுமைகளும் அவர்கள் படைப்புகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.




சிற்பங்கள், ஓவியங்கள், நாணயங்கள், பழங்காலப்பொருள்கள் என்று கலை வரலாற்றுப் பக்கங்களும் நிரம்பியிருக்கின்றன. சாரநாத்தில் என்னவெல்லாம் பார்க்கலாம்? அஜந்தா குகை கண்டுபிடிக்கப்பட்டது எப்படி? பிஹாரிலுள்ள பராபர் குகையின் முக்கியத்துவம் என்ன? முதல் விநாயகர் சிற்பம் எப்போது தோன்றியிருக்கும்? கொங்கன் கடற்கரைக்கும் ரோமாபுரிக்கும் என்ன தொடர்பு? இப்படி ஏராளமான கேள்விகளுக்கு விடை கிடைக்கும்.

ஒரு சில சிறப்புக் கட்டுரைகளும் காணொளிக் காட்சிகளும் மட்டும் சந்தாதாரர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலானவற்றை அனைவரும் வாசிக்கலாம்.


சுட்டி: https://www.livehistoryindia.com/




ஆபரா என்பது மேற்கத்திய நாடுகளில் கொண்டாடப்படும் பிரமாண்டமான, வண்ணமயமான இசை நாடக வடிவம். கிட்டத்தட்ட 400 ஆண்டுகளுக்கு முன்பு இத்தாலியில் அறிமுகமான ஆபரா விரைவில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பரவிச் செழிக்க ஆரம்பித்தது. கிரேக்கத் தொன்மக் கதைகள், ஷேக்ஸ்பியர் நாடகங்கள், டால்ஸ்டாயின் போரும் அமைதியும், நவீன துப்பறியும் கதைகள் என்று பல விதமான படைப்புகள் ஆபராவில் நிகழ்த்தப்படுகின்றன. இசைதான் பிரதானம் என்பதால் பயிற்சி பெற்ற பாடகர்களே நடிகர்களாகவும் இருப்பார்கள். 'உன் பெயர் என்ன?' என்னும் சாதாரண கேள்வியைக்கூட இழுத்து, இழுத்து பல நிமிடங்களில் பாடுவார்கள்.

'ஆபராவிஷன்' பல அருமையான நாடகங்களைச் சேகரித்து வைத்திருக்கிறது. புதியவையும் சேர்க்கப்படுகின்றன. எடுத்துக்கொண்ட கதைக்கேற்ப பின்னணி, காட்சியமைப்பு, ஆடை அணிகலன்கள் ஆகியவற்றை அழகாக வடிவமைக்கிறார்கள். சில நாடகங்கள் மூன்று மணி நேரம் வரை நீளக்கூடியவை. மேற்கத்திய செவ்வியல் இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு போன்ற துறைகளில் ஆர்வம் கொண்டிருப்பவர்களுக்கு ஆபரா ஒரு நிகரற்ற விருந்தாக இருக்கும்.

சுட்டி: https://www.youtube.com/c/OperaVision









முன்னணி தமிழ் வெகுஜன இதழ்களுக்கு ஒப்பான வடிவமைப்பு. கட்டுரைகளின் அளவும் கன கச்சிதம்.

தன்னார்வலர்கள் குறித்த பகுதி, ஆசிரியர் பக்கம் மற்றும் வாழ்த்துப் பகுதிகளை தவிர்த்துப் பார்த்தால் பொதுத்தன்மையோடு கூடிய அழகான வெகுஜனப் பத்திரிகை. ஆக இந்த இதழ் அனைவருக்குமானதே!




முதல் இதழிலேயே சாவித்திரி பாய் பூலே பற்றிய பதிவு இடம்பெற்றமைக்கு சல்யூட்.

வசந்திதேவி அம்மா அவர்களின் நேர்காணலில் பல வரிகள் அவரது நெஞ்சம் தொட்டவை.

“நீங்கள் ஒரு பொறுப்பை ஏற்றுக்

கொள்ளும்போது அதற்கான தடைகளுக்கும் சேர்த்தே பொறுப்பேற்றுக் கொள்கிறீர்கள்!”

“போட்டி உலகம் என்னும் மாயைக்குள்ளிருந்து கல்வி மீட்கப்பட்டால்தான், வரும் தலைமுறை உருப்படும்.”

இதுபோன்ற உறைப்பான பதில்கள் முக்கியமானவை.

ரொமிலா தாப்பர் குறித்த கட்டுரை மிகவும் பிடித்திருந்தது. வரலாற்றை எப்படிப் பார்க்க வேண்டுமென ஒரு தெளிவை உண்டாக்குகிறார். இந்திய வரலாறு பற்றிய சில வரிகள் நாம் வகுப்பில் சொல்ல வேண்டிய வகையில் அழுத்தமாக மனதில் நிற்கின்றன.

பீட்டர் தபிச்சி, ஜாக் மா போன்றவர்களைப் பற்றிய தன்னம்பிக்கை கட்டுரைகள் தன்னார்வலர்களுக்கு உகந்தவை. ‘மொழி அறிவோம்’ தொடர் மெல்லக் கற்பிக்கிறது. சுமையற்றதன்மைதான் இதன் பலம்.

‘குரல்கள்’ பகுதி மிக மிக முக்கியமானது. சின்னச் சின்ன செய்திக் குறிப்புகளாக அமைந்து ஈர்க்கின்றன.

தஸ்லீமா போன்றவர்களை (உள்ளூர் தபிச்சி) மேலும் விரிவாக எழுதியிருக்கலாம் எனத் தோணுகிறது.

‘நமது வேலை’ - குட்டிக் கட்டுரை என்றாலும் மனத்தில் நிற்கிறது. இதுதான் வேண்டும்.

பல்லாங்குழி, சி.ஜி.சீதா பதில்கள், கவனம் ஈர்த்தவை என மொத்த இதழும் நமக்கு வாசிப்பு இன்பத்தை வாரி வழங்குகிறது. ஆசிரியருக்குப் பலத்த கைதட்டல்!

**சக.முத்துக்கண்ணன்**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர், சென்னை.

தொடுவானம் இதழைப் பற்றி சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை... ஆச்சரியத்தில் உறைந்துவிட்டேன். ஒவ்வொரு பக்கமும் பொக்கிஷம். நாங்கள் இதுவரை அறியாத உலகின் சிறந்த நல்லாசிரியர் பீட்டர் தபிச்சியின் கல்வித் தொண்டு, தோல்விகளையே வெற்றிப் படிக்கட்டுகளாக மாற்றிய அலிபாபா நிறுவனரின் வரலாறு,




தன்னார்வலர்களின் வெற்றிக் கதைகள் என அனைத்துமே மிக மிகச் சிறப்பு. பெண் கல்விக்காகப் போராடிய சாவித்திரி பாய் பூலேவின் கதையைப் படித்ததும் கண்களில் கண்ணீர் வழிந்தது. கல்வியாளர் வசந்தி தேவி அவர்களின் நேர்காணல் மிக மிகச் சிறப்பு. தன்னம்பிக்கையும் தைரியமும் மிகுந்த அவருடைய வார்த்தைகள் எங்களை மேலும் மேலும் உயர்த்திக்கொள்ள உறுதுணையாக இருக்கும். இல்லம் தேடிக் கல்வியின் மணிமகுடம் இந்தத் தொடுவானம்!

**ஆர்.பிரியதர்ஷினி,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர், சோத்துப்பாக்கம், செங்கல்பட்டு.




**இ**ல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் அதிகாரிகள், ஒருங்கிணைப்பாளர்களின் சிந்தனையில் உருவான தொடுவானம் இதழ் எங்களை மெய்சிலிர்க்க வைத்தது. ஆம்... தொடுவானம் நாம் தொடும்தூரம்தான்! எங்கள் வாழ்க்கைப் பாதை மாற்றத்துக்கான மின்னிதழ் இது. ஆசிரியர் தபிச்சி, சாவித்திரிபாய் பூலே, அனைவர் பற்றிய கட்டுரைகளும் சிறப்பு. மேலும் சாவித்திரிபாய் சொல்லொண்ணா ஒரு தாக்கத்தை எங்களுக்குள் ஏற்படுத்தி இருக்கிறார். சிறு சிறு எண்ணங்களை வெளிப்படுத்த தயக்கம் காட்டும் என் போன்றோருக்கு மத்தியில், சாவித்திரிபாய் போன்ற முன்னுதாரணங்களைக் காட்டி எங்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச்செல்ல நினைக்கும் தொடுவானம் மின்னிதழ் எங்களுக்குக் கிடைத்திருக்கும் தெள்ளமுது. உங்களால் எங்கள் முயற்சிகளும் தொடரும்.

**எம்.பிரியா,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர், ஏந்தல் கிராமம், அரியலூர்.



**ஏ**ன், எதற்கு, எப்படி ஆகிய கேள்விகளுக்கான புரிதலை ரொமிலா தாப்பரால் இன்று புரிந்துகொண்டேன். கல்வியாளர் வசந்தி தேவி அம்மாவின் பேட்டி எனக்குப் புத்துயிர் மற்றும் உத்வேகத்தையும் ஏற்படுத்தி உள்ளது. அது மட்டுமல்ல; தொடுவானம் மின்னிதழ் என் இல்லம் தேடிக் கல்விக் குழந்தைகளுக்கு நான் இன்னும் இன்னும் செய்யத் தூண்டுகிறது.

**முகில்வேணி சோமசுந்தரம்,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர், குமராட்சி, கடலூர்.



**தொ**டுவானம் மின்னிதழில் இடம்பெற்றுள்ள சாவித்திரி பாய் பூலேவைப் போலவே மக்கள் எங்களை எவ்வளவு சோதித்தாலும், அவமானப்படுத்தினாலும், அதையும் தாண்டி அடுத்த சாவித்திரி பாய் பூலேக்களாக உருவாவோம். ஜாக் மா அவர்கள் செய்த வேலைக்கு ஊதியம் எதுவும் எதிர்பாராமல், அதற்குப் பதிலாக ஆங்கிலம் கற்றுக்கொண்டார். அதைப் போலவே நாங்களும் ‘இல்லம் தேடிக் கல்வி’யை வழிநடத்தும் உங்களிடமிருந்தும் இணைந்து செயல்படும் ஆசிரியர் பெருமக்களிடம் இருந்தும் எங்களுக்குத் தெரியாதவற்றைக் கற்றுக்கொண்டு செயல்படுவோம். பீட்டர் தபிச்சிபோலவே கிடைக்கும் ஊதியத்தை மாணவர்களுக்கே செலவு செய்து இத்திட்டத்தை வலுவூட்டுவோம்.

**ஏ.தமிழ்செல்வி,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர், பள்ளப்பட்டி, கரூர்.




**தொ**டுவானம் மின்னிதழில், ‘ஒரு பெண் கல்வி கற்றால் அந்தச் சமூகமே கல்வி கற்கும்’ என்று கூறியிருந்தது எவ்வளவு உண்மை! மாணவர்களைக் காட்டிலும் மகிழ்ச்சி தரும் ஒருவர் இந்த உலகில் ஓர் ஆசிரியருக்கு கிடைக்க மாட்டார் என்று பீட்டர் தபிச்சி கூறியிருப்பது அற்புதம். ஒரு தபிச்சியை அல்ல; பல தபிச்சிகளை உருவாக்க இல்லம் தேடிக் கல்வித் திட்டம் வாயிலாக தமிழகத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. தொடுவானம் எல்லோரும் தொடும் தூரம்!

**சு.லாவண்யா,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர், பொன்னேரி, திருவள்ளூர்.

**தொ**டுவானத்தில் பீட்டர் தபிச்சி அவர்களின் புகைப்படத்தைப் பார்த்தவுடனே, ‘இவர் வெளிநாட்டுக்காரர் போல இருக்கிறாரே? எதற்கு நம் தொடுவானம் இதழில் வெளியீட்டிருக்கிறார்கள்?’ என்று நினைத்துப் படிக்கத் தோன்றியது.

அப்போதுதான், இவர் உலகம் போற்றும் நல்லாசிரியர் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

'கற்பித்தல் என் ரத்தத்தில் கலந்திருக்கிறது. மற்றவர்கள் மீதான பரிவு என் இதயத்தில் இருக்கிறது' என்று அவர் கூறியதைப் படிக்கும்போது இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்கள் ரத்தத்திலும் கற்பித்தலும் பரிவும் கலந்திருக்கின்றன என்பதை உணர்ந்துகொண்டோம். பார்வைக் குறைபாடு கொண்டவர்களுக்கான வாசிப்புச் சாதனம் ஒன்றைக் கண்டுபிடித்தார் என அறியும்போது மாணவர்களுக்காக நாங்கள் இன்னும் நிறைய உபகரணங்களை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படுகிறது. இல்லம் தேடிக் கல்வித் திட்டத்துக்கு மேலும் அழகு சேர்க்கும் வைரக்கிரீடமே இந்தத் தொடுவானம். மாணவர்களை வானம் தொட வைக்க தன்னார்வலர்களுக்கு உந்துதலாக இருக்கட்டும் இந்த இதழ்!

**மல்லிகா கே.பி.,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்,
திருவள்ளூர்.




**எ**த்தனை முறை
படித்தாலும்
அலுக்காத
பெருவானம் இது!
இனிமை... எளிமை...
வார்த்தைகள் ஒவ்வொன்றும் அருமை...
நாம் கற்ற கல்வியை
நிர்ப்பந்தமே இல்லாமல்
நம்மால் ஒருவருக்குக் கொடுக்க
முடியு மெனில்
உலகின் மிகச் சிறந்த மனிதர்
நாம் என்பதை
தபிச்சி மட்டுமல்ல;
நம் தன்னார்வலர்களுமே
நிரூபித்திருக்கிறார்கள்.
இதற்கு இந்தத்
தொடுவானமே சாட்சி!
அறிவுரையில் தொடங்கி
அழகழகாகக்
கதைகள் பல சொல்லி
அரும்புகளின் விரல் பிடித்து
பல்லாங்குழி ஆட வைத்து
படிப்பினைக் கற்றுத்தருவதால்
தொடுவானம் நிச்சயம் தொடும்
தூரம்தான்!

**பெ.மீனா,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்,
பட்டாபிராம், திருவள்ளூர்.




**தொ**டுவானம் மின்னிதழில் ஒவ்வொரு பக்கமும் நட்சத்திரம்போல மின்னுகிறது. மேலும் இவ்விதழில் தமிழ் அகரமுதலி இடம்பெற்றால் சிறப்பாக இருக்கும்.

**பஞ்சவர்ணம்,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்,
மதுரை.

**தொ**டுவானம் இதழ் மிகவும் சிறப்பாக உள்ளது. வீரமங்கைகள், விஞ்ஞானி பற்றிய விஷயங்கள், சிந்திக்க வைக்கும் கதைகள், புதிர்கள் போன்றவற்றையும் சேர்த்துக்கொண்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்!

**சுபா,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்,
திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர்.

**க**ற்பித்தல் பணியில் ஈடுபடுகிற ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய மின்னிதழ் இது. தன்னார்வலர்கள் மேலும் மேலும் திறமைகளை வளர்த்துக்கொள்ள அருமையான வாய்ப்பை உருவாக்கித் தரும் சிறப்பான இதழ் இது.

இந்த மின்னிதழை எங்களுக்கு அச்சு வடிவில் கிடைக்கச் செய்தால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவோம்!

**ரத்தினம் ஜெயம்,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத்
தன்னார்வலர்,
தூத்துக்குடி.



**இ**தழின் பெயரே வானத்தைத் தொட்டுவிடலாம் என்கிற நம்பிக்கையை ஊட்டுகிறது. சாவித்திரி பாய்க்கு கணவர் எப்படி அனைத்துச் சோதனைகளையும் முறியடிக்கச் செய்தாரோ, அதேபோல எனக்கும் என் கணவர் அவ்வளவு பக்கபலமாக இருக்கிறார். எனக்குக் கல்விக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் அவரே வரதட்சிணை கொடுத்து என்னைத் திருமணம் செய்துக்கொண்டார். இப்போதுகூட கைக்குழந்தையைத்தான் பார்த்துக்கொண்டு என்னை இந்தச் சேவையை செய்யச் சொல்கிறார். 'உன்னால் முடிந்த எதையும் செய்... நான் ஆதரவாக உள்ளேன்' என்கிறார். இத்தனைக்கும் என் கணவர் சாதாரண கூலித்தொழிலாளிதான்.

**பூங்கொடி பூமிநாதன் ,**

இல்லம் தேடிக் கல்வி இயக்கத்
தன்னார்வலர்,
திருத்துறைப்பூண்டி, திருவாரூர்.



**தொ**டுவானம் மூலமாகக் கல்வியாளர் பலரின் கருத்துகளைக் கேட்கும்போது நாங்கள் சரியான பாதையில்தான் செல்கிறோம் என்கிற உணர்வு ஏற்படுகிறது. இன்றைய தன்னார்வலரே நாளைய கல்வியாளர் என்பதைக் கேட்கும்போது நாங்களும் தொடுவானத்தை நெருங்கி விட்டோம் என்று பெருமிதம் அடைகிறோம்.

***ந. சிவகாமி,***

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்,
வேலூர்.




**தொ**டுவானம் இதழில் வெளியான ரொமிலா தாப்பர் கூறிய, ‘மரபுகள், மதங்கள், நம்பிக்கைகள், தத்துவங்கள், பண்பாடுகள் எல்லாவற்றிலும் வேற்றுமைகளிலும் ஒற்றுமை வேண்டும்’ என்பது மிகச் சிறப்பான கருத்து. ஒரு கை என்பதைவிட இரண்டு கைகள் சேர்ந்து தட்டினால்தான் ஓசை தோன்றும். 91 வயதிலும் வாசிப்பு, எழுத்து, ஆய்வு என்ற அவரின் செயல்கள் மேலும் எங்களைத் திறம்படச் செயல்பட வேண்டும் என்கிற எண்ணத்தை ஆழமாகப் பதிய வைத்துள்ளது.

***கிருஷ்ணவேணி,***

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்,
திண்டுக்கல்.



**நா**ன் முதலில் இல்லம் தேடி கல்வி இயக்கத் தன்னார்வலராகப் பணியை தொடங்கும்

போது இருந்த ஆர்வத்தைவிட இப்போது அதிக ஆர்வமும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. நாங்கள் செய்யும் இந்தச் சிறிய தொண்டினை நீங்கள் வெகுவாகப் பெருமைப்படுத்துவதுதான் அதற்குக் காரணம். தொடுவானம் மின்னிதழ் மிக மிக அருமை. எங்கள் பரம்பரையில் பெண் பட்டதாரி நான். என் தங்கைகள் படிக்காமல் ஏதோ ஒரு வேலை செய்து நல்ல நிலையில் உள்ளனர். அவர்கள் என்னை எப்போதும் கேலி செய்வார்கள். கல்வி அழியாச் செல்வம் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. இல்லம் தேடிக் கல்வி இயக்கம் மூலமாக என் குழந்தைகள் அனைவருக்கும் கல்வியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக்கூறினேன். எனக்கு இந்த வாய்ப்பினை இல்லம் தேடிக் கல்வி இயக்கம் மூலம் உருவாக்கிக் கொடுத்தமைக்கு மிக மிக நன்றி!

***தாரா தருண்,***

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்,
நாமக்கல்.

**12** ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப்பூ அல்ல; இந்தத் தொடுவானம். அன்பின் சாரல். எங்களின் தன்னம்பிக்கைக் கூடம். தன்னார்வலர்களின் தனித்திறமைகளை வெளிக்கொண்டுவரும் பேரருவி!

***வசந்தரா,***

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்,
நவகரை, கோயம்புத்தூர்.



**நா**ன், தொடுவானம் பகுதியில் கல்வியாளர் திருமதி. வசந்தி தேவி அம்மையார் நேர்காணலில் குறிப்பிட்ட படி ஏழைநாடான நம் நாட்டில் நிறைய செலவழித்து நிறைய குழந்தைகள் மீது அளவுக்கு அதிகமாக சுமத்தும் கல்வி முறையில் கண்டிப்பாக மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற கருத்து நல்மாற்றத்திற்காக வழி வகுக்கும்.

***த.புஷ்பா,ப.ஆ,***

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்,
குன்னூர், நீலகிரி.



**மி**கவும் அருமையாக உள்ளது ஐயா. ஆசிரியர் பீட்டர் தபிச்சி அவர்களைப் பற்றி எங்களுக்கு தெரிய வைத்துள்ள தொடுவானம் இதழின் ஆசிரியர்களுக்கு மிகவும் நன்றிங்க ஐயா. தொடுவானத்திற்கு ஒரு சல்யூட். ஐ லவ் தொடுவானம்.

***புன்னகை எழிலரசி,***

இல்லம் தேடிக் கல்வி இயக்கத் தன்னார்வலர்,
திருநெல்வேலி.

தொடுவானம் இதழினைப் படியுங்கள். படித்தபின் தங்களின் மேலான கருத்துக்களை பின் வரும் அலுவலக முகவரிக்கு அனுப்புங்கள்: **தொடுவானம்,** இல்லம் தேடிக் கல்வித் திட்டம், மாநிலத் திட்ட இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம், டிபிஐ வளாகம், சென்னை - 600 006. **மின்னஞ்சலில் அனுப்ப...** thoduvaanamitk@gmail.com



ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்வதற்கே கல்வியில் பிரதான இடம். ஒழுக்கத்தைக் கற்றலே ஆரம்பக் கல்வி. அந்த அடிப்படையின் மீது கட்டப்படும் கட்டிடமே நீடித்து நிற்கும்.

- காந்தி

புகைப்படம்: ந.வசந்தகுமார்


நான் முதல்வன்
உயரே பறக்க ஆசை
என்ன படிக்கலாம்?
எங்கே படிக்கலாம்?
இணையவழி நேரலை அமர்வுகள்
கலை, வணிகப் புலங்களில் பயிலும் +2 மாணவர்களுக்கு






# பள்ளி மேலாண்மைக் குழு

நம் பள்ளி நம் பெருமை



